
ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி

# முத்தையா அவர்களின்

## தியான மணி மண்டபமும் உருவச்சிலையும் திறப்பு விழா மலர்



85 வது ஜெயந்தி விழா, தியான மணி மண்டப சபை

25 - 05 - 2002

ஏழாலை

# SHAN

## Audio Video Photo & Communication

**Professionals for:**

**Videography, Photography,**

**Computer Graphics**

**VHS to CD Transfering**


**CD Writing**

**Audio, Video Recording**

**Videocassete, CD Lending Library**

**Connecting Calls**

**Internet Calls.**



*44, Kotahena Street, Colombo-13*

*Tel: 542987-8, Fax: 075 346871*

உ

ஏழாலை வடக்கு கிராம சேவகர் அவர்களுக்கு

உ



# ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் ஞாபகார்த்த மண்டபதிறப்புவிழா மலர்


ஆசிரியர்கள்

நா. முருகையா

ந. குருபரன்



**ஆத்ம ஜோதி**

தியான மணிமண்டப

சபையின்

வெளியீடு

ஏழாலை.

25-05-2002

# சமர்ப்பணம்



ஏழாலை ஆத்தியடி ஐங்கரனுக்கு சமர்ப்பணம்

~~Tharaniya.~~
Rathykumar

5

Puvaneswery.
Tharaniya

Tharaniya.
Puvanesvary


12,

Tharaniya.
Sharmila.

6

Female.

## ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்



**பிறந்ததிகதி**
**25-05-1918**

**இறந்ததிகதி**
**08-09-1995**

# தலைவர் முன்னுரை

ஆத்மீக வள்ளல் "ஆத்மஜோதி" நா. முத்தையனார் அவர்களுக்கு திருவுருவச்சிலை நிறுவி மணிமண்டபமும் கட்டிடமும் திறக்கும் இன் நன்னாள், ஏழாலை கிராமத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும்.

சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய பாரிய பணிகளுடன் தியானத்தையும், பிரார்த்தனையும் நெறிப்படுத்தி எமக்களித்த அமரர் ஆத்மஜோதி அவர்களுக்கும் நன்றியுணர்வை வெளிப்படுத்த கடமைப்பட்டுள்ளோம்.

முதற்கண் திரு.நா. முருகையா அவர்களுக்கு எமது தியான மணிமண்டப சபை சார்பாகவும், ஏழாலையூர் மக்கள் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மு. பாலசுப்பிரமணியம்**

**தியான மணிமண்டப தலைவர்**

***இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்!***



Phone ASHRAMA : 588253
CULTURAL CENTRE :

RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
40, Ramakrishna Road,
Wellawatta,
Colombo - 06.
26.08.1997

# வாழ்த்துச் செய்தி

அமரர் **ஆத்மஜோதி** நா. முத்தையா அவர்களின் நினைவாக, அவரது பிறப்பிடமாகிய ஏழாலையில், அவர் வழிபட்டு வந்த ஞானவைரவர் ஆலய சூழலில் அமைக்கப்பட்டுள்ள பிரார்த்தனை மணி மண்டபம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட உள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

தனது வாழ்நாள் முழுவதையும் சமயப் பணிக்காக அர்ப்பணித்து வாழ்ந்தவர் திரு முத்தையா அவர்கள். சமய அறிவு, சமயப் பண்பாடு இரண்டிலும் வேரூன்றியிருந்த அவர், அவர் காலத்தில் இலங்கையிலும், இந்தியாவிலும் வாழ்ந்திருந்த ஞானியர்களை நாடி அவர்களது அருளுக்குப் பாத்திரமாகி, தனது வாழ்க்கையை வளம்படுத்திக் கொண்ட பெருமையை உடையவர். **ஆத்மஜோதி** என்ற பத்திரிகை வாயிலாக சமய உண்மைகளை மக்களிடையே பரப்பி வந்தவர். அவ்வாறே பல இடங்களுக்குச் சென்று சமய சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்களை சமய நெறியில் நிலை நிற்க உதவியவர்.

அவரது வாழ்க்கையும், பணியும் உண்மையில் மிகவும் போற்றத்தக்கன. இன்றைய சமூகம் இவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது, என்பதில் ஐயமில்லை. அவரது பெருமை என்றென்றும் இப்புவியில் நிலைபெற இந்த மணி மண்டபம் வழிவகுக்கும்

இம் மண்டபத்தை நிறுவிய அன்பர்களது சிந்தனையும், உணர்வும் மிகவும் பாராட்டத்தக்கன

**ஆத்மஜோதி** முத்தையா அவர்கள் காட்டிய வழியில் சென்று, ஆன்ம ஈடேற்றம் பெற விரும்பும் அன்பர்களுக்கு இறைவன் திருவருள் துணை நிற்கப் பிரார்த்திக்கிறோம்.

**சுவாமி ஆத்மகனானந்தா.**

உ

*ஸ்ரீ சந்த்ரமௌளீச் வராயகம*

*ஸ்ரீ சங்கரபகவத் பாதா சார்ய பரம்பராகன*

*ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி*

ஜகத்குரு ஸ்ரீ சங்க ராச்சாரிய சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ மடம் நம்ஸ்தானம்

*சாலை தெரு*
*காஞ்சிபுரம் - 631502*

*யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை ஸ்தாபகர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி மண்டபமும், அவருடைய உருவச்சிலையும் நிச்ச திறப்பு விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அவரின் பெயரால் ஆத்மீக பணி தொடர்ந்து நடைபெற மணி மண்டப அமைப்பாளர்களை வாழ்த்துகிறேன்.*

நாராயண ஸ்ம்ருதி

அருளாசிச் செய்தி

# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

*அன்பு நெஞ்சத்தீர்:-*

திரு. ஆத்மஜோதி முத்தையா அவர்களின் ஞாபகார்த்தமாக கட்டிடம் கட்டி திறப்பு விழா செய்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். தானும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வழியமைத்த பெருமைக்குரியவர். இவருடைய பணிகள் எல்லோரையும் சிந்திக்க வைத்தது பெருமைக்குரியது. கற்றவர்களையும், கற்றபடி ஒழுகுகின்ற ஆசார சீரர்களையும் தோற்றுவித்த ஏழாலை பதி திரு. முத்தையா அவர்களை தோற்று வித்ததன் மூலம் பெருமையடைகின்றது. இலங்கை பூராகவும், வெளிநாடுகளிலும் பணிகள் ஆற்றிய திரு. முத்தையா அவர்களை நினைவூட்டும் வகையில் தியான மண்டபம் அமைத்தது பெருமைக்குரியது. மன அமைதி இல்லாமல் சஞ்சலப்பட்டு இருக்கும் மக்களுக்கு இம்மண்டபத்தினுடைய பணி மிகவும் வேண்டற்பாலது. இதனை நல்ல முறையில் பயன்படுத்தி ஒவ்வொரு மனிதர்களையும் மனித நேயத்துடன் வாழ வழிசமைத்தது சாலப் பொருத்தமானது. இந்நினைவு தியான மண்டபத்தை அமைத்த அனைவரையும் வாழ்த்துகின்றோம். திரு ஆத்ம ஜோதி முத்தையா அவர்களின் நினைவு இம்மண்ணில் நிலைத்து நிற்க இறைவனை பிரார்த்திப்போமாக.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*



**இந்துசமய, கலாச்சார அலுவல்கள்**
**திணைக்களம்**

# *வாழ்த்துச் செய்தி*

அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் நினைவாக **ஆத்மஜோதி** தியான மணிமண்டபம் எனும் பெயரில் ஏழாலையில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்படுவதையறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அமரர் முத்தையா அவர்கள், இலங்கை வாழ் இந்துத் தமிழ் மக்களால் மட்டுமன்றி தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றில் வாழும் இந்துக்களாலும் நன்கறியப்பட்ட சமயப் பேரறிஞராவார்.

அமரர் அவர்கள், மலையகத்தின் நாவலப்பிட்டி எனும் நகரிலே வாழ்ந்த காலப் பகுதியில், ஆற்றிய ஆன்மீகப்பணிகள் அனைவரும் அறிந்த விடயங்களாகும். ஆத்மஜோதி எனும் ஆன்மீக இதழை வெளியிட்டமை, பல சமயப்பிரசாரங்களை அச்சிட்டு வெளியிட்டமை, இந்தியாவிலிருந்து பல கலைஞர், துறவியர்களை இலங்கைக்கு அழைத்து வந்து நாட்டின் பல பாகங்களிலும் சொற்பொழிவாற்றச் செய்தமை, என அவரது செயற்பாடுகள் பலவிதங்களில் அமைந்தன.

தனது சொற்பொழிவுகளினாலும், செயற்பாடுகளினாலும், தூயதொண்டராகவே வாழ்ந்தவர் அவர். பல்லாயிரக்கணக்கான மக்கள் நினைந்து போற்றுமளவு தனது பணிகளைச் செயற்படுத்தியவர்.

அவரது நினைவாக அமையவுள்ள தியான மணி மண்டபம் சிறந்ததொரு ஆன்மீக நிலையமாக விளங்கவேண்டும் என வாழ்த்துகின்றேன். இப்பணியில் முன்னின்று உழைக்கின்ற பெரியோர்கள் அனைவருக்கும் இறைவனின் நல்லருள் கிட்டவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

***சாந்தி நாவுக்கரசன்***
***பணிப்பாளர்***

உ

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**
**நாகேஸ்வரம் அளவெட்டி**



# *தெய்வ சபையாக வாழி வாழி*

அன்புருவன், அருளுடையோன், சிவப்பேறுற்ற
ஆத்மஜோதி முத்தையா என்னும் வள்ளல்,
முன்பரவிச் சைவமக்கள் தோத்தரிக்கும்
முனிவனெனப் பாராட்டும் அன்னார் பேரில்
பொன்பொலியும் ஏழாலைப் புனித ஊரில்
பொலிந்தோங்கும் தியானமணி மண்டபத்தை
இன்பமிக அமைத்த தவச் சீலர் வாழி
இறையொழியைத் தருமண்ட பச்சீா் வாழி

வளர்தியான மணி மண்ட பத்தார் நல்கும்
மலர், உலகம் எங்கும் சிவ மலராய்ப்பூத்துத்
தளர்விலா துயிரெலாம் சாந்தி கண்டு
சமாதான நீதிநெறி ஓங்கி வாழி
அளவரிய ஆத்மஜோதி தமக்குங் கண்டு
அறிவாலே அறிகின்ற செம்மை வாழி
உளமகிழும் தியான மண்டபத்தின் சேவை
உணர்தெய்வ சபையாக வாழி வாழி

*அன்பான*
*கவியோகி*
*அருட்கவி. சி. விநாசித்தம்பி*

சிவமயம்

கயிலாய நாதன் துணை

# ஆசிச் செய்தி

எமது இந்து சமயப் பேரவை ஸ்தாபக தலைவர் ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்கட்கு தியான மணி மண்டபமும், அவருடைய ஞாபகார்த்தச் சிலையும், ஏழாலையில் அமையப்பெற்றது அதை முன்னின்று உருவாக்கி, அதை சரியான முறையில் அமைத்து அதற்காக தன்னுடைய சிரமங்களையும் பாராது 4-06-2001 தீர்மானித்த படி கட்டி முடித்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். ஆத்மஜோதியின் மருமகன், அன்பர், நாகலிங்கம் முருகையா அவர்கள் செய்த தொண்டு, சைவ சமயத்திற்கும் தமிழுக்கும் செய்த தொண்டு என்பதை யாவரும் மறக்க முடியாது போற்றத்தக்கது.

**திரு சிவ. சண்முக வடிவேல்**

**ஏழாலை மேற்கு**



உ
சிவமயம்

# வாழ்த்து

ஆத்மஜோதி முத்தையா ஆகும்கால் ஆதங்கம்

பூத்துமேவி முத்திக்குப் பார்மீது - ஆத்துமன்

அத்துவித மாகும் அருமந்த மார்க்கம்

அத்தனையும் ஆகும் (முருகு) அழகு

முருகையா தன்னாத்ம மூச்சாக மாமன்

திருவருளால் செய்யும் திறனை - உருகிமனம்

ஒவ்வ ஒருப்படும் ஓருலக ஒன்றியம்

இவ்வுலகை ஈட்டும் இலங்கி

இலங்கையில் இத்தகைய உற்பவத்தின் ஈர்ப்பு

துலங்கிட ஆசிகள் தோன்றும் - நலம்பொலி

ஈசன் பணியாக இவராற்ற நாமேற்க

பூசனை செய்வோம் புகழ்ந்து.

***தங்கமயில்***
***நெல்லியடி.***

உ
சிமயம்

இந்துசமய ஸ்தாபக தலைர்
ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி

# வாழ்த்துரை

நா. முத்தையா அவர்களில் 85 வது ஜெயந்தி விழாவும்,

அவர்களின் தியான மணி மண்டபமும்,

உருவச்சிலையும் திறப்பு விழா நடைபெறுவதையிட்டு,

ஏழாலை மக்களும் நானும் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இதை அன்பர் சிவதொண்டன் நா. முருகையா அவர்கள்

தனியாக நின்று நிதி சேகரித்து இதை ஒருவருடத்துக்குள்

கட்டி முடித்து விட்டார், அவரின் தொண்டு,

ஆத்மஜோதியின் பாரம் பெரிய தொண்டு என்பதையும்

அறியத்தருகிறோம்.

**ஓம் சாந்தி. ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**திரு. தருமலிங்கம் J. P**
**தலைவர்.**
**ஸ்ரீ பாதாள ஞானவைரவர் தேவஸ்தானம்.**
**இலந்தை கட்டி ஏழாலை**

**இந்து சமயப் பேரவை**

**INTHU SAMAYA PERAVAI**

(THE HINDU CONGRESS)

JAFFNA.

Head Office: No.375, Temple Road, Nallur, Jaffna.

Temporary Address, Kaithady Saiva Children's Home, Erlalai West, Erlalai

6-5-2002

*இந்து சமயப் பேரவைப் கௌரவ செயலாளர் வழங்கிய*

## *வாழ்த்துரை*

ஈழத்தின் தலை சிறந்த ஆத்மீக வாதியும், ஆத்மஜோதி ஆசிரியரும், இந்து சமயப் பேரவை ஆரம்பகாலத் தலைவருமான அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் ஞாபகார்த்தமாக ஏழாலை இலந்தை கட்டி, பாதாள வைரவர் ஆலய வளாகத்தில் ஆத்மஜோதிமணிமண்டபமும், அன்னாருக்கு திருவுருவச்சிலையும் அமைக்கப் பெறுவதையிட்டு பெறுமகிழ்ச்சி அடைகின்றோம்.

சைவ மக்களின் நலனில் அபரிதமான அக்கறை கொண்டு அதற்காகத் தன்னையே முழுமையாகக் கரைத்த பெருமகன் இவர். இவர் இந்து சமயப் பேரவையை வளர்ப்பதற்கும் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தைக் காப்பாற்றுவதற்கும் பல வழிகளில் உதவியுள்ளார். தனது இறுதி மூச்சுவரை இதற்காகவே செயற்பட்டு அமரத்துவம் அடைந்தமை அனைவரும் அறிந்தது. அத்தகைய பெருமகனுக்கு எத்தனை மணி மண்டபம் அமைத்தாலும் தகும். அவர் தொண்டுக்கு நிகராக யான் எவரையும் கண்டதில்லை.

இத்தகைய பெருமானின் அருள் தொண்டுகளை ஞாபகப்படுத்தும் வகையில் ஆத்மஜோதி, மணிமண்டபச் சபையினர் மேற்கொண்டுவரும் அருள் தொண்டுகளை வாயார வாழ்த்துகிறேன். சிறப்பாக ஆத்மஜோதியின் அன்பு மருமகனும், மணி மண்டபச் சபையின் பொருளாளருமான அன்பர் நா. முத்தையா அவர்கள், மணி மண்டபத்தை அமைக்க அல்லும் பகலும் உழைத்து வருவதைக் கண்டு பெருமையடைகின்றோம். இன்னும் இத்தொண்டில் ஈடுபடும் அவரையும் வாழ்த்துகிறோம்.

ஆத்மஜோதியின் தொண்டுள்ளமும் அவர் பணியும் நின்று நிலைக்க அமைக்கப் பெற்றுள்ள மணிமண்டபம் மூலம் சிறந்த பணிகளைப்புரிய, எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாம சுந்தர் சமேத சிதம்பர நடராஜப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

**திரு.சி. சக்திகிரீவன்**

**பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)**
அவர்களின்

# வாழ்த்துரை

*ஆத்மஜோதி முத்தையா*
*ஞாபகார்த்த மணி மண்டபம்*

20 ஆம் நூற்றாண்டில் எமது நாட்டில் வாழ்ந்த ஆத்மீகச் செல்வந்தர்களில் ஒருவர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள். அவர் ஆத்மீகக் கல்வியின் தலை சிறந்த குருவாக இருந்தார்.

அவரது ஞாபக அலைகள் 21 ஆம் நூற்றாண்டிலே பரவி மக்களிடையே சுவற வேண்டும். அவரது நாமம் கொண்ட ஒரு மணி மண்டபம் காலத்தின், நாட்டின், சந்ததியினரின் தேவை ஆகும்.

அந்த மணிமண்டபம் தன்னகத்தே ஆன்மீக நூல்கள் கொண்ட நூலகத்தைக் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டிலும் எமது நாட்டிலும் பிரசுரமாகும் சகல ஆன்மீக நூல்களும், சஞ்சிகைகளும் நூலகம் பெறுவதற்கு வசதி செய்ய வேண்டும்.

வணங்குவதற்கும், தியானத்திற்கும் ஒரு அமைதியான இடம் இருப்பதும் அவசியமாகும். நாவலப்பிட்டியில் அவர் வாழ்ந்த ஆத்மஜோதி நிலையத்தைத் தரிசித்தவர்கள் அங்கே தெய்வீகப் படங்கள், நூல்கள், வாசனைப் பொருட்கள் தந்த தெய்வீக அலைகளை அனுபவித்திருப்பார்கள். அத்தகைய இன்ப அனுபவம் இந்த ஞாபக மண்டபத்திலும் கிடைக்க வேண்டும்.

*மனிதனின் உடல் உருவத்தை சிலை அமைத்துக் காட்டலாம். ஆனால் அழியாத ஆத்மாவை உணர்வதற்கு ஒரு அமைதியான இடம் வேண்டும்.*

*பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்*
*(நந்தி)*

சைவப்புலவர் - குப்பிழான். ஏ. அனுசாந்தன் B.A (Hons)

அவர்களின்

## பிரார்த்தனைச் செய்தி

செந்தமிழ்த் தந்தைக்கும் சைவ மங்கைக்கும் பிறந்த அறிவறிந்த பிள்ளைகள் நான்கு பேர். இவர்கள் யாவரெனில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசரர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகியோராவர். இவர்களையே குருமாராகக் கொண்டது சைவசமூகம்.

அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்தைக் கொடுக்கும் பேருபகாரிகள் 'குரு' எனப்படுவர். இவர்கள் 'ஒருவன் என்னும் ஒருவன்' ஆகிய சிவனருளுக்கு ஆட்பட்டு நின்றொழுகுபவர்கள். உள்ளதை உள்ளபடியே கண்டவர்கள்.

சிவபிரானாலே "வண்ணந்தானது காட்டி வடிவுகாட்டி மீட்டேயும் பிறவாமல் காத்தாட்கொள்ளப்" பெற்றவர்கள்.

தாங்கண்டமுறையே இம்மியளவும் பிசகாது அவனருளுந்த அழகுதமிழிற் பாடியருளியவர்கள்.

"அவனருளே கண்ணாகக் கொண்டு" கண்டு , அதனை யாமுங்ட கண்டுய்யவேணுமெனும் பெருவிருப்பினாலே 'கண்டு காட்டும்' இன்னருட் பாக்களைப் பதிகம் பதிகமாகப் பாடிக் குவித்தவர்கள்.

'மனிதர்கள் இங்கே வம்மின்' என்று யாவரையுங் கூவியழைத்து சாதி, சமய பேதமில்லாமல் யாவருக்கும் இறையாசிச் செய்தியை அறிவித்துத் திரிந்தவர்கள்.

'யாம் பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம்' என்ற திருமந்திர வாசகம் அடியார்களின் நெஞ்சத்திரையை விட்டகலாதிருந்தது.

நாயன்மார்கள் வாழ்ந்த காலத்துத் தமிழகத்திலே வாழ்ந்த சமணரும், பௌத்தரும் உலகியலை வெறுத்தொதுக்கி, துறவு வாழ்க்கையையே போதித்துவந்த காலத்திலே சம்பந்தப் பிள்ளையார்,

*"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்......*

*..... பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"*

என்பாடி இறையருளை முன்னிட்டு வாழ்ந்தால் இல்லறமும் மேலானதே என்று நம்பிக்கையூட்டினார்.

உயர்சாதி, இழிசாதி என்று பற்பலசாதி பேதங்கள் தோன்றி சைவ சமூகத்தில் வேற்றுமைகளைப் பெருக்கித் துன்பத்தை வளர்த்து வந்தமை கண்டு கொதித்தெழுந்த அப்பரடிகள்;

*'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்*

*கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்*

*அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'* என்றருளிச் -

செய்து புரட்சி செய்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இதே வழிச் சென்று தில்லைவாழ் அந்தணர், திரு நீலகண்டத்துக்குயவர். வேடுவராய கண்ணப்பர், வண்ணாராய திருக்குறிப்புத் தொண்டர், புலையராய நந்தனார் என்றின்வாறு பற்பல குலத்தவர்களாய அடியவர்களுக்கு தாம் அடிமை யெனக் கூறி திருத்தொண்டத்தொகையைப் பாடியருளினார்.

ஆன்மாக்களின் வினைப்போகத்தைக் கூட்டிவைப்பதற்கு ஒருவன் வேண்டிய தில்லை. பசுத்தொழுவத்திலுள்ள பசுக்கன்று தன் தாய்ப் பசுவைக் கண்டறிந்து பாலைப் பருகுவது போன்று ஆன்மா வினையைத் தானே கூடும் எனவும், பஞ்சகந்தங்கள் கூடிக் கெடுவதே முத்தி எனவும் இறைவன் தன்மையையும், இறையருளுபகாரத்தையும் மறுத்துவந்த பௌத்தர்களோடு வாதம் பல புரிந்து சைவ ஞானவுண்மைகளை விளக்கியவர் மணிவாசக சுவாமிகள்.

இவர்களையே குருவாகக் கொண்டு இவர்களின் வழியொழுகி வந்த ஆத்மஜோதி ஐயா அவர்களின் பெயரிலே மணிமண்டப மொன்று எழுச்சி பெற்றமை அனைவரதும் மனம் முகிழ்ந்த சுருள் நீக்கி அருள் பெருக்கும் இம்மண்டபம் சமூகத்திலுள்ள பிள்ளைளின் சைவஞானவிருத்திக்கும், தொண்டுள்ளப்பாங்கு விருத்திக்கும், தியானப்பழக்கத்துக்கும், தியாக மனப்பாங்கு மலர்ச்சிக்கும் நிலைக்களனாக நின்று நிலவ ஞானமாநடராஜனை இறைஞ்சுகின்றோம்.

**சிவசிவ**

**ஏ. அனுசாந்தன**
**குப்பிழான்.**

*அன்பே சிவம் அறிவே துணை*
*வாழ்க குரு சுவாமிஜி நா. முத்தையா*
*வாழ்க வாழ்க அவர் திரு நாமம்.*

பேரன்புடையீர் வணக்கம்

அருமை சுவாமிஜி நா. முத்தையா அவர்கள் 1978 ஆண்டு மேடான் நகருக்கு வருகை தந்தார்கள். அவர்கள் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் பிரார்த்தனை நடத்தினார்கள். அந்த பிரார்த்த னையில் நூற்றுக்கணக்கான மக்கள் கூடினார்கள். அவர்கள் செய்த பிரார்த்தனையும் சொற் பொழிவும் மக்கள் மனத்தை கவர்ந்தது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு ஆலயத்தில் பிரார்த்த னையும் சொற்பொழிவும் நடந்தது மக்கள் கூட்டம் அதிகரித்தது. மட்டில்லாத மகிழ்ச்சியில் ஆனந்தத்தில் மூழ்கினார்கள்.

ஞானவள்ளல் நா. முத்தையா மேடான் நகருக்கு வருகை தந்ததினால் ஆத்ம சாம்ராஜ் யத்தை அடைந்து விட்டதாக பிரேமையும் கொண்டார்கள். அவர் கற்றுக் கொடுத்த பிரார்த்தனை வீட்டுப் பிரார்த்தனை இயன்றளவும் மிக சிறப்பாக இந்தோனேசியாவில் நடந்து கொண்டிருக்கின்றன.

சுவாமிஜி ஞானவள்ளல் ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா அவர்கள் பலருக்கும் உபதேசமும், ஞான தீச்சையும் தந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் சும்மா இல்லாமல் சுறு சுறுப்புடன் பலருக்கும் பலவிதமான உபதேசங்கள் தருவதுடன், தமிழைபடிக்கும்படியும் மிகவும் உற்சாகமும் ஆர்வமும் தந்தார்கள். பலமுறை சுவாமிஜி மேடான் நகருக்கு வருகை தந்தார்கள்.

அன்புத் தலைவர் வள்ளல் மகா பண்டிதர் இந்தோனேசிய தமிழர் தந்தை ஸ்ரீ. சி. மாரிமுத்து அன்னவர்கள் சுவாமிஜியுடன் மிகவும் நெருங்கி பழகினார்கள். அவர் பிஜியும் அன்னவர்கள் மேல் அலவில்லாத அன்புடையவர்களாக இருந்தார்கள். இவருக்கும் ஒற்றுமையான உள்ளங்கள் கருத்து ஒற்றுமையதிகம்.

ஞான வள்ளல் சுவாமிஜி நா. முத்தையா அவர்கள் அன்புத் தலைவர் ஆற்றிய அரும் பெரும் சாதனைகளைக் கண்டு பார்த்து அளவில்லாத மகிழ்ச்சிக்கொண்டு அன்னவர்களுக்கு தலைவர், வள்ளல், மகா பண்டிதர், இந்தோனேசிய தமிழர் தந்தை,யென்று பட்டமும் தந்தார்கள். தலைவர் சி. மாரிமுத்துவுக்கு ஆத்மஜோதி ஞான வள்ளல் அவர்களுட்கு தியான மணிமண்டபம் அமைக்கும் சிவதொண்டன் நா.முருகையா திரு நா. குணரத்தினம் அவர்களையும் பாராட்டுகிறோம்.

# திருவாளர் ஆத்மஜோதி

## முத்தையாவின் சைவத்திருப்பணி

வன்னியூர் கதிர்காமர் நடராசா
ஸ்ரீ சிவசுப்பிரமணிய தொண்டா சூரிச்

கல்வி செல்வம் வீரத்திலும், இயல் இசை நாடகத்திலும் தன்னிகரற்று விளங்கி தனிப்பெரும், தகைமைகொண்ட தமிழர் வாழ் தலையகமாம் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏந்திய கொள்கையில் வாழ் ஏழாலை ஆதவன் உதயத்திசையில் இன் சொல்லாள் ஈத்தனிக்கும் இலந்தைக் கட்டி எழில் பொங்க விளங்கிற்று. நாநலமுடை செயற்திறன் கொள் நாகமணி எனும் நாமத்தால் பொறியறிந்து அறிவறிந்து வாழ் பூவை பொன்னுப் பிள்ளையின் பதியாகி திருவிளக்கிட்டு தெய்வம் தொழுது இல்லறத்தில் ஈடுபட்ட அன்னவர்க்கு ஒன்றொன் பான் ஈரொன் பானாண்டு ஐந்தாம் திங்கள் ஐந்தாம் தினத்தன்று (25-05-1918) முத்துக்குள் முத்தாக மூதறிஞர் முத்தையனார் வந்தவதரித்தார். மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொள் என்னும் சொல் என்றகுறளுக்கமைய திருவாளர் முத்தையனார் சிறு பராயத்திலேயே, கல்வி கேள்வி ஒழுக்கங்களில் சிறப்புற்று விளங்கி தெய்வத்திருவருளால் "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற குறளுக்கமைய தமது ஈபத்தாம் ஆண்டுப் பராயத்தில் பள்ளிப்பாலகர்க்குக் குருவானார். மேன்மை கொள் சைவநெறியை உலக நாட்டின் வாழ் சைவமக்களுக்கு விளங்க வைக்கவும் சைவசமயத்தைக் கட்டிக்காக்குமுகமாகவும், சிந்தனை செய்து அதை வெளிப்படுத்த ஆத்ம ஜோதி பத்திரிகை ஆசிரியராகவும் கடமையாற்றினார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" கடமை என்பதை உணர்ந்த மூதறிஞர் முத்தையனார் உலகின் மனிதன்! மனித உடலை மட்டும் எடுத்தாற் போதாது. மனிதத்தன்மையுடனும், மனிதாபிமானத்துடனும் சைவநெறி யுட னும் ஒழுக்கத்துடனும் முழு மனிதனாக வாழவேண்டும் என்பதற்காக அவர் பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுட் பெரும் பாலானவை சமய நூல்கள். சில இளைய சந்ததியினருக்கும், மாணவர்களுக்கும் உரிய நல்வழிக் கதைகளாகும்.

இவற்றுள் பொதிந்திருக்கும் சொற்சுவை பொருட்சுவைகளை சுற்றுணர்ந்தோர் பலர் இவ்வரிய நூள்களை - சிவாமிர்தம எனக் குறிப்பிட்டு திருவாளர் மூதறிஞர் முத்தையனார் அவர்களுக்குப் பெரும் பாராட்டுக்கள் தெரிவித்து பல வழிகளாலும் கௌரவித்துளார்கள். அது மட்டுமல்லாமல் இவர் ஈழத்திருநாட்டின் பல இடங்களுக்கும் உலக நாடுகளின் தமிழர் கள் எங்கு வாழ்ந்தாலும் அங்கெல்லாம் சென்று சைவசமயத்தை வளர்ப்பதற்காகவும், சைவ நெறியின் நின்று மக்கள் ஒழுகுவதற்காகவும் "அந்தர்யோகம்" முறையை அதாவது "நம் உடலுக்குள்ளேயே இறைவனைத் தேடுதல்" என்ற செயற்பாட்டைப் பற்றி விளக்கங் கள் கொடுத்தும், செய்து காட்டியும் வந்தார். அந்தர் யோக நேரங்களில் அவரால் "சைவர்களுக்கு" சிவநேயச் செல்வர்களுக்குக் கிடைக்கும் பயன்கள் சில பின்வருவன.

1. தெய்வப் பிரார்த்தனை
2. நாம ஜெபம்
3. இன்ட மூர்த்தி உபாசனை
4. நாடி சுத்தி
5. தியானம்
6. அந்தர் யோக விளக்கம்
7. சந்தேகம் தெளிதல். என்பவையாகும். இவற்றை இந்துக்கள் நாளாந்தம் பயிற்சி பெற்று வருவார்களாயின், தெய்வத்தின் அருட் காடாட்ஷத்துக்கு உள்ளாவார்கள் என்பதின் எவ்வித ஐயமுமில்லை.

மேலும் ஆத்மஜோதி மூதறிஞர் முத்தையா அவர்கள் ஏறத்தாழ (40) நாற்பதாண்டுகள் பாடசாலை ஆசிரியராகவும், ஆத்மஜோதி பத்திரிகையாசிரியராகவும், கடமை புரிந்து ஓய்வு பெற்ற பின்பும் கூட ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று சைவசமயநெறிகளை நெறிப்படுத்தி வந்தார்.

# ஆத்மஜோதியின்........
# ஆத்மீகப்பணி ...!

இந்து மதத்தின் வளர்ச்சிக்கு காலத்திற்கு காலம் பல பெரியார்கள் தோன்றிதமது பங்களிப்பைச் செய்து வந்துள்ளனர். அவதார புருஷர்கள், சமயகுரவர்கள், சந்தானகுரவர்கள், சமயப் பெரியார்கள், துறவிகள் இப்படிப்பலர். இந்த வரிசையிலேயே ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களும் ஒருவர். 1918 இல் பிறந்த ஆத்மஜோதி அவர்கள் தனது பொன்விழா வயதையும் தாண்டி தமிழுக்கும், சைவத்திற்கும் பெரும் தொண்டாற்றி வந்தது எமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

இலங்கையின் அந்நியர் ஆட்சிக் காலத்தில் இந்துமதம் பல சோதனைகளை எதிர்நோக்கியது. ஆலயங்கள் அழிக்கப்பட்டன. மதமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. மதத்தின் அடிப்படையில் கல்வி, தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இந்தச் சூழ் நிலையில் தான் ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர் போன்றவர்கள் தோன்றி சைவத்திற்கும் தமிழுக்கும் பெரும் பணியாற்றினர். சுவாமி விபுலானந்தர் இராமக்கிருஷ்ண மிஷனை ஈழத்தில் அறிமுகம் செய்துவைத்தார்.

இன்றைய கால கட்டம் அந்நியர் ஆட்சிக்காலத்தையும் விடவும் மிகவும் கொடூரம் நிறைந்த கலியுகமாகும். இன்று சைவமும், தமிழும் மிகப் பெரிய அழிவை மற்றொரு சக்தியினால் சந்தித்துக் கொண்டு இருக்கின்றன. ஈழத்தில் ஆலயங்கள் அழிக்கப்பட்டும், மதக்கடமைகள் தடுக்கப்பட்டும், சடங்குகள், விழாக்கள் செய்வதற்கான உரிமைகள் மறுக்கபப்ட்டும் காணப்படுகின்றன. இந்த ஊரடங்கு வாழ்க்கைக்கு மத்தியிலும் தனது பணியில் தளராது ஈடுபட்டுவந்தவர் ஆத்மஜோதி அவர்கள். குடும்பவழிபாடு வீட்டு வழிபாடு, கூட்டுவழிபாடு, ஆலயவழிபாடு என்பவற்றை காலத்தேவைக்கேற்ப அறிமுகம் புதிய அணுகுமுறையை வழிபாட்டில் புகுத்தியுள்ளார் ஆத்மஜோதி.

வெறுமனே மதரீதியாக மாத்திரமன்றி, மொழி ரீதியாகவும், மனிதாபிமான ரீதியாகவும் கூட அவர் தனது பணிகளை விரிவுபடுத்தியுள்ளார். இந்தோனேசியாவில் அவரால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள தமிழ்ப்பள்ளியும், ஈழத்தில் கைதடியில் பராமரிக்கப்பட்டுவரும் அனாதைச் சிறுவர் இல்லமும் இதற்கு நல்ல எடுத்துக் காட்டுகளாகும். காவியுடைய தரித்த பலர் ஊருக்கு உபதேசம் செய்து கொண்டு தாம் அவறறிற்கு மாறாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இன்று மதத்தின் பெயரால் காவியுடையை வெறுத்து மக்களுக்கு சேவை செய்தார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

"காவியுடை" பற்றிய சர்ச்சை ஒன்றில் ஆத்ம ஜோதியின் கருத்து இது. காவியுடைய அணிந்தால் மக்கள் தங்களிலும் உயர்ந்த சுவாமி என எண்ணுவார்கள். அத்தகைய எண்ணம் மக்களிடமிருந்து என்னைப் பிரித்துவிடும். மக்களுடன் சேர்ந்து மக்களுக்கு சேவை செய்ய

முடியாது. காவியுடை தரித்த சந்நியாசி, மக்கள் வீடுகளில் தங்கலாகாது. மக்களுடன் உறவாடி மக்களுக்கு சேவை செய்வதையேமகத்தான சேவையாக, மகேஸ்வரன் சேவையாக யான் கருதுவதால் காவியுடைகளை அணிவதில்லை.

யோகர் சுவாமிகள், இராமக்கிருஷ்ண பரமஹம்சர் ஆகியோர் காவியுடைகளை அணியவில்லை. உண்மையான அணி உயர்வான பணியாகும்.

அந்நியர் ஆட்சிக்காலம், ஈழத்தின் இன்றைய சூழ்நிலை என்பவற்றிக்கும் மேலாக உலகெங்கிலும் பரந்து வாழும் ஈழத்தமிழ் அகதிகள் மொழி, மத, கலாச்சார ரீதியாக பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலையில் புகலிட வாழ்வியலில் உருவாகப்போகும் புதிய தமிழ் சந்ததியொன்று, தமது கலாச்சார விழுமியங்களில் இருந்து தடம்புரண்டு போவதைத் தடுப்பதற்கான பொறுப்பு புகலிடம் வாழ் தமிழ் மக்களுக்கு உரியதாகும். எம்மோடு சேர்ந்து இந்தப் பணியில் தன்னை அர்ப்பணிக்க முன்வந்தவர் ஆத்ம ஜோதி அவர்கள். அவரது வெளி நாட்டு விஜயங்கள், அவரது வேண்டுகோள்கள் எமக்கு இதையே தெளிவாக்குகின்றன.

புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் மத்தியில் ஆத்மஜோதியவர்கள் குறிப்பிட்ட பெறுமதி மிக்க கருத்துகளில் இதுவும் ஒன்று. வீட்டில் தமிழில் பேசுங்கள், தமிழரைக் கண்டால் தமிழில் பேசுங்கள். இப்படிப்பழகினால் தமிழ் தானே வளரும். உங்கள் குழந்தைகளை ஊமைத் தமிழன். தமிழனாகப் பிறந்து தமிழ் வார்த்தைகளைக் கேட்டு விளங்கிக் கொள்ள முடியாதவன் செவிட்டுத் தமிழன். எங்கள் குழந்தைகளுக்கு தமிழ் தெரியாது. தமிழால் என்ன பிரயோசனம் உதைவிட டொச், பிரேஞ்சு, இங்கிலிஷ் தான் நல்லது. என்று சொந்தக் குழந்தைகளையே ஊமைத்தமிழராகவும், செவிட்டுத்தமிழராகவும் ஆக்காதீர்கள், தமிழனாகப்பிறந்து தமிழிலே பேச முடியாதவன் ஊமையாகவும், செவிடாகவுமாக்கும் எங்கள் பெற்றோர்க்கு இது சமர்ப்பணம்.

நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க நல்லார் சொற் கேட்பதும் நன்றே. நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே. அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே.

**-ஔவையார்-**

# மண்ணின் மைந்தன்

(பவதாரணி)

பூமாதேவி தன் பொற்கரத்தை விரித்து வைத்திருக்கின்றாள். அக்கரத்திலே சகல வளங்களையும் படைத்து, சகல சீவராசிகளையும் வாழ விட்டிருக்கிறாள். அவ்வளங்களைப் பாழடிப்போர், அவ்வளங்களுக்கு ஏதும் அழிவு ஏற்படுத்தாதோர், அவ்வளங்களைப் பெற்றதன் பயனை உணர்ந்து அதை யாவரும் அனுபவித்து பிறருக்காக அவ்வளங்களைப் பேணிப் பாதுகாத்துச் செல்வோர் எனப் பல வகையினர் உண்டு. அவர்களுக்குள் ஆத்ம ஜோதி எவ்வகையினரைச் சார்ந்தவர் என்பதை அறிவதே இக்கட்டுரையின் முக்கிய ஆய்வு

ஏழாலையில் பிறந்தார். நாவல் நகரில் வாழ்ந்தார். சாவகச் சேரியில் பிற்காலத்தை கழித்தாரல்ல. தன் வாழ்வின் முக்கிய பணியில் ஈடுபட்டு களிப்புற்றார் எனலாம். என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற நாவுக்கரசரின் தாரக மந்திரத்தை தமது குறிக்கோளாகக் கொண்டு இயங்கினார். மானிட சேவையே மகேஸ்வரன் சேவை என்பதை உணர்ந்து, கைதடியில் உள்ள சிறுவர் இல்லத்தைப் பொறுப்பேற்றார். அவ்வில்லத்தில் சேரும் ஒவ்வொரு குழந்தையும் லௌகீக வாழ்வுக்கு உடலை மட்டும் வளர்த்தாற் போதாது. அவ்வுடலுள் விளங்கும் ஆத்மா ஜோதியாக மிளிர்ந்து, பாருக்கெல்லாம் நன்மை பயக்கவேண்டும் என்று விரும்பினார். அதன் வளர்ச்சிக்காகவே பிற்காலத்தில் தன் உடல், பொருள், ஆவி என்பவற்றை அர்ப்பணித்தார்.

அவ்வில்லத்தின் வளர்ச்சியால் ஆத்மஜோதின் பேரும் புகழும் ஓங்குவதை விரும்பாதோரும் இருந்தனர். அவருடன் சேர்ந்து தொண்டில் ஈடுபட்டோருள், பயன் கருதாது சேவை யாற்றினோரும் உண்டு. சிலர் தமது சுயதேவைகளுக்கும், புகழுக்காகவும் ஈடுபட்டு இரத்தம் உறிஞ்சிக் குடித்து முடித்த நீர் அட்டைகள் போல் அகன்றாரும் உண்டு. மேலும் ஒரு சிலர் அவரை அப்பதவியில் இருந்து அகற்றி விடலாம் என்ற திருப்பணிகளில் ஈடுபட்டனர். குழந்தைகளின் உள்ளத்தில் சுயநலமே உதிக்காத வகையில் வளர்த்தெடுக்க நாளாந்த வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்தி அவர்களை வழி நடத்தினார். உள்ளமெல்லாம் ஈசன் கோயிலாக மாற்றப்பட்டால், உலகில் இன்பமே அல்லாது துன்பமில்லை என்ற நிலை உருவாகும். அதற்காகவே தான் தென்மராட்சியிலிருந்து வீடுதோறும், வாரந்தோறும், மாதந்தோறும் ஆலயந்தோறும் கூட்டுப் பிரார்த்தனை என நிகழ்ச்சிகளை அமைத்து மக்களின் இதயங்களில் சிவன் கழலடி பதிய வழி வகுத்தார்.

திருவாசகம் திருமுறைகள் முற்றோதல் போன்ற நிகழ்ச்சிகளில் மக்களை ஈடுபடுத்தினார். சென்னிய உன்பொற்திருவடித்தாமரை, சிந்தையுள்ளே மன்னியது உன் திருமந்திரம் என்ற நிலைக்கு ஒவ்வொரு ஆத்மாவையும் இட்டுச் செல்ல முயன்றார், சாதி, சமயம், இனம் என்ற

தடைகளைக் கடந்து, மானிட சமூகம் என்ற ஒரு கட்டமைப்புக்காக உழைத்தார். பற்பல சமயங்கள் இருந்தபோதும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சமரச சன்மார்க்க நெறியையே ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்தார்.

1948ல் முதன் முதலாக வெளி வந்த ஆத்மஜோதியின் முகப்புப்படம் சிவனொலி பாதமலையாகும். சிவனின் புத்தரின், ஏன் கிறீஸ்த்தவப் பெரியார், இஸ்லாமியப் பெரியார் ஒருவரின் திருப்பாதம் பட்டமலை எனப்போற்றி புகழப்பட்ட மலையாகும். அவ் அப்புனித ஸ்தலத்தை, இன மத மொழி ஆகிய பேதமற்று சகலரும் ஒன்று திரண்டு வணங்கினார்கள். ஈழமக்களும் அவ்வாறே ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல வாழ வேண்டும் என்று விரும்பினார். ஆனால் சுயநலமிக்க அரசியல் வாதிகள், வயிற்றுப் பிழைப்புக்காக சமய உண்மைகளை மறைத்து போலிச் சமய வாதிகளால், இனவெறி, மதவெறி, மொழிவெறி என்பன மக்களுக்கு ஊட்டப்பட்டன. நீ உண்ணும் உணவுக்கு ஏற்ப உனது எண்ணங்களும் செயல்களும் மாறுபடும் என்பது பெரியோர் வாக்கு. அதற்கேற்ப சாத்வீக உணர்வுகளை ஊட்டும் உணவு வகைகளை உண்டால் அவ்வுணர்வு விருத்தியடையும். நிலையற்ற அழியும் உடல் பெற்றுக் கொள்ளும் உணவினால், இத்தன்மை ஏற்படுமானால் அழியாத ஆத்மாவுக்கு ஊட்டப்பட வேண்டிய சிந்தனையாகிய உணவு, எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.


ஒவ்வொரு தலைமுறையும் தமக்குப் பின்னால் வரும் தலை முறைகளைக் குறை கூறிக் கொண்டிருக்கின்றனர். தாம் எதிர்காலச் சந்ததியினருக்காக எதை எவ்வாறு செய்கிறோம் என்பதைச் சிந்திப்பதில்லை. சமய போதனைகளை உடலில் அணியும் சமயச் சின்னங்களாகவே கருதுகிறோம். சமயப் போதனைகள் ஆத்மா அணிய வேண்டிய சின்னங்களே வெங்காயத்தை உண்டவனின் வியர்வையும், அவன் விடும் ஏப்பமும் வெங்காய மணமாகவே இருக்கும். அவ்வாறே சமய போதனைகளின் கருத்துக்களை தமது உடைமகளாக்கிக் கொண்டவனின் சிந்தனையிலும் பேச்சிலிலும், செயலிலும் இறைவனின் அருளுரைகள் தான் வந்து கொண்டே இருக்கும். இன்புற்று வாழும் சமுதாயமே மனித வளர்ச்சியின் முடிவான குறிக்கோளாகும். அதை அடைய தூய சிந்தனை, தீங்கற்ற பேச்சு, பாவம் பழி அற்ற செயற்பாடுகளே இன்று அவசியமாகின்றது. அதை ஆன்மீக வளர்ச்சியினாற்றான் அடையலாம். எனவே தான் மக்களிடையே கூட்டுப்பிரார்த்தனை, பிரசங்கங்கள், சத்சங் கங்கள் நடை பஜனைகள் மூலம் ஆன்மீக போதனைகளை ஆத்மஜோதி ஐயா ஊட்டினார். சமுதாயத்தின் ஆன்மீக நலனுக்காகப் பாடுபட்டமையினால் ஒரு யோகிக்குக்கிடைக்கும் உயர்ந்த நிலையைப் பெறுகிறார் இதன் காரணமாக போரினால் தன் நாயகத்தைக் காக்கும் போர் வீரனை விட சகல ஆத்மாக்களையும் பந்த பாசத்தளைகளிலி ருந்து விடுதலை அடைய உடழைத்த ஆத்மஜோதி ஐயாவும், மண்ணின் ஒரு மைந்தனே என்று கருத முடிகிறது. உண்மையான சுதந்திரம் இருந்தாற்றான் ஆத்ம விடுதலைக்காக உழைக்கலாம். ஆன்மீக சக்தியிருந்தாற்றான் நிரந்தரமான விடுதலையைப் பெறலாம்.

*திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்*
*முன்னாள் அதிபர் இராமநாதன் கல்லூரி*


# என்றும் நினைக்கப்படவேண்டியவர்

ஆத்ம ஜோதி நா. முத்தையா அவர்கள் ஞாபகார்த்தமாக, ஏழாலையில் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளதை அறிந்து மிக மகிழ்ச்சியடைந்தேன். அமரர் நா. முத்தையா அவர்கள் கடந்த பல வருடங்களாக ஆற்றிய சமய சமூகப் பணிகளை, வருங்காலச் சந்ததியினர்களுக்கு நினைவுபடுத்தும் ஓர் அழியாச் சின்னமாக அது விளங்குமென்பதில் ஐயமில்லை. அன்னார் ஆற்றிய பணிகள் நமது நாட்டில் மட்டுமல்ல, கடல் கடந்த மொரீசஸ், கனடா, சுவிற்சலாந்து இந்தியா ஆகிய நாடுகளில் சமய வளர்ச்சிக்கு உதவின. சமய சிந்தனை, சமய வாழ்வு, பெரியோர்கள், பக்தர்கள், சித்தர்கள் தொடர்பு அன்னார் சமயத்துறையில் சிறப்புற உதவின. நாவலப்பிட்டியில் ஆரம்பமான அன்னாருடைய சமயப் பணி ஆலமரம் போல பரந்து ஒரு சமய எழுச்சிக்கு வித்திட்டது. இந்து சமயப் பேரவையின் தலைவராக அன்னார் விளங்கிய காலத்தில் அதன் உப தலைவர்களில் ஒருவராக விளங்கும் பேறு எனக்குக் கிடைத்தது. நேரம் தவறாது நிகழ்ச்சிகளுக்கு சமூகம் கொடுப்பது, அடக்கமாக அதே சமயம் ஆணித்தரமாக தனது கருத்தைத் தெரிவிப்பது, பிறர் கருத்தை மதித்து ஏற்கும் பண்பு, பயன் கருதாது பணியாற்றும் சுபாவம் என்பன அன்னார் உயர்வுக்கும், புகழுக்கும் காரணமாக அமைந்தன. திருத்தல யாத்திரையை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு, அன்னார் மேற்கொண்ட திருத்தலயாத்திரை ஒரு முன்மாதிரியாக அமைந்தது. காவிவஸ்திரம் தரித்து சிவசின்னங் களை அணிந்து, திருமுறைகளை ஓதியவாறு அமரர் முத்தையா அவர்கள் அடியார்கள் உடன் வர மயிலனிக் கந்தசுவாமி கோயிலுக்கு வந்த காட்சி இன்றும் எனது மனதில் பசுமையாக இருக்கிறது. கோயிலுக்கு வரும் வழியில் தான் கல்விகற்ற மயிவணி மகாவித்தியாலயம் சென்று தனது நன்றிக்கடனை அதற்குச் செலுத்தத்தவறவில்லை. அமரர் முத்தையா அவர்கள் சமய பிரசாரகராக, எழுத்தாளராக பல நிறுவனங்களின் தாபகராக விளங்கியதோடு, நெருக்கடியான காலக்கட்டத்திலும் மனம் தளராது துணிவாகப் பணியாற்றினார். கைதடி சைவச் சிறுவர் இல்லம் முத்தையா அவர்களின் மனதை மிகக் கவர்ந்த ஒன்றாகும் எளிமையான வாழ்வு, உயர்ந்த சிந்தனை, தியானம் செய்யும் ஒழுங்கு, சமயநுல்களை பாராயணம் செய்தல் என்பன மூலம் தனது வாழ்க்கையை வளம் படுத்தியது மட்டுமல்ல மற்றவர்களையும் அவ்வாறு வழிப்படுத்தியுள்ளார்.

எனவே புதிதாத அமைக்கப் பெற்ற மணி மண்டபத்தில், தியானம் செய்வதற்கு ஏற்ற முறையில் ஒரு பகுதியும், அரிய சமய, தமிழ் நூல்கள் கொண்ட வாசிகசாலையும் அமைந்திருப்பது அமரர் முத்தையா அவர்களின் இலட்சியங்களை நிறைவேற்றும் என்பது உறுதி. மேலும் சிறு பையனாக, இருந்த காலத்தில் அன்னார் வழிபட்ட பாதாள வைரவர் கோயில் அருகாமையில் மணி மண்டபம் அமைந்திருப்பது நல்ல பொருத்தமாக உள்ளது.



அருள் உரையில்



ஆன்மீக நெறியில்..................

# மக்களே போல்வர் கயவர்

நா. முத்தையா

மனிதர்களைப்போன்று காணப்படுபவர்கள், அனைவரும் மனிதர்கள் அல்லர். வெளித்தோற்றத்தில் கயவர்கள் மற்ற மனிதர்களைப் போலவே காணப்படுவார்கள். ஆனால் அவர்களிடத்தில் மனிதத்தன்மையே இருக்காது. மனிதத்தன்மை இல்லை என்றால் வேறு என்னதன்மை இருக்கும்? என்றாலும் அதற்கும் சரியான உவமை சொல்ல முடியாது.

இதர உயிரினங்களை எல்லாம் அவற்றின் வெளி உருவத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவை இன்ன இனத்தைச் சார்ந்தவை என்றுகூறி விடலாம். ஆனால் மனித இனத்தைப் பொறுத்தமட்டில் அவ்வாறு கூறுவது கடினம். இனெனில் மனிதர்களாகப் புறத்தே தெரிகின்றவர்கள், அகத்தே எப்படிப்பட்ட தன்மையைக் கொண்டு விளங்குகின்றனர் என்று நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். கயவர்கள், இனத்தில் மனிதர்களோடு சேர்ந்தவர்களே. ஆனாலும் குணத்தாலும் செயலாலும் அவர்கள் யாரோடும் சேர்ந்தவர்கள் அல்ல.

அகத்தே ஒருவனிடத்தில் புலித்தன்மை இருக்குமேயானால், அவனை மனிதப்புலி என்று கொள்ள வேண்டும். மற்றொருவனிடம் அகத்தே வஞ்சகமும் சூதும் நிறைந்திருக்கு மேயாகில் அவனை, நரிவர்க்கத்தில் தான் சேர்க்கவேண்டும். இவ்விதமாக ஆராய்ந்து கொண்டே வந்தால் மனிதருள் மனிதராக வாழ்பவரையுங் காணலாம். இன்னும் ஒருபடி மேலே போனால் மனிதருள் தெய்வநிலையில் இருக்கும் சிலரையும் காணமுடியும்.

பிறரை அழித்து தாம் வாழ நினைப்பவர்கள் துரோகிகள். மற்றவர்களைப் பற்றி எவ்வித கவலையுமின்றி வாழ்பவர்கள் சுயநலமிகள். பிறரும் வாழத்தாம் வாழ்பவர்கள் மனிதர்கள். பிறர் வாழவே தாம் வாழ்பவர்கள் புனிதர்கள். பிறர் வாழ்வுக்காகத்தம்மை அழித்துக் கொள்ப வர்கள் தெய்வீகர்கள்.

இன்றைய சூழ்நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. எந்தப் பக்கம் திரும்பினாலும் மனத்தைக் கெடுக்கும் ஆபாசச் சுவரொட்டிகள், கருத்தைச் சிதறடிக்கும் சினிமாப்பாடல்கள், தரம் குறைந்த சஞ்சிகைகள், இவற்றிற்கிடையே எப்படிக் கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்வது என்பதுதான் இன்றைய கேள்வி?

நாம் எல்லோரும் நமது உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில், அதிகமான நேரத்தைச் செலவிடுகின்றோம். உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தெரிந்த நமக்கு உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தெரியவில்லையே. கணப்பொழுதில் அளப்பரிய மலம் மனதில் சேர்ந்து விடுகிறது. மனத்துக்கண் மாசிலனாதலே அறம். மனத்தைச் சுத்தப்படுத்த விரும்புகிறவர்கள் நல்லதை நினைத்து, நல்லதைப் பேசி, நல்லதைச் செய்ய வேண்டும்.

இன்றைய கல்வி முறையில் எல்லாப் பாடங்களும் சொல்லித்தரப்படுகின்றன. ஆனால் எந்தப்பாடம் முக்கியமாக சொல்லித்தரப்படவேண்டுமோ அது சொல்லித்தரப்படவில்லை. அதுதான் ஒழுக்க பாடம். ஒழுக்கம் இல்லாத கல்வி உண்மைக்கல்வியாகாது. ஒழுக்கம் இல்லாதாருக்கு ஒழுக்கத்தைப் புகட்டும் இடம் தான் கோயில். எங்கள் நாடு, சமயத்திற்கும் சமயக்கல்விக்கும், முக்கியத்துவம் கொடுக்கும் நாடு. ஆனால் சமீபத்தில் நடந்த வன்செயல் களின்போது சமயகுருமாரே முன்னின்று நடத்தினார்கள் என்னும் போது அந்தச் சமயத்தினா லோ, சமயகுருமாரினாலோ யாருக்கு என்ன பயன்? சமயபாடத்திலே உத்தம சித்தி அடைந்து பாராட்டுப் பெற்ற மாணவன், கடவுள் இல்லை என்று சொல்லுகிறான். பல தீயபழக்கங்க ளுக்கு அடிமையாகி நாட்டுக்கும், வீட்டுக்கும் உதவாதவன் ஆகின்றான். ஆகவே சமயம் என்பது அநுட்டிக்கப்பட வேண்டிய ஒன்று. கற்றல் மாத்திரம் சமயப் பண்பாட்டைப் பெறமுடி யாது. சாதனை மூலமே சமயப்பண்பாட்டைப் பெறலாம்.

ஆத்ம ஜோதியின்
சுயசரிதையில் முற்பகுதி

# வாழ்வில் ஏற்பட்ட சுகமான சந்திப்புக்கள்

அடியேன் பிறப்பதற்கு இறைவனால் தெரிவு செய்யப்பட்ட இடம் ஏழாலை என்னும் கிராமமாகும். ஏழு ஆலயங்கள் ஒரு இடத்திலே அமைந்திருந்தமையினால் ஏழாலையம் என்று பெயர் பெற்றுக் காலகதியில் ஏழாலை என்று மருவி வந்தது. ஏழாலையில் ஒரு சிற்றூர், அதற்கு இலந்தை கட்டி என்று பெயர் . இலந்தைகள் காடுபோல் வளர்ந்திருந்தபடியினால் இலந்தைக்காடு என்று பெயர் பெற்றுக் காலகதியில் இலந்தைகட்டி என்று மருவி வந்தது.

இலந்தை கட்டியில் ஒரு வைரவர்கோயில். அக்கோயில் அக்காலந்தொட்டு பல புதுமைகளுடன் விளங்கியது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஏழாலையில் ஒரு கொள்ளை நோய் பரவியது. அந்த நோயினால், வீடு வீடாக மக்கள் இறந்தனர். இதனை நீக்குவதற்காகப் பெரியயாகம் ஒன்று இலந்தை கட்டி வைரவர் கோயிலில் செய்யப்பட்டது. ஒருவராரமாக இடை விடாது அக்கினிக்குண்டத்தில் அக்கினி சுவாலை விட்டு எரிந்து கொண்டே இருந்தது. அதற்குவேண்டிய வேம்பும் மாவும் அவ்வூரில் உள்ளவர்களால் உபகரிக்கப்பட்டனவாகும். பூசாரியார் ஒவ்வொரு வீடாகச் சென்று இன்னமரம் யாகத்திற்கு வேண்டும் என்று அடையாளம் காட்டிச் செல்வார். அவர் காட்டிய உடனே அம்மரம் தறிக்கப் பெற்று, துண்டுகளாக்கி கோயில் வந்து சேர்ந்து விடும். பூசாரியார் சென்ற வீடுகளில் அவர் சென்றபின் யாருக்கும் கொள்ளை நோய் பரவவில்லை.

ஏழு நாட்களும் வேத விற்பன்னர்கள் மாறி மாறி மந்திர உச்சாடனம் செய்து கொண்டே இருந்தனர். ஏழாவது நாள் ஓமகுண்டத்தில் எரிந்த அக்கினிச் சுவாலை அந்த ஊர்முழுவதுமே பரந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இந்த யாதத்தில் ஒரு அன்பர் தான் வளர்த்த செம்மறிக்கிடாயைப்பலி கொடுப்பதாக நேர்த்திக்கடன் செய்திருந்தார். அச்செய்தியை அவர் வேதவி பன்னர்களிடம் கூறியபோது அதனைப்பலியிட அவர்கள் சம்மதிக்கவில்லை. வயிரவப் பெருமானுக்குரியதை வயிரவப் பெருமானே எப்படியாவது, ஏற்றுக் கொள்ளட்டும் என்று சொல்லி அக்கிடாயை அவிழ்த்து விட்டார்.

அது நேராக யாகம் செய்யும் இடத்திற்கு வந்தது. யாகத்தைப்பார்க்கவந்திருந்தவர்கள் எல்லோரும் அந்தவெப்பம் தாங்க மாட்டாமல் மிக மிகத் தூரத்திலேயே தங்கி இருந்தனர்.

செம்மரிக்கடா நேராக வந்தது. ஓமகுண்டத்தை மூன்று முறை சுற்றிச் சுற்றித்துள்ளி வந்தது. அந்தநேரத்தில் அந்தணர்கள் பலிகொடுப்பதாகப் பாவனை செய்து, பூசனிக் காயை வெட்டி அக்கினியில் போட்டுக் கொண்டிருந்தனர். துள்ளி வந்த கிடாய் அக்கினியில் தானாகப் பாய்ந்தது. அந்தணர்கள் திகைத்தனர். மக்கள் வயிரவப் பெருமானுக்கு அரோகரா, கோஷம் போட்டனர். கடா உடல் கருகிமாண்டது. சிறிது நேரத்தில் கருகிய உடல் வெளியே எடுக்கப்பெற்று கோயில் முன்னிலையில் கிடத்தப்பெற்றது.

யாகத்திற்குத் தலைமை வகித்த குருக்கள் வயிரவப் பெருமானுக்கு அபிடேகம் செய்த தீர்த்தத்தைக் கொண்டு வந்து தெளித்தார். ஆட்டுக் கடா நித்திரை விட்டு எழுந்தது போல் எழுந்து, வயிரவப் பெருமானைப் பார்த்துக் குரல் கொடுத்து. மக்கள் இப்புதுமையை கண்ணாரக் கண்டு களித்ததோடு அன்று தொடக்கம் வயிரவப் பெருமானைப்பக்தி சிரத்தை யோடு கும்பிடத் தொடங்கினர். அந்த யாகத்தின் பின்னர் கோயில், சிலந்தை கட்டி பாதாளஞானவயிரவர் கோயில் என்று அழைக்கப்படலாயிற்று.

இந்தச் சிற்றூரில் வைரவர் கோயிலுக்குப் பக்கத்தில் வைரவப் பெருமானிடம் மிகுந்த பக்தி உள்ள குடும்பம் ஒன்றிருந்தது. அக்குடும் பத்தலைவரின் பெயர் சின்னத்தம்பி என்பது. இரணைப் பிள்ளைகளில் ஒருவரான படியினால் இரட்டையர் சின்னத்தம்பி என்று அழைக்கப்பட்டார். இரட்டையர் சின்னத்தம்பிக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிள்ளைகள் ஆவர். இந்த ஆண்களுள் இளையவர் நாகமணி என்னும் பெயருடையவர். இவரே அடியேனுடைய தந்தை ஆவர். அடியேனுடைய தாயார் பெயர் பொன்னுப் பிள்ளை ஆவர். நாகமணி பொன்னுப்பிள்ளை, தம்பதியினருக்கு இரு அக்காமாருக்கும், ஒரு அண்ணாவுக்கும் ஒரு தம்பிக்கும் இடைப்பட்டவனாக அடியேனுடைய பிறப்பு நிகழ்ந்தது. 25-05-1918 ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை விசாக நட்சத்திரத்தில் பிறந்தேன்.

அடியேனுடைய சோதிடத்தை எழுதிய குடும்ப சோதிடர், பலகண்டங்களை (தத்து) த்தாண்டித் தான் உயிர் வாழவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். தாயும் தந்தையும் முருகபக்தர்கள். அதனால் அடியேனை முருகனிடமே விற்று வாங்கி உள்ளார்கள். 1918 ஆம் ஆண்டு ஐப்பசியில் பெருவெள்ளம் ஒன்று நிகழ்ந்தது. அதனால் எமது வீட்டில் உள்ள எல்லோருமே குடிபெயர்ந்து கோயில் ஒன்றை நாடிச் செல்ல வேண்டியிருந்தது. அடியேன் பிறந்து ஐந்து மாதக் குழந்தை. தந்தையாருடைய தாயாராகிய பார்வதிப் பிள்ளை என்ற பெயருடைய அடியேனுடைய பேத்தியார் தான் அடியேனை இருகைகளிலும் ஏந்திச் சென்றிருக்கிறார் . பேத்தியார் மார்பளவு தண்ணீரில் மெல்ல மெல்ல நடந்து சென்றவர் ஒரு குழியில் கால்வைத்தவுடனே தடுமாறி அடியேனை தண்ணீருள் கைதவற விட்டு விட்டார். கணப் பொழுதில் பக்கத்தில் வந்த தந்தையார் பாய்ந்து எடுத்து விட்டார். தாயார் முருகா என்று கூவினார். பேத்தியார் உடனே தந்தையாரிடமிருந்து வாங்கி, நீரைத்துடைத்து என்னடா தண்ணீர் ஆழம் பார்த்தாயா என்று கேட்டபோது, அடியேன் சிரித்ததாகப் பேத்தியார் பிற்காலத்தில் அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

அடியேனுடைய பேரனார் சின்னத்தம்பியர், ஒருவிசேடமான கமக்காரர். அவரிடம் நான்கு தொட்டில் பசுக்கள் நின்றன. வண்டி, உழவுக்கேற்ற மாடுகள் நான்கு நின்றன. ஒரு அழகான கூடார வண்டிலும், பொருட்கள் ஏற்றி இறக்குதற்கான வண்டிலுமாக இரு வண்டிகள் நின்றன. கூடார வண்டியில் கட்டிச் செல்லும் மாடுகள் சிவப்பு குஞ்சம் கட்டி, வெள்ளிச் சங்கிலி கட்டி, கழுத்தில் சிறுமணி ஒலிக்க நடந்து செல்லும் காட்சி ஒரு தனி அழகாய் இருக்கும். அவர் வண்டி விடும்போது கையில் சிறு துதரந்தடி ஒன்று வைத்திருப்பார். ஆனால் ஒரு நாளாவது தடியால் அவற்றை அடிக்கமாட்டார். இரண்டுக்கும் இரண்டு செல்லப் பெயர்கள் வைத்திருந்தார். ஒன்றின் பெயர் முருகன். அது நல்ல சிவப்புநிறமுடையது. மற்ற தன் பெயர் கண்ணன் என்பது. அது நல்ல கறுப்பு நிறமுடையது. மற்றவர்கள் சிவலை, கறுவல் என்று மாடுகளைக் குறிப்பிட்டாலும், பேரனார் கண்ணாமுருகா என்றே அழைப்பார்.

பேரனாருடைய வண்டி வரும் போதே மற்றவர்களுக்கெல்லாம் சின்னத்தம்பியருடைய வண்டிவருகிறது என்பது தெரியும். அவருடைய வண்டிக்கு முன்னாலே எந்த வண்டியையும் செல்ல விடமாட்டார். வண்டிக் காரர்களும் பேரனாரின் குணம் அறிந்து ஒதுக்கிக் கொடுத்து விடுவார்கள். யாராவது ஒதுக்கிக் கொடுக்கா விட்டால், அவர் கண்ணா முருகா என்று குரல்கொடுத்ததுதான் தாமதம். இரண்டும் ஒரே பாய்ச்சலில் முன்னால் செல்லும் வண்டியை விலத்தி முன்சென்று விடும்.

வண்டி வீடு வந்ததும், முதலில் மாடுகளை அவிழ்த்துத் துடைத்து தண்ணீர்வைத்து உணவு போட்டுத்தான் மறுவேலைபார்ப்பார். அவர் எங்காவது சென்று இரவு நேரம் கழித்து வந்தாலும், மாடுகள் கட்டியிருக்கும் இடம் சென்று அவற்றைத் தட்டிக் கொடுத்து தன்கையி னால் கொஞ்ச உணவாவது அவற்றுக்குக் கொடுத்து விட்டுத்தான் வந்து உண்ணுவார். நாங்கள் எவ்வளவு உணவு வைத்தாலும் பேரனார் வந்து விட்டதை அசுகையால் அறிந்து குரல் கொடுத்து அழைப்பதைப் பல தடவைகளில் அவதானித்தி ருக்கிறேன்.

சில சமயங்களில் வீட்டில் இருந்து கண்ணா முருகா என்று அழைத்து, இதோ வந்து விடுகிறேன் என்று குரல் கொடுத்து விட்டுச் செல்வார். நாங்கள் தண்ணீர் வைத்தால் அவை சில சமயங்களில் குடிப்பதில்லை. ஆனால் அவர் எந்த நேரம் வந்தாலும், இரு மாடுகளுக்கும் இருவாளிகளில் தண்ணீர் கொண்டு சென்று வைப்பார். அவர் வைத்த உடனே கொஞ்சத்தண்ணீராவது குடித்தே தீரும்.

கண்ணனும் முருகனும் பேரனாருடைய வாழ்க்கையில் இரண்டறக் கலந்தவர்கள். தனது சொந்தப் பிள்ளைகளிடமோ, அன்றிப் பேரப்பிள்ளைகளிடமோ, இவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்று சொல்ல முடியாத அளவுக்கு அவ்வளவு அன்பு பாராட்டினார். கோயில் வழிபாட்டுக்குச் சென்று பிரசாதங்கள் பெற்றுக் கொண்டதும், முதலில் அவர்கள் இருவருக்குந்தான் கிடைக்கும். பின்பு தான் எங்களுக்குக்கிடைக்கும், விபூதி, சந்தனம், குங்குமம் எல்லாம் அவற்றின் நெற்றியிலும் விளங்கும்.

பதினாறு பசுக்களில் குறைந்தது எட்டுப் பசுக்களாவது, வருடம் முழுவதும் பால் கொடுத்துக் கொண்டே இருக்கும். ஒவ்வொருமாடும் குறைந்தது மூன்று போத்தல் பாலாவது எடுக்கும். எவ்வளவு பால் எடுத்தாலும் பால் காசுக்கு விற்பதில்லை. பால் விற்றால் பாவம் என்று நினைத்தவர். கோயிலுக்கு என்று, குழந்தைகளுக்கு என்று, நோயாளருக்கு என்று எவ்விதமானவர்கள் வந்து கேட்டாலும் பால் இலவசமாகவே வழங்கப்பட்டது. இதனைச்சிலர் பயன்படுத்தி, பாலை இலவசமாகப் பெற்று விற்பனை செய்யவும் தலைப்பட்டனர். ஒருவர் இருமுறை மும்முறை பால்பெறுவதும், ஒரு குடும்பத்திலுள்ளஅத்தனைபேரும் பால் பெறுவதும் தவிர்க்கப்பட்டன. யாராவது கோயிலுக்கு என்று பால் கேட்டால், அக்கோயி லுக்குப் பால் நேராகவே வீட்டிலிருந்து கொண்டு சென்று கொடுத்தனர்.

தருமத்திற்காகக் கொடுக்கப் பெற்ற பால் போக, மீதியைப் பேத்தியார் காய்ச்சி உறைபோட்டுத் தயிராக்கிக்கடைந்தார். தயிர் கடையும் போது பேத்தியார் முருகா முருகா என்று இசை பாடிக் கொண்டே கடைவார். எவ்வேலை செய்யும் போதும் முருகமந்திரம் ஜெபம் செய்து கொண்டே இருப்பார். கடைந்தமோரைப் பெரிய அண்டாவில் ஊற்றிப் படலையில் உள்ள புறந்திண்ணையில் வைத்து விடுவார். இரண்டு மூக்குப்பேணிகள் இருக்கும். ஒன்றால் அள்ளி மற்றதில் ஊற்றி வழிப்போக்கர் தாகந்தணித்துச் செல்வர்.

பெற்றோருடைய வழிகாட்டலினாலும், பேரனாருடைய அறிவுரையினாலும், வெள்ளி தோறும் கோயிலுக்குச் செல்லும் பழக்கம் குடும்பத்தில் எல்லாருக்கும் ஏற்பட்டது. கோயிலுக்குச் சென்றால் வீதி வலம் வந்து வணங்கி விட்டு ஓர் இடத்தில்அமைதியாக இருந்து நாமஜெபம் செய்ய வேண்டும் என்பது பேரனாருடைய வழிகாட்டலாகும். கோயிலும் வீதியும் எப்பொழுதும் சுத்தமாக இருக்கவேண்டும் என்பது அவரது வழிகாட்டலாகும்.

நாங்கள் கோயிலுக்குச் செல்லும் போது கோயிலில் விளையாடக்கூடாது. குத்துவிளக்கைத்தானும் கையால் தொடக்கூடாது என்பது அவரது அறிவுறுத்தலாகும். ஏன் அப்படிச் சொல்கிறார் என்று நாம் காரணம் அறியாமல் இருந்தோம். ஒரு நாள் மனந்துணிந்து விளக்கைத் தொட்டால் என்ன தோஷம் வந்து விடும் என்று கேட்டோம். அதற்கவர் சிரித்து விட்டு விளக்கை நீ கையால் தொட்டால் உனது கையில் என்னபடும் என்று கேட்டார். எண்ணெய் கையில்பட்டால் நீ என்ன செய்வாய் என்று கேட்டார். அதைத்தலையில்பூசிக் கொள்வோம் என்று கூறினோம்.

''கோயில் சொத்து குலநாசம்.'' அந்த எண்ணெய்தானும் வீட்டிற்கு வரக்கூடாது என்று அறிவுறுத்தல் சொன்னார். தற்காலத்தில் கோயில் சொத்துக்களை அப்படியே முழுவதாக விழுங்கி ஏப்பமிடும் கோயில் அதர்மகர்த்தாக்களை நினைக்கும் போது, பேரனாரின் மனோதர்மம் எப்படி என்று நினைத்து நினைத்து இன்புறுகின்றது.

தந்தையார் பசுவைப் பக்குவமாக வளர்த்து பால் விற்றார். ஆனால் தண்ணீர் கலந்தால் மகா பாதகம் என்று நினைத்தவர்கள். அடியேனுடைய காலத்தில், அடியேன் அநுபவித்த சொந்த அனுபவம், தண்ணீர் கலவாமல் பால் விற்றால் பாவம் என்பது.

அடியேன் நாவலப்பிட்டியில் ஆசிரியர் தொழில் பார்த்த காலத்தில், அடியேனிடம் கல்விகற்ற முகம்மது லாபீர் என்னும் பையன் தினமும் அதிகாலையில் ஒரு போத்தல் பால்கொணடு வந்து தருவான். ஒரு நாள் வேடிக்கையாக லாபீர் ஒருபோத்தல் பாலுக்கு எவ்வளவு தண்ணீர் கலப்பாய் என்று கேட்டேன். பையனுக்குப் பொய்பேசத் தெரியாது. ஒரு போத்தல் பாலுக்குக்கால் போத்தல் தண்ணீர்தான் கலப்போம் என்றான். இனிமேல் தண்ணீர் கலவாமல் முக்கால் போத்தல் சுத்தமான பாலே கொண்டு வந்தது தா. முழுப்போத்தல் பாலுக்கு காசு தருகிறேன் என்றேன், பையன் தலையைச் சொறிந்தான். ஏன் கணக்குச் சரிதானே என்றேன். இல்லைங்கசேர் பாலுக்குக் கொஞ்சத்தண்ணீராவது கலக்காவிட்டால் பாலுக்கு மானம் இல்லீங்க என்றான். இதனுடைய உயிர்ப்பொருள் உட்பொருள், பாலுக்குத் தண்ணீர் கலவாது விட்டால் பாவம் என்பது தானே. மூன்று தலைமுறைக்குள் தர்மம் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதற்கு இது ஒரு அத்தாட்சியாகும்.

அடியேன் ஐந்தாம் வகுப்புவரை ஏழாலை கத்தோலிக்க பாடசாலையில் தான் கல்வி கற்றேன். தலைமையாசிரியரும் அடியேனைப்படிப்பித்தவருமான பொன்னச்சட்டம்பியார் எமக்கு ஒரு வழியில் உறவின் முறையினருங்கூட. தந்தையாருடன் நெருங்கிய சிநேகிதர். அடிக்கடி வீட்டிற்கு வருவார். அவர் வீட்டிற்கு வந்தால் அவருடைய கண்ணிற்படாமலே எங்காவது மறைந்து விடுவோம்.

அடியேனுடைய குடும்பம் சமயப்பற்றுடைய குடும்பம். அதனால் குடும்பத்தில் உள்ள எவருமே விபூதி பூசாமல் வெளியே எங்கும் போவதில்லை. அடியேன் விபூதி நிறையப் பூசிக் கொண்டே பாடசாலைக்குச் செல்வேன். கிறிஸ்தவ மாணவர்கள் எம்மைப்பார்த்து, அடுப்ப டிச் சாம்பல் பூசிக் கொண்டுவந்துள்ளோம் என்று கேலி செய்வார்கள், அவர்களு டைய கேலியைக் கேட்டு அழத் தெரியுமே தவிர நியாயம் சொல்லத் தெரிவதில்லை. சைவர் களைப் பார்த்து இயேசு தான் உண்மையான கடவுள் என்றும், நாங்கள் கும்பிடுவதெல்லாம் பிசாசு என்றும் சொல்லுவார்கள். இதனால் எங்காவது ஒரு சைவப்பாடசாலையில் படிக்க வேண்டும் என்ற அவா எழுந்தது. அத்தூண்டுதல் தான் சுன்னாகம் மயிலணிச் சைவ வித்தியாசாலையில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிப்பதற்குக் காரணமாய் அமைந்தது. அங்கு அப்பொழுது நல்லாசிரியர் குழு ஒன்று இருந்தது.

சமயம் படிப்பிப்பதற்கு மயிலணிப் பொன்னம்பல ஆசிரியரும், தமிழ் இலக்கிய இலக் கணங்கற்பிப்பதற்கு பலாலிப் பொன்னம்பல ஆசிரியரும், கணிதம் பூசாஸ்திரம்படிப் பிப்பதற்கு, ஏழாலையைச் சேர்ந்த சபாரத்தினம் ஆசிரியரும், சரித்திரம் நாட்டுச் சீவன சாஸ்திரம் படிப்பிப்பதற்கு வசாவிளானைச்சேர்நத தருமலிங்கம் ஆசிரியரும் இருந்தார்கள். தமிழில் பாண்டித்திய முடைய வெற்றிவேல் ஆசிரியர் பண்டிதர் நாகலிங்கம் போன்றவர்க ளும் படிப்பித்தார்கள். ஆங்கிலம் கற்பிப்பதற்கு இரத்தினசாமி ஆசிரியர் என்றொருவரும் இருந்தார். இந்த நல்லாசிரியர்களுடைய சேர்க்கையினால் மாணவர் தொகை வர வரக்கூடி மயிலணிச் சைவ வித்தியாசாலைக்கு ஒரு மதிப்பும் இருந்து வந்துது.

அடியேன் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறேன். வித்தியா தரிசகராயிருந்த திரு சதாசிவ ஐயர் அவர்கள் திடீரென மேற்பார்வையிட எமது பாடசாலைக்கு வந்தார்கள். எமது வகுப்பில் நுழைந்தார்கள். மானிடரின் ஏழு பருவங்கள் என்பது பற்றி கட்டுரை யொன்று எழுதுமாறு பணித்தார்கள். எமக்கு புதிய தமிழ் வாசகப்புத்தகம் என்பது இலக்கிய பாட புத்தமாக இருந்தது. ஒரு வாரத்திற்கு முன்பு தான் அது பற்றிய பாடலை பொன்னம்பல ஆசிரியர் அவர்கள் படிப்பித்திருந்தார்கள். பாடலும் பாடமாய் இருந்த அதனை வசனப்படுத்தி ஒருவரியும் தவறாது வியாசமாக எழுதினேன். பதினைந்து நிமிடங்கள் வரை சென்றிருக்கும் அடியேன் முக்கால் பங்கு முடிந்திருந்தது. சிலர் தொடங்கவே இல்லை. வகுப்புமுழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டு, அடியேனுடைய கொப்பியை எடுத்து வகுப்பு முழுவதற்கும் வாசித்துக்காட்டி விட்டு பாராட்டுக்கூறியதோடு ஈழகேசரி பாலர் பகுதிக்கு கட்டுரை கதைகள் எழுதுமாறும் ஊக்கப்படுத்தினார்கள்.

சுமார் பத்து ஆண்டுகள் கழித்து நாவலப்பிட்டி சென்மேரிஸ் வித்தியாலயத்தில் அடியேன் படிப்பித்துக் கொண்டிருந்த காலத்தில், அடியேனுடைய பாலர் வகுப்புக்கு வந்து வாசிப்புச் சோதித்தார். உங்கள் ஊரின் பெயர் என்ன என்று கேட்டார், மாணவர்கள் நாவலப்பிட்டி என விடை அளித்தனர். அதை யாராவது கரும் பலகையில் எழுதுங்கள் என்றார். ஒருவரும் எழுத முன்வரவில்லை. தான் எழுதுவதாகக் கூறி எழுதத் தொடங்கினார். நாவன்னாவை ந என்று கால் இல்லாமல் எழுதினார், உடனே ஒரு பையன் எழுந்து உது பிழை என்றான். என்ன பிழை என்று கேட்டார். அவன் எழுந்து வந்து நா என்று சரியாக எழுதிக்காட்டினான். உமது வகுப்பில் எப்பாடமும் பார்க்கத் தேவையில்லை யென்று பாராட்டிதோடு ஊர், பெயர், படித்த பாட சாலை எல்லாம் விசாரித்தார். அடியேன் ஆறாம் வகுப்பில் எழுதிய வியாசத்தை நினைவூட்டி னேன். அவருக்கு அது பெரிய மகிழ்ச்சி. இந்து சாதனத்தில்நாவலரைப்பற்றி எழுதிய

கட்டுரை நீர் தானோ என்று வினவினார். அடியேன் ஆம் என்றேன். ஆறாம் வகுப்பில் அடியேனைப் பற்றி போட்ட மதிப்பு வீண் போகவில்லை என்று பாராட்டியதோடு சம்பவத்திரட்டுப்புத் தகத்தில் மிக மிக விசேடமாகவும் எழுதியி ருந்ததோடு தலைமை ஆசிரியரிடமும், மனேஜர் சுவாமியிடமும் மிக மிகப் பாராட்டிக் கூறியி ருந்தார். இது அடியேனுடைய அறிவு வளர்ச்சிக்குமிகத்துணையா கவும் அமைந்தது.

அடுத்த நாள் மனேஜராக இருந்த பிலிப்போனிசுவாமிகள் ஒரு தேநீர் விருந்திற்கு ஆசிரியர்களை எல்லாம் அழைத்து, அடியேனைப் பற்றி ஒரு பாராட்டுரை வழங்கினார்கள். இது அடியேனுடைய சக ஆசிரியர்கள் சிலருக்குப் பெரும் பொறாமையை ஏற்படுத்தி விட்டது. இப்பாராட்டை முன்னிட்டு அடியேன் பல சிக்கல்களுக்கும், அவதூறுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டு விட்டது. ஆனால் இறைவன் கருணைபோலும் அவதூறுகளை ஏற்படுத்தியவர்களே மூக்கு உடைபட வேண்டி ஏற்பட்டு விட்டது.

அடியேன் காலை நேரத்தில் தமிழ்ப்பாடசாலையிலும் மாலை நேரத்தில் ஆங்கிலப் பாடசாலையில் தமிழும்படிப்பிக்குமாறு மனேஜர் சுவாமிகளுடைய கட்டளை. ஒரு நாள் மனேஜர் சுவாமியிடம் உடன் கற்பிக்கும் கத்தோலிக்க ஆசிரியர் ஒருவர் முத்தையா தமிழ் படிப்பிக்கிறேனென்று இந்து சமயம் படிப்பிக்கிறார் என்று கூறியதோடு விசாரணை செய்ய வேண்டும் என்றும் சுவாமியிடம் கூறி விட்டார். ஒரு பையனை அந்த ஆசிரியர் அடியேன் கிறிஸ்தவ சமயத்தை இழிவாகப் பேசியதாகச் சாட்சியும் சோடித்து வைத்திருந்தார்.

ஒரு நாள் மனேஜர் சுவாமி அவர்கள் அடியேன் தமிழ் கற்பிக்கும் மாணவர்களைத் தமது கந்தோருக்கு அழைத்து அடியேனுடைய படிப்பித்தலைப் பற்றிக் கேட்டுள்ளார். அவர்கள் நல்ல முறையில் கூறியுள்ளார்கள். சமயசம்பந்தமாக ஏதாவது சொல்லுவாரா என்று கேட்டுள்ளார். இலக்கியத்தில் வருகிற பாடல்களுக்குச் சந்தர்ப்பமும் கதைகளும் கூறுவார். எல்லாச் சமயக் கதைகளும் கூறுவார். நேற்றைக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு நாதரின் மலைப்பிரசங்கத்தைப் பற்றியும் கூறினார்கள். எந்தச் சமயத்தைப் பற்றியும் அவர் இழிவாக ஒரு வார்த்தையாவது கூறியது கிடையாது. அவர் அக்கதைகள் கூறியிருக்காவிட்டால் எமக்கு இலக்கியப்பாடல்கள் விளங்கியிருக்க மாட்டாது என்று கூறினார்கள் மாணவர்கள். மனேஜர் சுவாமி அன்று மாலை அடியேனை அழைத்து உன் மீது சிலர் பொறாமையாக இருக்கிறார்கள். நீ கவனமாக இருக்க வேண்டும் என்று அடியேனுக்கு அறிவுரை கூறினார்கள்.

சுவாமி; அடியேன் யாருடனும் போட்டிக்கோ பொறாமைக்கோ செல்வதில்லை, நானுண்டு என்பாடுண்டு என்று எவருக்கும் தீமை செய்யாமல், தீமை நினைக்காமல் தான் வாழுகின்றேன். ஆனபடியால் எப்படிக்கவனமாக இருக்கவேண்டும் என்று சொன்னால் நல்லதாய் இருக்கும் சுவாமி என்றேன். சுவாமி சிரித்து விட்டு தமக்கு வந்த முறைப்பாட்டையும் கூறி, பையன்களையும் தாம் விசாரித்ததாகவும் பையன்கள் எல்லோரும் உனது படிப்பித்தலைப் பற்றி நன்றாகத்தான் கூறினார்கள் என்று கூறினார்.

நல்லவேளை ஆசிரியர் ஆயத்தப்படுத்திவைத்திருந்த பையன் அன்று பாடசாலைக்குச் சமூகம் கொடுத்திருந்தும் சுவாமியின் கந்தோருக்குச் செல்லவில்லை. அடுத்த நாட்காலை மற்றை மாணவர்களிடம் சுவாமி விசாரித்த விடயம் பற்றியும்அவர்கள் கூறிய விடயம் பற்றியும் கேட்டு அறிந்து கொண்டான்.

ௐ

# எழுமின்

*எழுமின் விழிமின்! உழைமின்!*
*- எழுமின்*
*இமய உச்சி, விழுமிய நோக்கு,*
*கலையா சித்தம், மலையென ஓங்க*
*- எழுமின்*
*உழைப்பே உன் சீர், உறவே நாதம்,*
*தெளிந்த சிந்தை, ஓய்வுறாச் செயல்,*
*புதுயுக இலக்கணம், புதுப்புது உத்திகள்,*
*தாழ்விலா சக்தி, அகிலம் ஆளவே*
*- எழுமின்*
*தாமதியாதே, சோர்வடையாதே,*
*காலமோ சிறிது, கருமமோ பெரிது,*
*பாதையோ கடினம், பயம் கொள்ளாதே,*
*காரியம் சித்தி, வீறுடன் செல்வாய்*
*- எழுமின்*
*தர்மம் ஓங்கிடும், தயையும் பெருகிடும்,*
*கருணைக் கர்மம், நிகரில் வலிமை,*
*சிலையும் மெழுகாய், உலகெலாம் உருக்கிட,*
*கலையும் திருவும் என்றும் நிடமிட*
*- எழுமின்*
*ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்*
*ஓம் சக்தி ஓம், ஓம் தத் சத் ஓம் ஓம் என்றே*
*- எழுமின்*

***சுவாமி விவேகானந்தர்***
***விவேகானந்தர் ஜெயந்தி வெளியீடு***
*04-02-2002*

# விநயமாகவும் ஆடம்பரமின்றியும் இருப்பவனிடமே அருள் போய்ச்சேரும்

இந்நாளில் அமைதியின்மைக்கும், பூசலுக்கும் மனித மனத்தின் செயல்களே முக்கிய காரணம். தன்னைப் பிறர் விமர்சிப்பதையும்பொறுத்துக் கொள்ளாமல், அவரைப் பழிவாங்க முனைவது மிகவும் தவறான செயல். உன்னை யாராவது தண்டிப்பது என்றால் உன் கெட்ட எண்ணங்கள் தானே தவிர, வேறு யாரும் கிடையாது.

உன்னைத் தண்டிப்பதாக யாரையாவது நீ கருதினால் அவர் வெறும் கருவி மட்டுமே எனப் புரிந்து கொள். உனக்கு நன்மை செய்வதும், உன் நல்ல எண்ணங்கள் தானேயேன்றி வேறுயாருமே கிடையாது.

நன்மையும் தீமையும் உன் செயல்களினால் ஏற்படுபவையன்றி வேறுயாரும் அதற்குப் பொறுப்பு இல்லை எனப் புரிந்துகொள்.

இறைவன் ஒரு தபால்காரனைப் போல, இவர் வீட்டில் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறார். மற்றொரு வீட்டில் இன்னொரு கடிதத்தைக் கொடுக்கிறார். முதல் வீட்டில் உள்ளவர்கள் கடிதத்தைப் படித்து விட்டு சிரிக்கிறார்கள். அடுத்த வீட்டில் உள்ளவர்கள் கடிதத்தைப் படித்து விட்டு "ஓவென" அழுகிறார்கள். இந்த அழுகைக்கும், சிரிப்புக்கும் தபால்காரரா காரணம்? கடிதத்தில் உள்ள விடயங்கள அல்லவா பொறுப்பு.

கடவுள் ஒரு சாட்சி பூதம், நன்மையும் தீமையும் உங்கள் செயல்களின் விளைவுகள். தற்காலத்தில் மனிதனின் செயல்களில் மேலும் மேலும் அகங்காரம் பெருகியிருக்கிறது. ஆடம்பரமோ சொல்ல வேண்டியதில்லை. இப்படிப்பட்ட வாழ்க்கையில் எப்படி அமைதியாக இருக்க முடியும்? இங்கே எப்படிக் கடவுளின் அருள் சுரக்கும்?

நிறையக் கல்வி, செல்வம், பதவி இருந்த போதும், அகங்காரம்நிறைந்து இருந்தால், இறைவன் அருள் கிடைக்காது, நீர்ப் பிரவாகம் கூட பள்ளத்தை நோக்கித்தான் பாய்கிறது. அதே போல இறைவனின் அருளும், விநயமாகவும் ஆடம்பரமின்றியும் இருப்பவனிடமே போய்ச் சேரும்.



கைதடி சைவ சிறுவர் கொடி வார நிகழ்வில் திரு.பொ. பாலசிங்கம்,
திரு.சிவபாலன், திரு.சி.சக்திகிரீவன், அரச அதிபர் ஆகியோருடன்
ஆத்மஜோதி



கனடா மக்கள் அளித்த வரவேற்பில்

# சக்தியும் சிவமும்

நா. முருகையா

இறை வழிபாட்டின் தனிச்சிறப்பு மிக்க ஓர் இலக்கணமாகத் திகழ்வது சக்தி வழிபாடு. சிவ பெருமானைப் பக்தர்கள் அனைவரும் தொன்மைக் காலத்திலேயே வழிபட்டனர். மாணிக்க வாசகரும் இதனைத் தம் அழகிய திருவாசகத்தில்

*தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்*
*பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும்*
*பைங்கிளியும்*
*சூலமும் தொக்க வாளையும்*
*உடைத்தொன்மைக்*
*கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய்*
*கோத்தும்பீ*

தொன்மைக் கோலம் என அழைக்கின்றார். இதனையே இன்று திருச்செங்கோடு போன்ற தலத்தில் அர்த்த நாரீசுவரர் என இறைவனை நாம் வணங்குகின்றோம். சக்தியில்லை என்றால் மனிதன் சவமாகிவிடுகிறான். சவம் சிவமாகச் சக்தியின் அருள் இன்றியமையாதது.

ஞான சம்பந்தப் பெருமான் புனிதவாய் மலர்ந்து அமுதமோந்து அவருக்குத் தென்பட்ட உருவமும் இவ்வுருவமே. இதனை அவர்

*"தோடுடைய செவியன் விடையேறி*
*ஓர் தூவெண்மதி சூடி*
*காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம்*
*கவர் கள்வன்"*
*என்று அம்மையும் அப்பனுமாய்த் தனக்கு*
*இறைவன் நல்கிய காட்சியை வியந்து பாடுகிறார்.*

அப்பர் பெருமானும் தம் ஒப்பில்லா வாசகத்தில் இறைவனை அப்பன் என்றும் அம்மை என்றும் பாடி மகிழ்கிறார்.

*அப்பன் நீ, அம்மை நீ ஐயனும் நீ,*
*அன்புடைய மாமனும் மாமியும் நீ,*
*ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ,*

எங்கும் வியாபித்துள்ள முழுமுதற்பொருள் ஆணாக வடிவெடுக்கும் போது சிவனாகவும், பெண்ணாக இருக்கும்போதுசக்தியாகவும் போற்றப் பெறுகிறது. உலகம் என்பது இந்த இரண்டின் கூட்டுறவுதான். இதனை பகவான் இராம கிருஷ்ணர் களிமண்ணும் நீரும்போல் என்பார். வெறும் மண்போல் இருக்கும் ஈசனை, சக்தி என்னும் நீர், தண்ணளி சுரக்கும் ஓர் தனித் தெய்வமாக மாற்றுகிறது என்று கூறுகிறார். சக்தியின்றேல் மனிதன் சவம் தான். சவம் சிவமாகச் சக்தியின் அருள் நமக்கு இன்றியமையாதது.

சக்திகளைப் பல கலைகளில் போற்றுவர். சக்திகள் ஒன்பது என்றும், இவை நவராத்திரி யின் போது அருளோச்சும் ஆற்றல் மிக்கவைகளாகத் திகழ்கின்றன என்றும் கூறுவதுண்டு. சக்திகளை மூன்று கூறாக்கி அலைமகள், கலைமகள், மலைமகள் எனச் செப்புவாரும் உளர். வங்காள நாட்டிலே சக்தி வழிபாடு மிகச் சிறந்த முறையில் கொண்டாடப் பெறுகிறது. சண்டி, காளி, பவாநி என்னும் பல பெயர்களால் சக்தி பூஜை நடைபெறுகிறது. பகவான் இராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் காளிதேவியிடம் அபாரமான ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பதை வரலாறு தெரிவிக்கிறது. பகவான் சங்கரரும் சாரதாதேவியின் அருள் பெற்றே ஆன்மப் பேற்றை எய்தினார்.

தமிழகத்தில் அபிராமிபட்டரின் பாடல்கள் பெரிதும் போற்றப்படுகின்றன. திருக்கடையூர் அபிராமி என்று போற்றப்படும் தேவியை வழிபட்டவர் அபிராமிபட்டர்.

ஒரு நாள் அரசன் வழிபட ஆலயத்திற்கு வந்தான். வழிபாடு நடைபெறும் நேரத்தில், இன்று என்ன நாள்? என்று பட்டரை நோக்கி அரசன் கேட்டான். பட்டர், இன்று பௌர்ணமி முழுமதி என்று கூறினார். அருகிலிருந்தவர் அனைவரும் ஆச்சரியமடைந்தனர். அன்று முழு அமாவாசை நாள். அதனைப் பின்னால் உணர்ந்த பட்டர் பெரிதும் துன்புற்றார். தேவி, தன் பக்தன் அறியாது கூறிய மொழியை மெய்ப்பிக்கக் கருதித் தன் காதில் துலங்கிய வைரக் குண்டலத்தை அகற்றி அரசன் செல்லும் பாதையில் வான வீதியை நோக்கி எறிந்தாள். அந்தக்குண்டலம் பேரொளிவிட்டு மின்னியது. இதனைக் கண்ணுற்ற அரசன் அன்று முழுமதி நாள் என்றே கருதி மாளிகையை எய்தினான்.

*அபிராமிபட்டர் இதனை உணர்ந்து அபிராமி அம்மையின் பெயரால் நூறு பாடல்களைப் பாடினார். அவற்றில் ஒன்று:-*

***உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம்***
***உருகும் அன்பு***
***படைத்தனை நின்பாதயுகம் ஆடம்***
***பணி எவர்க்கே***
***அடைத்தனை என் நெஞ்சத்து***
***அழுக்கை எல்லாம் நின் அருட்புனலால்***
***துடைத்தனை, சுந்தரி, நின் அருள்***
***ஏது என்று சொல்வதே***

*என்று பாடுகிறார். இப்படிப் பல பாடல்களில் அபிராமிபட்டர் உள்ளம் உருகுகிறார்.*

## வள்ளல் வடிவை வழுத்தியே வாழ்க!

*ஆத்மஜோதி நா. முத்தையா வாசான்*
*அன்பு முற்றிய ஆர்வினாற் சைவம்*
*நேர்த்தியாகவே யுலகில் நிலைக்க*
*நித்தமுஞ் செய்த சத்தியத் தொண்டைக்*
*காத்துப் பேணித் தொடருங் கருத்திற்*
*காதலோடவர் அன்பர்கள் கூட்டம்*
*வார்த்து நாட்டிய வள்ளல் வடிவை*
*வந்து கண்டு வழுத்தியே வாழ்க!*

*நாதன் நாமப் பசனைகள் செய்தார்*
*நாவலப்பிட்டி நகரினில் ஆத்ம*
*ஜோதியை ஏற்றி யிருள் கெடச் செய்தார்*
*சுகங்கள் விசாரித்துத் துயர்கள் துடைத்தார்*
*பாதயாத்திரைப் பத்தி வளர்த்தார்*
*பட்டி தொட்டிகள் தோறும் நடந்து*
*நீதி நியாயச் சொற் பொழிவுகள் செய்தார்*
*நினைவை நாட்டுஞ் சிலைகாண வாரீர்!*

*நீறு தாங்கிய நெற்றியைக் காணீர்*
*நிகரிலாச் சாந்தக் கண்களைக் காணீர்*
*தேறக்கூடிய வாயிதழ் காணீர்*
*தேடித்தாங்கிய கைகளைக் காணீர்*
*மாறிலா நடைக் கால்களைக் காணீர்*
*மாசிலா எளிமைத் தோற்றத்தைக் காணீர்*
*ஊறிலா உருவச் சிலையினைக் காணீர்*
*ஒப்பிலா ஞான சுரபியைக் காணீர்!*

*வடிவுறச்சிலை வடித்தவர் வாழ்க*
*வாரியே நிதி வழங்கியோர் வாழ்க*
*நடத்தியமணி மண்டப சபையார்*
*ஞாபகார்த்த சபை மற்றும் முள்ள*
*அடியவர் ஆனோர் அனைவரும் வாழ்க*
*ஆத்மஜோதி நா. முத்தையா வாழ்க*
*விடிவு செய் சைவ நன்நெறி வாழ்க*
*மேன்மைகொள் குரு பரம்பரை வாழ்க!*

*- வி. கந்தவனம்*

# ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

கண்டு பிடிக்கப்பட்டதும் திருடன் ஓடிப்போய்விடுகிறான். அதைப்போலவே மாயையின் சுபாவம் இன்னதென்று நீ ஆராய்ந்து கண்டுபிடித்துவிட்டால், உன்னை விட்டு அது ஓடிப்போய் விடும்.

பூனையானது தனது குட்டிகளைப் பற்களால் பிடிக்கிறது. ஆனால் அதன் காரணமாக அந்தப் பூனைக்குட்டிகளுக்குத் தீங்கு உண்டாவதில்லை. ஆனால் அதேவிதத்தில் பூனை ஒரு எலியைப் பிடிக்கும்போது, அந்த எலி உடனே இறந்துபோகிறது. அதைப்போலவே மாயையானது மற்றவர்களை அழிக்கக்கூடியதாக இருந்தாலும், பக்தனை ஒருபோதும் துன்புறுத்தாது.

மாயை என்பது எது? ஆன்மீக முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கும் காமம்தான் மாயை.

சூளையில் வேக வைப்பதற்கு முன்பு மண்பாண்டம் உடைந்தால், அந்த மண்ணையே உபயோகித்துக் குயவன் வேறு ஒரு புதிய மண்பாண்டம் செய்கிறான். ஆனால், சூளையில் வெந்த மண்பாண்டம் உடைந்தாலோ, அதன் துண்டுகளைக் கொண்டு, பிறகு அவனால் புதிய மண்பாண்டம் செய்ய முடியாது. அதைப்போல ஆத்மஞானம் அடையப்பெறாத அஞ்ஞான நிலையில் ஒருவன் மரணம் அடைந்தால், மீண்டும் அவன் பிறவி எடுக்கின்றான் ஆனால் உண்மை ஞானமாகிய நெருப்பால் வெந்த பிறகு ஒருவன் பரிபூரண ஞானியின் நிலையில் இறந்துபோனால், அவனுக்கு மறு பிறவி கிடையாது.

வேகவைத்த நெல்லை பூமியில் விதைத்தால் மீண்டும் அது முளைக்காது. வேக வைக்காத நெல் தான் முளைவிடும். அதைப்போல பரிபூரண ஞான நிலையைப் பெற்று, சித்தனான பிறகு ஒருவன் இறந்துபோனால், அவன் மீண்டும் பிறவி எடுக்கமாட்டான். ஆனால் சித்தனாகாத ஒருவன், தான் பரிபூரண ஞான நிலையை அடையும் வரையிலும் திரும்பத் திரும்ப ஏராளமான பிறவிகளை எடுக்க வேண்டியிருக்கும்.

தராசுத் தட்டில் எந்தப் பக்கம் கனமாக இருக்கிறதோ, அந்தப் பக்கத்தில் தராசு முள்ளானது மையத்தை விட்டுச் சாய்ந்து விலகி இருக்கும். அதைப்போல், பெண் பொன் ஆசைகளால் கனத்த மனம் ஈசுவரனை விட்டு விலகித் தடுமாறுகிறது.

பெண்ணாசையும் பொன்னாசையும் மனதைவிட்டு அகலும்போது ஆத்மாவிடம் வேறு என்ன தங்கியிருக்கும்? பிரம்மானந்தமே அங்கு குடிகொண்டிருக்கும்.

விஷப் பாம்புகள் நடமாடும் வீட்டில் வசிப்பவர்கள் எப்போதும் மிக ஜாக்கிரதையுடன் இருப்பதைப் போல், உலகில் வாழும் மக்கள், காமத்திற்கும் பண ஆசைக்கும் உட்படாமல் எப்போதும் மிகமிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

கடவுள் எங்கும் நிறைந்திருப்பவரானால், அவரை ஏன் நம்மால் பார்க்க முடியவில்லை? பாசியும் நாணலும் மிகுந்து கனமாக மூடி மறைத்துள்ள குளத்தின் கரையில் நின்று நீ பார்த்தால், அந்தக் குளத்தில் தண்ணீர் இருப்பதே உனது கண்ணுக்குப் புலப்படாது. உனக்குத் தண்ணீரைப் பார்க்கவேண்டும் என்ற விருப்பம் இருந்தால், குளத்தின் மேல் பரப்பிலிருந்து பாசியையும் நாணலையும் அகற்றவேண்டும். மாயையாகிய திரையால் மூடப்பட்ட கண்களை உடைய நீ, கடவுளை ஏன் பார்க்க முடியவில்லை என்று குறை கூறுகிறாய்? உனக்கு அவரைப் பார்க்கும் விருப்பம் இருந்தால், உனது கண்களிலிருந்து மாயையாகிய திரையை அகற்று.



# அருள் விருந்து

உண்மை பேசு அது பிறர்க்கு நலன் தருவதாகவும் இருக்க வேண்டும்

உணர்ச்சி செயலாக வடிவெடிக்கும்பொழுது அதற்கு ஆற்றல் அதிகம்

சிந்தனையையும் சொல்லையும் செயலையும் ஒன்றுபடுத்துவதே யோகம்

புறப்பொருளின் கவர்ச்சிக்கு மனம் வசப்படுகிறபொழுது அது விவேத்தை இழக்கிறது.

தீயில் கை வைத்தால் கை வேதனைப்படும் தீயதை நினைத்தால் மனம் வேதனைப்படும்.

நற் செயல் மேலானது; நற்சொல் அதனினும் மேலானது; நல்லெண்ணம் நற்சொல்லினும் மேலானது

பொய்யுறவு மோஹம் அல்லது மயக்கத்தை உண்டு பண்ணுகிறது; மெய்யுறவு விவேகத்தை வளர்க்கிறது.

ஒரு பொருளின் மீது பற்று வைப்பதை விட அப்பொருளின் மீதுள்ள பற்றை விலக்கி எடுப்பதுதான் கடினம்.

ஆடம்பரமான வாழ்வில் ஆசை எழும்பொழுது வறுமைக்கோட்டில் வாழ்பவர்களுடைய நிலையை எண்ணிப்பார்க்கவேண்டும்.

ஓயாது உன் மனம் இறைச்சிந்தனையிலோ, பரநலச்சிந்தனையிலோ, ஈடுபடட்டும் அதில் உனக்கு வெற்றி கிட்டுமளவு நீ ஆன்மீகத்தில் வளர்ச்சியடைவாய்

காம இச்சை உள்ளத்தில் இடம் பெற்றிருக்குமளவு பெண்கள், ஆண்களோடு பழகுவதிலும் ஆண்கள் பெண்களோடு, பழகுவதிலும் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பிறரிடமுள்ள குறையை நாம் நினைக்கும் பொழுது நம் உள்ளத்தில் அக்குறை வலுப்பெறு கிறது. அக்குறையை யாரிடம் காண்கிறோமோ அவரிடம் நமக்கு வெறுப்பு உண்டாகிறது.

நம்மைக் காட்டிலும் பிறர் மேலானவர்களாக இருப்பதைப் பார்த்து மகிழ்வடைய வேண்டும் நம்மைக் காட்டிலும் கீழ்நிலையில் இருப்பவர்களைப் பார்த்து இதயம் உருகவேண்டும் இத்தகைய மனப்பான்மை பொறாமையை அழித்து விடும்.

நாம் நினைக்கின்றபடி நடக்கவேண்டுமென்று எண்ணுவது அகங்காரத்தையும், செருக்கையும் வளர்க்கும். அது நமக்கும் பிறர்க்கும் கேட்டை உண்டு பண்ணுகிறது. நாம் நினைப்பது அறநெறிக்கு ஒத்திருக்குமானால் அது நிறைவேறட்டும் என்று எண்ணித் தீவிரமாகச் செயல்படுவோமானால், அறநெறியில் நமக்குப் பற்று உண்டாகும்.

# பிரார்த்தனை

எல்லாம் பிரார்த்தனை தான். மனதில் எழுகின்ற ஒவ்வொரு விருப்பமும் மலரான ஒரு பிரார்த்தனை தான். விருப்பமும் ஆசையும் தேவையும் இல்லாத மனிதனே இல்லை, எனவே பிரார்த்தனை செய்யாதவர்களும் இல்லை ஆனால், அந்த விருப்பங்களும் ஆசைகளும் தேவைகளும் இறைவனிடம் சமர்ப்பிக்கப்படும்போது தான் அது உண்மையில் பிரார்த்தனை என்ற பெயர் பெறுகிறது அப்படியானால் தெய்வச் சன்னிதியில் நின்று கொண்டு இறைவா நான் இதை விரும்புகிறேன் எம் பெருமானே எனக்கு அதுவேண்டும் என்று சொல்லி விட்டால் உடனே அது பிரார்த்தனை ஆகிவிடுமா அது நிறைவேறிவிடுமா

தேவைகளை நிறைவேற்றுவதற்கே பிரார்த்தனை: மனிதனின் தேவைகள் இரண்டு வகையானவை. ஒன்று வாழ்க்கைக்கான தேவைகள் பணம் வேண்டும் நோய் குணமாக வேண்டும் பிள்ளை வரம் வேண்டும் திருமணம் நடைபெற வேண்டும் சிக்கல்களிலிருந்தும் விடுபட வேண்டும் வழக்கில் ஜெயிக்க வேண்டும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் தேர்தலில் நல்லமதிப் பெண் பெற வேண்டும் அது வேண்டும் இது வேண்டும் என்று மனிதனின் தேவைகளும் ஆசைகளும் கொஞ்ச நஞ்சமல்ல இவற்றிற்காக தெய்வத்திடம் பிரார்த்திப்பது ஒருவகை. இது சாதாரண பிரார்த்தனை இவை அத்தனையும் இருந்தால் தேவைகள் தீர்ந்து விடுமா வாழ்வில் நிம்மதி பிறந்து விடுமா இல்லவே இல்லை ஓர் ஆசை நிறைவேறும் போது நூறு ஆசைகள் புதிதாய் தோன்றும். அப்படியே சங்கிலித் தொடர்போல் நீளும் ஆசைகள் நிறைவேற நிறைவேற, புறபொருள்களால் வாழ்வின் சுக போகங்களால் நிம்மதியை தரமுடியாது என்ற உண்மை இன்றும் ஆழமாக நமக்குத் தெரிய வரும்.

*ஸ்ரீ சந்த்ர மௌளீச் வராய நம*
*ஸ்ரீ சங்கர பகவத் பாதா சார்ய பரம பராகத*
*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி*
*ஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்*
*அவர்கள், ஸ்ரீ மடம் ஸமஸ்தானம்*

*சாலைத்தெரு காஞ்சிபுரம்*
*631502*

# பிரார்த்தனை

*யாழ்ப்பாணம் இந்து சமய பேரவை ஸ்தாபகர்*

*ஆத்மஜோதி நா. முத்தையா அவனர்களின்*

*பெயரால், தியான மணி மண்டபமும்,*

*அவருடைய உருவச்சிலையும் நிறுவி,*

*திறப்பு விழாநடைபெறுவதையிட்டு*

*மகிழ்ச்சியடைகின்றேன். அவரின் பெயரால்*

*ஆத்மீக பணி தொடர்ந்து நடைபெற, மண்டப*

*அமைப்பாளர்களை வாழ்த்துகின்றேன்.*

***நாராயண ஸ்ம்ருதி.***

# திருக்கோல உண்மை

கி. வா. ஜகந்நாதன்

நாம் உலகில் சில காட்சிகளைக் காண்கிறோம். முதலில் தீயனவாகத் தோன்றினாலும் ஆராய்ந்து பார்த்தால் அவை நல்லனவாக இருக்கும். மருத்துவர், அறுவை மருத்துவம் செய்யும் போது பார்க்கப் பரிதாபமாக இருக்கும். அறியாத குழந்தை மருத்துவர் நோயாளியைத் துன்புறுத்துகிறார் என்று எண்ணும். ஆனால் மருத்தவர் செயல் நன்மையையே பயப்பது. சிலர் பார்வைக்கு நல்லவர்களாக இருப்பார்கள்; ஆனால் பண்பில் கொடியவர்களாக இருப்பார்கள். சிலர் பார்ப்பதற்கு முரடர்களைப் போலத் தோன்றுவார்கள்; ஆனால் அவர்கள் நல்ல பண்புடையவர்களாக இருப்பார்கள். ஆராய்ந்து அவர்கள் இயல்பைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பதறிவு*
*என்ற குறளால் இந்தக் கருத்து வெளியாகும்.*

உலகியல் காட்சிகளே இப்படியானால் முழுக்க முழுக்கக் குறியீடுகளாக விளங்கும் தெய்வங்களின் தோற்றமும், செயல்களும் நுட்பமாக ஆராய்ந்தாலன்றி உண்மை உணர முடியாதவையாக இருக்கும்.

இந்த நாட்டில் சமய சம்பந்தமான நிகழ்ச்சிளிலும், அமைப்புக்களிலும் உள்ளுறையாகத் தத்துவம் புதைந்திருக்கும். கோவிலானாலும் மூர்த்தியானாலும், திருவிழாவானாலும், குடமுழுக்கானாலும் எல்லாவற்றுக்கும் உட் பொருள் உண்டு. அந்த உட்பொருளை உணர்ந்தால் நம்முடைய சமயக்கருத்துகளின் நேர்மை புலப்படும்.

பொதுவாக விஞ்ஞானத்தில் மேல் நிலைக்குப் போகப் போகக் குறியீடுகளே அதிகமாக இருக்கும். அவற்றின் நுட்பத்தை அறியாதவர்கள் அவற்றைக் கண்டு, எள்ளி நகையாடவும் கூடும். அறியாமையுடையவர்கள் மதித்தாலும் அவமதித்தாலும் அதைப்பற்றி அறிஞர்கள் கவலைப்பட மாட்டார்கள். உண்மையை உணர்பவர்கள் அவற்றால் பயன் பெறுவார்கள். அப்படிப்பயன் பெற்றவர்கள். அறியாமையால் அவற்றைப் பழிப்பவர்களை நோக்கி இரங்குவார்கள். பாவம்! இவர்கள் உண்மையை அறியாமல், இவற்றால் பயனை அடையாமல் வாழ்க்கையை வீணாக்குகிறார்களே! என்று இரக்கம் கொள்வார்கள்.

இறைவனுடைய தோற்றம், அவனுடைய திருமேனியில் உள்ள பொருள்கள் யாவுமே பல உண்மைகளைப் புலப்படுத்தும். அவன் தன் திருமேனியில் என்பை அணிந்திருக்கிறான். முழு எலும்புக்கூட்டைச் சங்காளம் என்பார்கள். அந்தப் பெருமான் சங்காளத்தைத் தோளின்மேல் சுமந்து கொண்டிருக்கிறான்.அதைக்கண்டு, ''அருவருக்கத்தக்க எலும்பை அணிந்தவனையா கும்பிடுவது?'' என்று எண்ணக்கூடாது.

சடையப்ப வள்ளல் வீட்டுக்கு ஒருவர் விருந்தாளியாகப் போனார். வள்ளல் பெரிய செல்வர் என்று கேள்வியுற்றிருந்தார். அவர் சடையப்பருடைய வீட்டை அடைந்தபோது,

அந்த வள்ளல் கீழே சிந்தியிருந்த நெல்மணிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட விருந்தாளிக்கு, சிந்தின சில நெல்லைப் பொறுக்குகிறாரே! இந்த அற்பமான பொருளை இப்படிப் பெரிதாக மதிப்பவர் எப்படிப் பெரிய வள்ளலாக இருக்கக்கூடும்? என்று எண்ணினார். நெல்லைப் பொறுக்கி எடுத்த பிறகு சடையப்பர், வாருங்கள், சாப்பிடப் போகலாம் என்றார். அப்போது விருந்தாளி, சிந்திய வைரமணிகளைப் பொறுக்குவது போல, நெல்லைப் பொறுக்கினீர்களே! யாரையேனும் விட்டு அவற்றைப் பெருக்கித் தள்ளும்படி செய்திருக்கலாமே! என்றார். அதைக் கேட்டுச் சடையப்பவள்ளல் புன்னகை பூத்தார்; ஒன்றும் பேசவில்லை.

இருவரும் உணவு உண்ண அமர்ந்தார்கள். அப்போது சில வைரமணிகளை விருந்தாளியின் இலையில் போடச் சொன்னார் வள்ளல். அதைப் பார்த்துப் பிரமித்தார் விருந்தாளி.

சாப்பிடுங்கள் என்றார் சடையப்பர்

இதையா? என்று கேட்டார் விருந்தாளி

நெல்மணிகளைவிட வைரமணிகள் உயர்ந்தவை என்றீர்களே! இப்போது இதை உண்ணுங்கள் என்றார் வள்ளல். விருந்தாளி திகைத்தார்.

"எவ்வளவு செல்வம் இருந்தாலும் உணவுக்கு ஒப்பாகாது. அந்த உணவுப் பொருளை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். சிறிதளவு நெல் என்று ஒதுக்கிவிட்டால் அதனால் கிடைக்கும் ஒரு பிடி சோற்றை வீணாக்கினவராவோம். அந்த ஒரு பிடி சோற்றுக்குத் திண்டாடுகிறவர்கள் உலகில் இருக்கிறார்கள்" என்று வள்ளல் உண்மையை உணர்த்திய பொழுது விருந்தாளி, தம் அறியாமைக்கு இரங்கினார்.

இவ்வாறு ஊன்றிப் பார்க்காமல், மேலெழுந்தவாரியாகப் பார்த்து ஒன்றைத் தீர்மானிக்கக்கூடாது.

இறைவன் தேவர்களின் எலும்பை அணிந்திருக்கிறான். பிரமன் திருமாலாகியவரின் முழு எலும்பாகிய சங்காளத்தைத் தோள்மேலே புனைந்திருக்கிறான். இவை அவனுடைய நித்தியத் தன்மையைக் காட்டுவதோடு பதவி, பெருமை, பொருள் யாவும் நிலையாதவை என்பதையும் காட்டும். யார் அழிந்தாலும் அவன் அழியாத தகைமையன் என்று அவனை இனம் கண்டுகொள்ளும் அடையாளங்கள் அவை.

***"நங்காய் இதென்ன தவம்?***
***நரம்போடு எலும்பு அணிந்து***
***கங்காளம் தோள்மேலே***
***காதலித்தான் காணேடி!***
***கங்காளம் ஆமாகேள்:***
***காலாந் தரத்து இருவர்***
***தம் காலம் செய்யத்***
***தரித்தனன் காண் சாழலோ"***

***என்ற திருவாசகப் பாடல் இதனை உணர்த்துகிறது.***

ஒரு குழந்தை இறந்த பிறகு அதனிடத்தில் இருந்த அன்பினால், பெற்றோர் அது வைத்திருந்த பண்டங்களைப் பாதுகாத்து வைப்பது போல, இறைவனும் தேவர்களின் எலும்புகளை அன்பினால் அணியாக அணிந்து கொண்டான். அவனுடைய அழிவின்மையையும், எவ்வளவு சிறந்த பதவியில் இருந்தாலும் உரிய காலம் வந்தால் மற்றவர்கள் மறைவதையும் அந்த என்புகள் காட்டுகின்றன.

ஆகவே அவற்றைக் கண்டவர்கள் நாமும் இப்படியே அழிந்து போவோம் என்று உணர்ந்து கொள்ள வேண்டும்; அப்பால், நாம் அழியாத இன்பத்தைப் பெற வேண்டும் என்ற ஆர்வத்தை மேற்கொள்ள வேண்டும். அழியாதவனைச் சார்ந்தால் அழியாத இன்பம் பெறலாம் என்ற உணர்வு வரவேண்டும். யார் அழிந்தாலும் எது அழிந்தாலும் அழியாதவன் இறைவன் ஒருவனே என்று தெளிய வேண்டும். அப்பால் அவனை நன்கு மதித்து வழிபட வேண்டும்; புகழ வேண்டும்.

இவ்வளவு எண்ணங்களையும், முயற்சிகளையும் உண்டாக்குவதற்குத் துணையாக நிற்பது இறைவன் திருக்கோலம்.

நம்முடைய உடல் முதலியன நிலையாதவை என்பதைப் பல சமயங்களில் மறந்து போகிறோம். யாரேனும் இறந்து போனால் அப்போதைக்கு அது நினைவுக்கு வருகிறது. அடுத்த கணமே மறந்து போகிறது. பிணத்தைக் கண்டால் அச்சம் உண்டாகிறது. பிறகு அந்த அச்சம் போய்விடுகிறது. சுடுகாடு நம்முடைய நிலையாமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதை எப்போதுமா பார்த்துக் கொண்டிருக்கிறோம்? இத்தனையும் நம் உணர்வில் படவேண்டிய ஒரு பகுதியையே காட்டுகின்றன. அதாவது நம் வாழ்வு நிலையாதது என்பதை மட்டும்நினைக்கச் செய்கின்றன.

நமக்கு நோய் வந்திருக்கிறது என்று தெரிந்து கொள்வது அவசியம். ஆனால் அதனோடு நின்று விட்டால் போதுமா? நோயை நீக்கும் மருத்துவனை நாடிச் செல்ல வேண்டும் நோயை அறிந்து நோய்க்கு மருந்தையும் தெரிந்து செயற்பட வேண்டும். அப்போது தான் நோய் நீங்கிச் சுகம் பெறலாம்.

அவ்வாறே, நாம் நிலையாத வாழ்வை உடையோம் என்பதை உணர்ந்து கொண்டு, நிலைத்த வாழ்வைப் பெற என்றும் நிலையான ஒருவனை அடைய வேண்டும். இத்தகைய எண்ணத்தை இறைவன் எலும்பணிந்த திருக்கோலம் உண்டாக்குகிறது. அந்த எண்ணத்தை நாம் கொள்ள வேண்டுமென்றே அவன் எலும்பை அணிந்திருக்கிறான். இங்கே உணவு கிடைக்கும் என்று உணவுச்சாலையில் விளம்பரப் பலகை இருப்பது, போல இங்கே நிலையாத வாழ்வைப் போக்கி நிலைத்த இன்பத்தைப் பெறலாம் என்பதைக் குறிக்க இந்தத் திருக்கோலம் பூண்டிருக்கிறான். அதை அவமதிக்கலாமா? அது அறியாமை அல்லவா? அவமதிக்காமல் மதித்து உண்மையை உணர்ந்து அவனை வழிபட்டால், நாம் இந்த நிலையாத வாழ்க்கையை நீத்து என்றும் அழியாத இன்ப நிலையைப் பெறலாம்.

இதைக் காரைக்காலம்மையார் சொல்ல வருகிறார்.

இறைவனுடைய பராக்கிரமத்தை முதலில் சொல்கிறார் அவன் உலகினரைத் துன்புறுத்திய திரிபுராதிகளைத் தண்டித்தான். அவர்கள் ஆட்சிபுரிந்த மூன்று பறக்கும் கோட்டைகளாகிய திரிபுரங்களை அழித்து, அவர்களை ஆட்கொண்டான். தக்கனுடைய சாபத்தால் தேய்ந்த மதியைத் தன் வளரும் சடையில் வைத்துப் பாதுகாத்தான்.

*மதியா அடல் அவுணர் மாமதில் மூன்று*
*அட்ட மதி ஆர் வளர்சடையி னானை,*

அத்தகைய பெருமான் திருமேனியிலே எலும்புச் சட்டகம் அணிந்ததைக் கண்டு அறியாமையால் இகழக்கூடாது; மதியினால் அதன் உண்மையை உணர்ந்து போற்றி வழிபட வேண்டும். அவ்வாறு வழிபட்டுத் துதித்தால் அவர்கள் மறுபடியும் இந்த உலகில் எலும்புகளையுடைய தேகத்துடன் பிறக்கமாட்டார்கள்.

**மதியாலே என் பாக்கை யால் இகழாது ஏத்துவரேல்**
**இவ்வுலகில் என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு**

அவன் மும்மலங்களை அழிப்பவன் என்பதை அவன் திரிபுரசங்காரம் செய்த செயல், காட்டுகிறது. தன்னைச் சரண் அடைந்தாரைக் காப்பவன் என்பதை, அவன் மதியை அணிந்த செயல் காட்டுகிறது. அத்தகையவன் செயல்களை எண்ணினால் அவன் திருக்கோலத்தின் உண்மை புலப்படும். மதியின்மையால் மேலெழுந்தவாரியாகக் கண்டு இகழ்வார் உண்டு. அப்படிச் செய்தால் நன்மை பெற முடியாது. மதியினால் உண்மையை உணர்ந்து ஏத்த வேண்டும். இந்த உலகில் வாழும் போதே ஏத்திப் பரவ வேண்டும். அப்படிச் செய்தால் மறுபடியும் இங்கே பிறக்கும் அவல நிலை உண்டாகாது. எலும்பால் கட்டிய உடம்பாகப் பிறக்கமாட்டார்கள்.

**மதியா அடல் அவுணர் மாமதில் மூன்று அட்ட மதியார் வளர்சடையி னானை -**
**மதியாலே என்பு ஆக்கை யால் இகழாது ஏத்துவரேல் இவ்வுலகில்,**
**என்பு ஆக்கை யாய்ப்பிறவார் ஈண்டு**

தன்னை மதிக்காத, வலிமையுடைய அசுரர்களின் பெரிய மதில்கள் மூன்றை அழித்த, சந்திரன் தங்கும் வளரும் சடையை உடைய சிவபெருமானை, அவனணிந்த என்புச் சட்டத் தை (அறியாமையால்) இகழாமல், அறிவுத் திறத்தால் உண்மையைத் தெரிந்து புகழ்ந்து இவ்வுலகில் வழிபடுவார்களானால், அவர்கள் என்போடு கூடிய உடம்பாக இங்கே மீண்டும் பிறக்கமாட்டார்கள்.

மாமதில்மூன்று-இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களாலமைந்த மதில்களையு டைய திரிபுரங்கள். என்பாக்கையால் இகழாது, மதியால் ஏத்துவரேல் என்று கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். மதியின்மையால் இகழாது, மதியால் ஏத்துவரேல் என்று கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். மதியின்மையால் இகழாது என்று வருவித்துப் பொருள் கொள்க. இவ்வுலகில் ஏத்துவரேல் - ஏத்துதலைச் சொன்னாலும்உபலட்சணத்தால், மனமொழி மெய்களால் வழிபடுவதையும் கொள்ள வேண்டும். என்பு ஆக்கையாகிய தோற்றம் உடையவராய், ஈண்டு-இவ்வுலகத்தில்.!

இறைவனுடைய திருக்கோலத்தின் உள்ளுறையை அறிந்து வழிபட்டால் பிறவி நீங்கி நித்திய சுகத்தை அடையலாம் என்பது கருத்து.

இது **அற்புதத் திருவந்தாதியில்** 37 - ஆம், பாட்டு.

***இதை வழங்கியவர் நா. முருகையா***
***முகமாலை***

# யாழ்ப்பாணக்கலாச்சாரம்

யாழ்ப்பாணத்துக்கலாச்சாரம் கந்தபுராணமும் திருவாசகமும் கலந்த ஒன்றாகும். மார்கழி மாதத்தில் திருவெம்பாவை நடைபெறாத கோயில்கள் இல்லை என்றே கூறலாம். அதே போல கந்தபுராணம் படிக்காத கோயில்கள் இல்லை என்றும் கூறலாம்.

சைவாசாரசீலர்களாக விரதம் அநுட்டித்துக்கந்த புராணம் படிப்பதும், கேட்பதும் யாழ்ப்பாணத்தில் கண் கொள்ளாக்காட்சியாகும். குடுமிவைத்திருப்பவர்கள் புராணத்திற்குப் பயன் சொல்லுதல் தனி ஒரு காட்சியாகும்.

கந்த புராணத்தின் பயன் நன்றி மறவாமையாகும். சிவபெருமானிடம் எல்லா நன்மைகளையும், எல்லா வரங்களையும் பெற்றுக் கொண்ட சூரபத்மா, சிவபெருமானின் புத்திரன் குமரப்பெருமானை ஒப்புக் கொள்ளவில்லை. சிவபெருமான் செய்த நன்மைகளை எல்லாம் மறந்து கந்தப் பெருமானைப் பகைத்து நன்றி மறந்தவன் ஆனான். என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு என்ற குறளுக்கு இலக்கிய புருஷனாக இருந்தான் சூரபத்மா.

இக்குறளின் செம்பொருளைக்கந்த புராணம் படிப்போர், கேட்போர் எல்லாம் உணர வேண்டும். உணர்ந்து அதன் படிநடக்கவேண்டும். தமிழ்ச்சமுதாயப் பண்பாடு தருமம். தமிழ் மொழியின் பண்பாடுபற்றி இந்த இரண்டும் சேர்ந்த ஒன்றே யாழ்ப்பாணக்கலாச்சாரமாகும்.

கலியுகத்தில் இறைவனோடு தொடர்பு கொள்வதற்கு நாமசங்கர்த்தனம் ஒன்றே வழி என்றும் கான்கள் உறுதியிட்டுக் கூறியுள்ளார்கள்.இதனைக்கருதிற் கொண்டே மணிவாசகப் பெருமான் தாம் பாடிய சிவபுராணத்தில் முதன் முதலாக "நமச்சிவாய வாழ்க" என்று ஆரம்பிக்கின்றார். சிவபுராணத்தை சிவவழிபாடு செய்பவர்கள் எல்லோரும் பாராயண நூலாகக் கொள்வர்.

பஜனைகளில் சிவபுராணம் முழுவதையும் பாடுவதற்கு முடியாதவர்கள் "நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க" இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்ற இரு வரிகளையும் மாத்திரமாவது பாடுதல் மரபு. இருவரிகளையும் சொல்ல முடியாதவர்கள், ஒரு வரியையாவது சொல்வர். அதுவும் முடியாதவர் நமச்சிவாய வாழ்க என்று அரை வரியையாவது சொல்வர். அதுவும் முடியாதவர் நமச்சிவாய எனக் கால்வரியையாவது சொல்வர்.

மணிவாசகப் பெருமான் நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை எடுத்த எடுப்பிலேயே கூறியதன் தத்துவம் இதுவேதான். நமச்சிவாய மந்திரத்தின் விரிவுதான் சிவபுராணமே. சிவபுராணத்தின் விரிவே திருவாசகம் முழுமையுமாகும்.

யாழ்ப்பாணக்கலாச்சாரத்தை நன்குணர்ந்தவர்களே யாழ்ப்பாணத்தமிழர், யாழ்ப்பாணத் தமிழுக்கு உலகளாவியமதிப்பு இருப்பதுபோன்றே யாழ்ப்பாணக்கலாச்சாரத்திற்கும் உலகளாவிய மதிப்பு இருந்து வருகின்றது.

சுபம்.

# சிவயோக வேதம்

சைவநற் சிந்தனைகளிலே எல்லோருக்கும் இனிது விளங்கக்கூடிய சிந்தனை சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை. சிவதொண்டன் இதழிலே சுவாமிகள் மாதந்தோறும் "நற்சிந் தனை" என்ற தலைப்பிலே அரிய பாடல்களை எழுதிவந்தார்கள். இவை நற்சிந்தனை என்ற பெயரில் தொகுக்கப்பெற்று 1959ம் ஆண்டு சிவதொண்டன் சபையால் நூலாக வெளியிடப்பெற்றது. பின்னர் இத்தொகுப்பிலே இடம் பெறாத சுவாமிகளின் மேலும் சில பாடல்களைச் சேர்ந்த முழுமையான பதிப்பு ஒன்று 1962ல் வெளியிடப்பெற்றது. இன்று நற்சிந்தனை சிவயோக சுவாமிகளின் சீடர்களால் மட்டுமல்லாது ஏனைய சைவப் பெருமக்களாலும் விரும்பி ஓதப்பட்டு வரும் சிவயோக வேதமாக விளங்குகின்றது.

இதற்கு முக்கியமான காரணம் நற்சிந்தனையின் எளிமை. எல்லோருக்கும் விளங்கும் தமிழிலே பாடல்களைப் பாடியருளியிருக்கின்றார்கள் சுவாமிகள். ஒரு சில உதாரணங்கள்:

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில்.
நற்சிந்தனை பக். 37

ஒருவனே ஒரு மூவரும் ஆனான்
ஒருவனே எல்லா உயிர்களும் ஆனான்
ஒருவனே எல்லா உலகமும் ஆனான்
ஒருவனே என்னை உய்யவைத் தானே. பக். 210

நம்மிடம் எல்லா நலனும் உண்டு
நம்மிடம் எல்லா உலகமும்உண்டு
நம்மிடம் எல்லாக் கலகமும் உண்டு
நம்மிடம் எம்மைக் காண்பது தொண்டு. பக். 274

இவ்விதம் எந்தப் பாடலை எடுத்துக்கொண்டாலும் இலகுவான பழகுதமிழிலே கடின மான தத்துவங்களை எல்லாம் சாறாகப் பிழிந்து பருகத் தருகின்றார் சுவாமிகள். பாட்டு என்றால் விளங்காத மொழி என்று ஒதுக்கித்தள்ள வேண்டிய நிலை இங்கு இல்லை. சமயம் என்றால் புரியாத தத்துவங்கள் புதைந்த பாடம் என்னும் பயப்பாட்டுக்கும் இங்கு இடம் இல்லை. அள்ள வேண்டியதை அள்ளி, அதனுள்ளும் தள்ள வேண்டியதைத் தள்ளிக் கொள்ள வேண்டியதையே கொடுத்திருக்கின்றார். அதாவது, நல்ல பலாக்கனியைத் தெரிந்து எடுத்து, வெட்டிப் பிளந்து, பொச்சுகளைக் களைந்து, விதைகளையும் நீக்கிச் சுளைகளை எடுத்துச் சுவைத்துப் பார்த்துச் சிறந்தவற்றையே எமது வாயிலே வைக்கின்றார். சுவைக்கின்ற பொழுது கருத்துத் தெளிவோடு, செவிக்கும் இன்பம் பயக்கும் ஓசையும்எம்மைக் கவர்கின்றது.

அன்பர்தம் சிந்தையில் உறைவோனே
அரகர சிவசிவ மறையோனே

பொன்னே மணியே பூங்காவே
புலவர் எல்லாம்புகழ் எங்கோவே. பக். 230

ஈயாத புல்லரை நீ
வாயாரப் பாடாதே - தங்கமே
வாணாளைநீ பேணாதே
நாணாதேமனங் கோணாதே
காணாதேபணம் பேணாதே. பக். 305

போன்ற பாடல்கள் ஓசைச் சிறப்புக்கு நல்ல உதாரணங்கள்

எனினும் சில புலவர்களைப் போலக் கவித்துவத்தைக் காட்ட வேண்டும் என்ற நோக்கம் யோகர் சுவாமிகளுக்கு இருக்கவில்லை என்பதை அறிவோம். அவரது தெய்வ சிந்தனையில், தெளிந்த தேன்துளிகள் இவை. யோக நிலையில் அவர் உள்ளத்தில் பூத்த ஞானமலர்கள் நற்சிந்தனைப் பாடல்கள். படிப்பவர் உள்ளங்களைப் பக்குவப்படுத்த வல்ல மந்திரங்கள் சிவயோக வேதம்.

வாழ்க்கைக்கு உகந்த வளமான பல கருத்துக்களின் களஞ்சியமாக விளங்குகின்ற நற்சிந் தனையிலே சுவாமிகள் அன்பின் அவசியத்தை வலியுறுத்துகின்றார். அவ்வைப்பிராட்டி யாரின் அறத்தை நினைவுபடுத்துகின்றார். திருவள்ளுவரின் இல்லறத்தைப் போற்றுகின்றார். ஒற்றுமையாக வாழ வேண்டும் என்கிறார். சாதி சமய வேறுபாடு பாராது யாவருஞ் சமமென உணரவேண்டும் என்கிறார். மூத்தோர் வார்த்தை அமிர்தம் என்கிறார். செய்வன திருந்தச் செய், சீரோடு வாழ், சிவனோடு வாழ் என்று இந்த வையகத்தில் நாம் நலமுற வாழ்வதற்கு வேண்டிய வழிவகைகளை எல்லாம் சுவாமிகள் குருவாக நின்று போதிக்கின்றார்.

இவை எல்லாவற்றிலும் மேலாக, நற்சிந்தனையின் அடிநாதமாக விளங்குவது குருவழிபா டேயாகும். சிவபெருமான் பொருள்களிற் கலந்து நிற்கும் அதேவேளை அவற்றுக்கு வெளி யே மேலாகவும் நிற்பதைப் போல, நற்சிந்தனை முழுவதும் குருவழிபாடு இழையோடும். அதேவேளை அதன் தலையாய பொருளாகவும் மேலோங்கி நிற்கின்றது. முதலாவது பாடலே ''எங்கள் குருநாதன்'' என்பது. பத்துச் செய்யுள்கள் அடங்கிய இப்பாடலிலே சிவயோக சுவாமி கள் தமது குருநாத அனுபவத்தைக் கூறுகின்றார்.

என்னை எனக் கறிவித்தான் எங்கள் குரு நாதன்
இணையடி என் தலைவைத்தான் எங்கள் குரு நாதன்
அன்னை பிதா குருவானான் எங்கள் குரு நாதன்
அவனி எல்லாம் ஆளவைத்தான் எங்கள் குரு நாதன்
முன்னை வினை நீக்கி விட்டான் எங்கள் குரு நாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குரு நாதன்
நன்மை தீமை அறியாதான் எங்கள் குரு நாதன்
நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குரு நாதன்

என்பது முதலாவது பாடல்.

யோகர் சுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகள், செல்லப்பா சுவாமிகளின் குரு கடை யிற் சுவாமிகள். கடையிற் சுவாமிகளிடம் தாம் பெற்ற செல்வத்தைத் தகுதிவாய்ந்த ஒருவரி டம் கையளிக்க விரும்பினார் செல்லப்பா சுவாமிகள்.

யோகர் சுவாமிகள் மாவிட்டபுரத்திலே பிறந்தவர். கொழும்புத்துறையிலே வளர்ந்தவர். கிளிநொச்சியிலே வேலை பார்த்தவர்.

அக்காலத்தில் இடைக்கிடை மாவிட்டபுரத்துக்கு அவர் போய் வருவதுண்டு. மாவைக் கந்தனுடன் நல்லூர்க் கந்தனையும் வழிபடுவர். ஒருமுறை நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளின் பார்வையாற் கவரப்பட்டு அவர் பக்கம் சென்றார்.

செல்லப்பா சுவாமிகளுக்கிட்ட ஆட்கள் செல்வது குறைவு. அவரை விசர்ச் செல்லப்பா என்றே மக்கள் அழைத்தனர். உள்ளம் பக்குவம் இல்லாத சாதாரண மக்களுக்கு ஞானிகளுடைய செய்கைகள் விசித்திரமாகவே தெரியும். ஆனால் யோகநாதன் என்பவருக்கு அவ்விதம் தெரியவில்லை. அவரது உள்ளப்பக்குவம் செல்லப்பர் யார் என்பதை அறிந்து கொண்டது. கிட்டச் சென்றார். ஆரடா நீ என்றார் செல்லப்பர். அந்த அனுபவத்தை யோகர்சுவாமிகளே சொல்கின்றார்:

கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்
தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன்
ஆரடாநீ என்றான் அவன்.

சாதாரணமான ஒருவரை யாரடா நீ என்று யாராவது கேட்டால் என்ன நடக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். நீ யாரடா அதைக் கேட்க என்ற பதில் தான் உடனே வரும். இந்தச் சுடுசொற் கலப்போடு அடிகைக் கலப்பும் நடைபெறக் கூடும். இது உலகியல் வழக்கில் பொதுவானது. ஆனால் ஆன்மீக வியலில் இவ்வித அவசர புத்திக்கு இடம் இல்லை.

கேள்வி கேட்டவர் ஞானசீலர். சீவன் முத்தர். சீவன் முத்தர் என்றால் வாழும் பொழுதே முத்தியடைந்து விட்டவர் என்று பொருள். அவர் ஓடும், செம்பொன்னும் ஒக்கவே நோக்குபவர். அடா என்பதும் அடிகளே என்பதும் அவருக்கு ஒன்று தான். யோகநாதனும் பேணுதத்துவங்கள் என்னும் ஏணியிலே ஏறும் நிலையிலே நிற்பவர். ஆரடா நீ என்ற கேள்வியின் பொருளை உடனடியாகவே புரிந்து கொண்டார். "நான் ஆர் என் ஞானங்களார்" என்றார் மணிவாசகப் பெருமான். அவரைப்போல் இவரும் கேட்கத் தொடங்கினார். நான் யார்? நான் ஏன் இங்கு வந்தேன்? எமது பிறப்பின் பயன் யாது? அவ்வளவு தான். ஆரடா நீ என்னும் அந்தக் கேள்வியால் அவர் தன்னை அறிந்து கொண்டார். இதனையே "என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்" என்கின்றார்.

இந்த இடத்திலே நாமும் ஒன்றை ஊன்றிச் சிந்தித்தல் வேண்டும். நற்சிந்தனையைப் படிக்கின்றபொழுது, குருவினது வரலாற்றைச் சிந்திக்கின்றபொழுது நாமும் நமக்குத் தேவையான பாடங்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். குருவழிபாட்டின் பயனும் அதுவேயாகும். எங்களில் எத்தனைபேர் "தம்மைத்தாமே" அறிந்திருக்கிறார்கள்? பொதுவாகவே மற்றவர்களுடைய குறைநிறைகளைப் பற்றி அறிந்துகொள்வதில் இருக்கின்ற ஆர்வம், தம்மைப் பற்றி அறிவதில் இருப்பதில்லை. இது பல பேரிடத்திலேயுள்ள ஒரு குறைபாடு. தன்னுடைய குற்றதைக் கண்டு கொண்டு பிறர் குற்றம் காண்பவர் மிகவும் குறைவு.

தன்னுயிர் தான் அறப்பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்
என்றார் வள்ளுவர் பெருமான்! "தனது உயிரை - அதாவது தன்னை முழுமையாக அறிந்து

கொண்டவனை அவ்வாறு அறிந்து கொள்ளும் ஆற்றல் அற்ற ஏனைய உயிர்கள் எல்லாம் தொழும்'' என்பது இதன் பொருள்.

செல்லப்பா சுவாமிகள் யோகநாதனைக் கேட்ட கேள்வி எங்கள் எல்லோருக்கும் பொருந்தும். யார் நீ? இது பற்றி நாங்கள் சிந்தித்தல் வேண்டும்! நாளாந்தம் சிந்தித்தல் வேண்டும்.

என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்

என்றார் திருமூலநாயனார். இதேபோன்ற ஒரு நிலை யோகர் சுவாமிகளுக்கும் ஏற்பட்டது. தன்னை அறிந்தபின் குருவை அறிந்தார். குருவை அறிந்தபின் தன்னை மறந்தார். தன் நாமம் கெட்டார். விழுந்தனர் குருவின் விழுமிய பாதங்களில். இவர் தலை அவரின் காலடியில். செல்லப்பர் காலால் உதைத்துமிருப்பார். யார் கண்டது? அது யோகர்சுவாமிகளுக்கு இதமாக இருந்தது.

இணையடி என் தலைவைத்தான் எங்கள் குருநாதன் என்கின்றார். அந்த அளவிலேயே அவரது முன்னை வினையாவும் நீங்கின. அது மட்டுமன்று, திருவடித் தீட்சையால் தமது சக்திகளையும் செல்லப்பா சுவாமிகள் தமது மாணாக்கனுக்குப் பாய்ச்சிவிட்டார். அதனைத் தொடர்ந்து மூன்று நாட்கள் தொடர்ந்து நல்லூர்த் தேரடியில் தவம் இருந்து யோகநாதன் யோகசுவாமிகள் ஆனார். அவர் தமக்கு நேர்ந்த மாற்றத்தை - மலநீக்கத்தை "சுகம்'' என்றே குறிப்பிடுகின்றார்.

அந்த சுகத்தை அளித்தவன் கடவுளே என்பது அவரது அனுபவம். நல்லைக் குமரனே செல்லப்பர் வடிவில் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டதாக நற்சிந்தனையிற் பல இடங்களிற் குறிப்பிடுகின்றார். "ஈசனே நல்லை வாசனே, கதிரேசனே முருகேசனே'' என்று தொடங்கும் இசைப்பாடலில்

குஞ்சரி தெய்வானை வந்தடிதொழு குகனே
நற்றவர் அகனே சற்குருவே நீதஞ்சம்

என்று பாடுகின்றார்.

நல்லைக் குருமணியே போற்றி என்னும் பாடலில்

முனியே முனிவர் முழுமுதலே மூர்க்கனேனை ஆண்டு கொண்ட
தனியே தன்னொப் பாரில்லாத் தலைவா சகமீ ரேழுக்கும்
இனியாய் என்னை நீங்காத இறைவா நல்லைக் குருமணியே
புனிதா போற்றி புண்ணியர்கள் நண்ணும்நற்பொருளே போற்றி. பக். 21

என்று புண்ணியர்கள் நண்ணும் நல்லைக்குமரனே குருமணியாக வந்து மூர்க்க குணம் படைத்த தன்னை ஆண்டு கொண்ட செய்தியைத் தெரிவிக்கின்றார். திருப்பெருந்துறையிலே குருந்த மரத்தடியில் தம்மை ஆட்கொண்ட குருவை "கோகழியாண்ட குருமணி" என்றார் மணிவாசகர். யோகர் சுவாமிகள் நல்லூரிலே தேரடியில் தம்மை ஆண்ட குருவை நல்லைக் குருமணி என்கின்றார்.

முருகன் வேறு சிவன் வேறா? ஆறுமுகன் சிவபெருமானது மறுவடிவமல்லவா? அதனாலே தன்னை ஆண்டு கொண்ட குருவை, சிவனாகவும் காண்கிறார் யோகர் சுவாமிகள்

ஆறு வைத்ததும் நீயே அம்பிகை பாகனும் நீயே
கூறும் வேதமும் நீயே குற்றம் குறையுமெலாம் நீய
நீறு பூசினோன் நீயே நெற்றிமேற் கண்ணனும் நீயே
பேறு பெற்றவன் நீயே பின் என்னை ஆண்டதும் நீயே. பக் 145

குருவிடம் யோகர் சுவாமிகள் பெற்ற மற்றுமொரு தீட்சை வாசக தீட்சை. வாசக தீட்சை என்பது போதனையால் தீட்சை அளித்தல். இதுவும் நல்லூர்த் தேரடியிலேயே நடைபெற்றுள்ளது. செல்லப்பா சுவாமிகள் தமது மாணாக்கனுக்குப் போதித்த மகாவாசகங்கள் ஆறு. அவை

ஒரு பொல்லாப்பும் இல்லை -
முழுவதும் உண்மை -
நாம் அறியோம் -
யார் அறிவார் -
அப்படியே உள்ளது -
எப்பவோ முடிந்த காரியம் -

என்பன. இவை வேதவாக்கியங்கள். எல்லா விதமான விசாரணைகளுக்குமான விடைகள் அனைத்தும் இவற்றுள் அடக்கம். இந்த வாக்கியங்களை நற்சிந்தனையில் திரும்பத் திரும்ப எம்பொருட்டு எடுத்து ஓதுகின்றார் யோகர் சுவாமிகள். இவற்றை ஓதுவதால் ஆகும் பயன்களையும் ஆங்காங்கு குறிப்பிட்டுச் செல்கின்றார். உதாரணமாக,

ஒரு பொல்லாப்பும் இல்லை என்ற திருவாக்கை ஓதினால் இன்பமும் துன்பமும் ஒன்றாகத் தெரியும் பக்குவநிலை உண்டாகும்.

முழுவதும் உண்மை என்னும் பழுதில் வாக்கியம் பரகதி காட்டும்
நாம் அறியோம் என்ற நலந்திகழ் வாக்குச் சேமம் அளித்துச் சிவகதி ஆக்கும்.

ஆர் அறிவான் என்ற ஆசான் வாசகம் பேரறிவைத் தரும். அப்படியே உள்ளது என்னும் ஒப்பில் வாக்கு நல்லுணர்வை அளிக்கும்.

எப்பவோ முடிந்த காரியம் என்னும் வாக்கியம் பல இடங்களில் முடிந்த முடிவு என்று கூறப்பட்டுள்ளது. இதனை முறைப்படி சிந்தித்து ஓதிவரின் மாய இருள் மறையும்.

மாய இருளை நீக்குவதற்குக் குருவழிபாடு அவசியம். நற்சிந்தனையை ஓதுவதால் நாம் சிவயோக சுவாமிகளையும், அவரது குருவாகிய செல்லப்பா சுவாமிகளையும் வழிபடுகின்றோம். நற்சிந்தனை எமக்கு ஞானத்தை அளிக்கும். அது ஒரு கற்பகதரு.

நற்சிந்தை என்னும் நறுமலர்சேர் நன்மரமே
கற்பக தாருவெனக் காண். பக் 161

நற்சிந்தனை நல்ல அமுதம் போன்றது. அதை உண்டால் அதாவது படித்துச் சுவைத்தால் கற்கும் நெறி வேறு எதுவும் வேண்டியதில்லை. வானமுதத்தை உண்ட தேவர்களுக்கு நித்திய இன்பம் கிடைத்ததுபோல நற்சிந்தனையை ஓதிவருபவருக்கு நிம்மதி ஏற்படும்; நித்திய இன்பம் உண்டாகும்.

நற் சிந்தனையில் சுவாமிகள் அவ்வப்போது உரைநடையில் எழுதிய வாசகங்கள் சில இரண்டாம் பகுதியாகவும், கடிதங்கள் மூன்றாம் பகுதியாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. உரை நடைப்பகுதி இப்படித் தொடங்குகின்றது:

"நமது உயிருக்கு உயிராய் இருப்பவர் கடவுளே
ஆகையால் நாம் அவருடைய உடைமை
அவருடைய அடிமை
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே
நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது
நமக்கு ஒரு குறையுமில்லை
நாம் என்றும் உள்ளோம்
எங்கும் இருக்கின்றோம்
எல்லாம் அறிவோம்

இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களை போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக!"

என்று அறிவுறுத்துகின்றார் யோகர் சுவாமிகள். நற்சிந்தனையை அதிகம் ஓத நேரம் இல்லாதவர்கள் இந்த ஒரு பக்கச் சிந்தனையிலாவது நாளாந்தம் ஈடுபடுவார்களாக!

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கும் மங்களம்
ஒப்பில் குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

- சிவ தொண்டன் -

# சத்சங்கம்

ஆத்மஜோதி நா. முத்தையா

சத்சங்கம் என்றால் நல்லோர் கூட்டம் என்பது பொருள். சத்சங்கம் ஒன்றினாலேதான் இறைவனடியாரையும், இறைவனையும் தரிசிக்கமுடியும், இதில் நேர்முக சத்சங்கம் என்றும். மறைமுக சத்சங்கம் என்றும் இருவகை உண்டு. பெரிய மகான் ஒருவரோடு நேருக்கு நேராக தரிசிப்பது, சம்பாஷிப்பது நேர்முக சத்சங்கம் என்றும், பூதவுடல் மறைந்த வள்ளுவர், மணிவாசகர் போன்றவர்களின் நூல்களினூடாக அவர்களோடு இணக்கம் வைத்து கொள்வது மறைமுக சத்சங்கம் என்றும் பெயர் பெறும். திருக்குறளைப் படிக்கும் போது வள்ளுவரோடு சத்சங்கம் செய்கின்றோம். நமக்கு நேர்முக சத்சங்கம் கிடைக்கயில்லையே என்று எவரும் கவலைகொள்ளத் தேவையில்லை. பெரியோரின் நூல்களை கற்கும் போது அவர்களுடன் மறைமுக சத்சங்கம் செய்கிறோம்.

சத்சங்கம் செய்தால் கோவிலுக்குச் செல்ல மனம் உண்டாகும். கோவிலுக்குச் சென்றால் அவன் அடியாரோடும் கூடி நாம் பஜனைசெய்ய வேண்டி வரும். நாம ஜபத்தின் மூலம் தியானம் கிடைக்கும். தியானமே நமது மனோநிலை. இதனிலும் உயர்ந்த சாதனை வேறில்லை. இதனை ''அபிராமி பட்டர்'' தமது அபிராமி அந்தாதியில்.

கண்ணியது உண்புக கற்பது உன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன்னிரு பாதம்புயத்தில் பகலிரவாய்
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன் செய்த
புண்ணியம் ஏதோ என் அம்மே புவியேழையம் பூத்தவனே

என்கிறார் பகலிரவாய் நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து என்பதுதான் சத்சங்கம் எங்கள் எல்லோருக்கும் முதல் முதல் ஏற்பட்ட சாதனை சத்சங்கம் ஒன்றுதான். இதனைப்போல் இலகுவான சமய சாதனை வேறுயில்லை என்ற கூறலாம்.

மணிவாசகரை இறைவன் தொளாயிரத்து தொன்நூற்றொன்பது அடியார்கள் சூழ வந்து குருமூர்த்தி ஆகி ஆண்டுகொண்டான். இங்ஙனம் முறையாக ஆட்கொண்ட பின்னும் இறைவனிடம் பின்வருமாறு வேண்டுகிறார்.

உடையாள் உன்றன் நடுவிடுக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதினாலும்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரிவாய் பொன்னம்பலத்தொம்
முடியா முதலே என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே
என்று சிவபெருமானிடம் வேண்டுகின்றார்.

வள்ளலாராகிய இராமலிங்கம் சுவாமிகள். தமது 9வது வயதில் முருகப்பெருமானிடம் பின்வருமாறு வேண்டுகின்றார்.

'ஒருமையுடன் நினது திருமலரடியினை நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்

உள்ளொன்று வைத்துபுறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்''

நல்லாரைக்காண்பதும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பவும் நன்றே - அவரோடு
இணங்கி இருப்பதும் நன்று
என்பது ஔவையார் வாக்கு
தெளிவு குறிவின் திருமேனி காண்டல்
தெளிவு குறிவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குறிவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குரு உரு சிந்சித்தல் தானே

என்பது திருமூலரின் திருவாக்கு

''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைத்தமராக் கொளல்'' என்பது வள்ளுவன் வாக்கு இதனை பெரியார்கள் எல்லாம் நல்லோர் கூட்டுறவாகி சத்சங்கத்தையே வதந்து பேசியுள் ளார்கள்.

ஒருமுறை நாரதர் கண்ணனிடம் சென்றார். பகவான் ஏதோ ஒரு பாத்திரத்தை பார்த்துக் கொண்டிருந்தார். நாரதரைப்பார்த்தவுடன் அதை மூடி வைத்து விட்டார். நாரதர் அதனைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். பகவான் கொடுத்தார். நாரதருக்கு அப்பாத்திரம் முழுவதும் பூதாளி மயமாகக் காணப்பட்டது. கண்ணன் சொன்னான், இதுதான் அடியாருடைய பாததூளி அடியார்கள் இவ்வளவு உயர்ந்தவர்கள்? அப்படியானால் அடியார் பெருமையை எனக்கு விளங்க வையுங்கள் என்றார்.

இன்னும் ஒரு வாரத்தில் இந்த இடத்தில் உள்ள நாய் ஒன்று குட்டி போடும். அதனிடம் கேட்டுப் பார் என்றார். நாரதர் அங்கு சென்று குட்டியைத் தூக்கினார். குட்டி ''வாள்'' என்று கத்திக் கொண்டு கீழே விழுந்து இறந்து விட்டது பகவான் நாரதரிடம் பயப்படாதே. இன்னும் ஒரு மாதத்தில் இன்ன அந்தணர் வீட்டுக் கன்றுக்குட்டி பதில் செல்லும் என்றார். கன்றுக் குட்டியைத் தூக்கிய நாரதர் கேள்வி கேட்டவுடன் அதுவும் வீழ்ந்து இறந்தது. நாரதர் பதைத்து பகானிடம் ஓடினார். நாரதா பயப்படாதே இன்னும் மூன்று மாதத்தில் காசிராசனுக்கு பிறக்கும் குழந்தை பதில் செல்லும் என்றார். நாரதர் முன் கூட்டியே சென்று, காசிராசனுக்கு ஆண் குழந்தை பிறக்க போகும் செய்தியைக் கூறினார். குழந்தை பிறந்ததும் பொற்றாம்பாளத்தில் ஏந்தி நாரதரிடம் காட்டினர் குழந்தை நாரதரைப் பார்த்து சிரித்தது. என்ன சிரிக்கின்றாய்? என்னை இதற்கு முன் தெரியுமா? என்ன சுவாமி அதற்கிடையில் மறந்து வீட்டீர்களா? நாரதர் பலமா யோசித்தார். ஒன்றும் புலப்படவில்லை. குழந்தை பேசியது.

சுவாமி முதன்முதல் நாய்க்குட்டியாய் இருந்து போது சந்தித்தேன். அச் சந்திப்பால் பசுக் கன்றாய் பிறந்தேன். இரண்டாம் சந்திப்பால் பிறந்த உடனே பேசும் வாய்ப்புக் கிடைத் தது. உங்களிலும் பார்க்க பகவானிற்கு சிறந்த அடியார் யார் உளர் என்று குழந்தை பேசினான்.

நாரதர் ஓடிச் சென்று பகவானுடைய பாதத்தில் வீழ்ந்தார்.


அடியார் பெருமை அளப்பிரிது. ஒரு முறை ஔவையாரிடம் முருகப்பெருமான் உலகின் பெரியது எது? என்று கேட்டார் ஔவையாளர் பாடலிலேயே பதில் அழித்தார்.

பெரிது பெரிது புவனம் பெரிதே
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனோ கரியாமல் உந்தியில் பிறந்தேன்
கரியாமலோ அலைகடல் துயின்றோன்
அலைகடலோ குறுமனி கையுள் அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தான்
கலசமோ புவியில் ஒரு பிடி மண் புவியோ அரவினுக்கு
இருதலைப்பாரம் அரவோ உமையவள் நிறுகைவிரல்
மோதிரம் உமையவளோ இறைவரின் பாதி
இறைவரோ தொண்டருள் அடக்கம்
தொண்டர் தம் பெருமை உரைக்கவும் அரிதே

இப்படிப்பட்ட அடியார்கள் பெருமையை பெரிய புராணம் கூறுகின்றது. பெரியபுராணத்தில் 63 தனியடியார்களைப் பற்றியும் 9 தொகையடியார்களைப் பற்றியும் சேக்கிழர் பெருமான் விரித்துக் கூறுகின்றார். பெரியபுராணத்தை படித்தால் 72 நாயன்மார்களுடன் சத்சங்கம் செய்யலாம். மறைமுக சத்சங்கம் செய்வதற்கு பெரிய புராணத்தைவிட சிறந்தநூல் கிடையாது.

குரு லிங்க, சங்கம வழிபாடுகளில், சங்கம வழிபாடு மிகச்சிறபுடையது. ஒருமுறை விசுவாமித்திரருக்கும் வசிட்டடருக்கும் இடையில் சத்சங்மா? தவமா? சிறந்தது என்பது பற்றி ஒரு விவாதம் நடந்தது. வசிட்டர் சத்சங்கம் என்றார் விசுவாமித்திரர் தவம் என்றார். இருவரும் ஆதிசேடனிடம் சென்றனர்.

ஆதிசேடன் உங்கள் தவத்தினாலோ சத்சங்கத்தினாலோ எனது தலைப்பாரத்தை இன்னொரு தலைக்கு மாற்றுங்கள். அப்போ நான் ஆறுதலாகப் பதில் செல்லுவேன். விசுவாமித்திரர் தனது தவம் முழுவதையுமே ஈடாக வைத்தார். ஆதிசேடனின் பாரம் குறையவில்லை. வசிட்டர் தான் செய்த சத்சங்கத்தில் ஆயிரத்தில் ஒரு பகுதியை வைத்தார். ஆதிசேடனின் பாரம் குறைந்தது. ஆதிசேடன் வாய் திறக்காமலேயே சத்சங்கம் சிறந்தது என்பதை விசுவா மித்திரர் ஒப்புக்கொண்டார்.



நல்லை ஆதீனத்தில் பிறந்தநாள் நிகழ்வில் ஆத்மஜோதி அவர்கள்



ஏறாவூரில் வள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின்
ஆத்மஜோதி தியான மண்டப அடிக்கல் நாட்டு வைபவம். திரு.நா.முத்தையா
அடிக்கல் நாட்டுவதையும் திரு. சண்முகநாதன் பாலசுப்பிரமணியம்
அவர்கள் அருகில் நிற்பதையும் காணலாம்.

# திசை மாறிய பக்தர்கள்

பொதுவாக மக்கள் கோவிலுக்கும், கிறிஸ்தவ ஆலயத்துக்கும், மசூதிக்கும் உணவுப் பிச்சை கேட்கவே போகின்றனர். இக்காலத்தில் பரமபிதாவே எங்களது ரொட்டியை எங்களுக் குத்தாரும் என்று இந்துவோ, கிறிஸ்தவரோ, முஸ்லிமோ எவரும் பிரார்த்திக்கின் றனர். இவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு இலாபத்தை நோக்கியே மதவழிபாடு செய்கின்றனர். அறநெறிகள், மதக் கொள்கைகள் என்பன ஏதோ ஒரு இலாபத்தை நோக்கி ஏற்பட்டவை என்று பலர் கருதுகின்றனர். இத்தகையோர் கோவிலுக்குச் சென்று சிறிதளவு செல்வத்தை சாதனம் செய்து, அது பன்மடங்கு பெருகி மீண்டும் தமக்கே வருமென்று எதிர்பார்க்கின்றனர். வேறு விதமாகச் சொன்னால் செல்வந்தராகவும், புலன் நுகர்வு வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் சுலபமான இடம் ஆலயம் என விளம்பரம் செய்யப்படுகின்றது. பெரும்பாலான பக்தர்கள் கடவுளை அறியும் எண்ணமின்றியே தொழுகை இடங்களுக்கு யாத்திரை செய்கின்றனர். உண்டியலில் பணம் போடும் பக்தர்கள், இது நூறாகப் பெருகி எண்ணிடம் வரப்போகிறது என்றே எதிர்பார்க்கின்றனர். அது பெருகும் என்பது என்னவோ உண்மையே. ஆனால் வழிபாட்டின் நோக்கமே அதுவாக இருக்கக்கூடாது. கடவுளிடம் நாம் வியாபாரம் செய்யக்கூடாது. எல்லாவற்றையும் துறந்து அவருக்கு தொண்டாற்ற வேண்டும் அவ்வாறாயின், நமது வாழ்வு உண்மை வெற்றி பெறமுடியும். எவ்விதமான உலகலாபங்களையும் எதிர்பாராத வழிபாடே "தருமம்" என வேதங்கள் போதிக்கின்றன. பணம் இன்றி நான் வாழ்வது எவ்வாறு? என சிலர் கேட்கலாம் அது சரியே. நாம் பணம், பொருள் சேர்க்க வேண்டியது என்னவோ உண்மையே. ஆனால் நமது வாழ்வின் முழு இலட்சியமும், நோக்கமும் பொருளீட்டுவதாக ஆகிவிடக்கூடாதல்லவா! நமது உடல் பராமரிப்புக்கு எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவுக்கு பணம் சேர்ப்பதில் தவறில்லை. இது தடுக்கப்படவுமில்லை. ஆனால் இரவும் பகலும் இதையே நோக்கமாகக் கொண்டு பாடுபட வேண்டிய அவசியமென்ன? தேவையற்ற கடின உழைப்பை நிறுத்த எல்லோருமே முயலுகினறனர். புலனின்பத்தில் ஈடுபட்டுள்ள திருவாளர்கள் எவரும் சிறிது ஓய்வு கிடைத்தாலும் கூட நகரங்களை விட்டு ஓடிச்சென்று "ஓய்வின்பம்" துய்க்கின்றனர். இச்சிறு ஓய்வுக்கென பலரும் பல்லைக்கடித்துக்கொண்டு உழைக்க வேண்டியிருக்கின்றது. நாமேன் வாழ்வை சற்று எளிதாக்கிக் கொள்ளக்கூடாது? பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுவதைச் செவிமடுப்பதே நமது உண்மை இலட்சியமாக இருக்க வேண்டும். பகவத் கீதையில் கூறுகிறார் "எல்லாவிதமான கோட்பாடுகளையும் விட்டு என்னையே சரணடைவாய் நாள் உன்னை எல்லாத் தீய விளைவுகளிலிருந்தும் காப்பேன். பயப்படாதே" என்று இவ்வாறாயின் நமது பிரச்சனைகள் எல்லாம் தீர்க்கப்படும். உண்மையில் இறைவனிடம் பக்தியுடையோர் செல்வத்தை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை

**முத்துலிங்கம் நிமலகுமார்**
**தமிழ் ஸ்ரீ கிருஷ்ண பக்திக் கழகம்.**
**சுவிஸ் -**

# திருவாதவூரடிகள் புராணம்

கு.வி. மகாலிங்கம்

வித்துவான், சைவ சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர்

தண்ணார் தமிழளிக்கும் முதல் அமைச்சர் திருவாதவூரர் புத்தரை வாதில் வென்று தெய்வவாசகம் பொருள் என்று ஆடவல்லான் சோதியில் இரண்டறக் கலந்தவர்.

பூணொ ணாததோ ரன்பு பூண்டு பொருந்தி நாள் தொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாணம் எய்தி நடுக்க டலூர் அழுந்திநான்
பேணொ ணாதபெருந்து றைப் பொருந் தோணி பற்றியு கைத்தலும்
காணொ ணாத்திருக் கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே
- *திருக்கழுக்குன்றப் பதிகம்*

பெருந்துறையென்னும் பெயர்க்காரணம்: தமிழ் நாட்டு அரசனாகிய சுகுணபாண்டியன் ஆன்மநாத சுவாமிக்கும், சிவயோகாம்பிகையம்மைக்கும் நித்திய பூசை முதலியவை செய்யும் பொருட்டு இறக்க முத்திதரும் தலமாகிய (வட இந்தியத் தலமாகிய) காசியி னின்றும் முந்நூறு பிராமணர்களை வருவித்தான். அவர்கள் வந்து சேர்ந்தவுடன் அரசனும் சிவபுரத்தையடைந்து, அவர்களுக்குச் சன்மானஞ் செய்யக் கருதி 300 சுவர்ண (பொன்) தட்டங்களில் 300 பீதாம்பரம் வைத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாகக் கொடுத்துக் கொண்டு வரும் பொழுது ஒரு பீதாம்பரம் ஏற்பவரின்றி மிஞ்சவே அரசனும் அந்தணரும் திகைத்துப் பலகால் எண்ணியும் ஒருவர் குறையக் கண்டு மயங்கினார்கள்.

அப்போது பரம கருணாநிதியாகிய ஆன்மநாத சுவாமி குருந்த மரத்தினின்றும் ஓர் பிரமாண வடிவங்கொண்டு தோன்றி, அரசனுக்கு முன்வந்து எம்முடன் முந்நூறு என்னுந்தொகை நிரம்பிற்றன்றொ வென்று! மயக்கநிவிர்த்தி செய்து எஞ்சிய பீதாம்பரமும் பெற்று அவரோடு தாமுமொருவராய் வீற்றிருந்து விளங்கினார். அதனால் அவ்வான்ம நாதசுவாமிக்கு மூவாயிரத்தில் ஒருவர்போல் முந்நூற்றொருவர் என்னும் திருநாம முண்டாயிற்று.

அதன் பின் சுகுண பாண்டியன் அம்முந்நூறு பேருக்கும், முந்நூறு அக்கிராகாரங்கட்டு வித்துக் கொண்டு அச்சிவப்புரத்தை அவர்களுக்குச் சர்வமானியமாகப் பத்திரமும் பிறப்பித்துக் கொடுத்துவிட்டு மனையையடைந்தான். அவ்வர்ச்சகர்கள் சுவாமி கோயில் தொண்டுகளையும், அம்மைகோயில் தொண்டுகளையும், இராப்பகலிடையறாது செய்து கொண்டு வருதலினாலே தம் புத்திரர்களுக்கு வேதத்தியானம் செய்து வைப்பதற்குச் சமயமின்றித்துயரமுற்றுச் சுவாமியைப் பிரார்த்தித்திருந்தனர்.

அப்பொழுது தம் மெய்யடியார் வேண்டியபடியும் பரம் கருணைத் தடங்கராகிய ஆன்மநாதசிவம் ஓர் வயோதிகப் பிராமண வடிவங்கொண்டு அவ்வந்தணர்களுக்கு முன் எழுந்தருள, அது கண்ட அவ்வந்தணர் அவரை எதிர்கொண்டழைத்துக் கொண்டு, வந்திருத்தி உபசரித்து, அவரது வேதாந்திய வல்லமையைப் பரீட்சித்தறிந்து மகிழ்ந்து தம்

புதல்வர்களுக்கு வேதாத்தியானஞ் செய்து வைக்கும் உபாத்தியாராக அவரை நியமித்து அதற்கு வேதனமாக வீட்டுக்கொவ்வொரு நாள், முறையே முந்நூறு வீட்டுக்காரரும் அன்னபானாதிகள் கொடுத்துபசரித்துவர, உபாத்தியார் அப்பார்ப்பனப் பிள்ளைகளுக்கு வேதபாராயணத்தில் வேறொருவரும் நிகரில்லை என்னும்படி வேதமோதிக் கொண்டு வந்தார். அதனால் அவ்வான்ம நாதசுவாமிக்கு சத்தநாதருபாத்தியார் என்னும் திருநாமமுண்டாயிற்று.

கௌமார பாண்டியன் காலத்திலே இச்சிவபுரத்துக்கு அயலூரில் வசிப்பவனாகிய லுண்டாக்க னென்னும் குறு நிலமன்னனொருவன் இளம்பிராயமுடைய நெடு நிலவரசனாகிய அக்கௌமாரபாண்டியனது நட்புப் பெற்று, அதனால் வலிமையடைந்து வாழ்பவன் அச்சிவபுரத்தைத் தான் கவர்ந்து கொள்ளும்படி கருதி முந்நூற்றுவர் சன்மான பத்திரத்தோடும் சிவபுரத்தை மெல்ல மெல்லக் கவர்ந்து கொண்டான். அப்பொழுது பிராமணர்கள் வருந்தித் தங்கள் உபாத்தியாயர்களோடும், கௌமார பாண்டியனிடஞ் சென்று முறையீடு செய்ய அவ்வரசன் பிராமணர்களை நோக்கி அச்சிவபுரம் உம்முடைய தென்பதற்கு ஆட்சி சாட்சி சாதனம் என்னும் மூன்றினுள் ஒன்றேனும் இங்கே காட்டித் தாபிக்கக்கட வீர்கள் என்றான். அதற்குப் பிராமணர்கள் ஆட்சி இப்பொழுது இவனதாயிற்று. சாட்சியு மாயினுண்டு ஆயினும் இவன் கொன்று விடுவான் என்னும் அச்சத்தினாலே ஒருவரும் சாட்சியும் சொல்லமாட்டார். சாதனம் முன்னமே இவனால் உபாயமாகக் கவர்ந்து கொள்ளப் பட்டது. இனி நாம் செய்வதென்னை என்றார். அப்பொழுது பாண்டியன் பக்கத்திலிருந்த லுண்டாக்கனைப் பார்த்து இதற்கு நீ சொல்வது யாது? என்று வினவ, அதற்கு அவன் இவர்கள் சிவபுரம் தம்முடைய தென்று சாதிப்பார்களாயின் உலகில் முயலுக்குங்கோடுண்டு போலுமென்றான். அப்படியாயின் அச்சிவபுரம் உன்னுடையதென்பதற்கு நீ ஆதாரங் காட்டென்றுவினவ அவன் தொன்று தொட்டுள்ள ஆட்சியே எனக்காதாரம் என்று கூறினான்.

அதற்கு அனுபவம் சொல் என்று அரசன் கேட்க அவன் இரண்டு பனையளவு ஆழமாக வெட்டினாலும் சிவபுரத்தில் தண்ணீர் ஊறாது. இதுவே என்னனுபவமென்றான்.

அரசன் பிராமணர்களை நோக்கி இனி நீங்கள் உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்கள் என்று வினவ மற்றை அந்தணர் அதற்கு அனுபவஞ் சொல்ல முடியாமல் மயங்கும்போது உபாத்தியாயராகிய கிழப்பிராமணர், அச்சிவப்புரத்தில் மண்வெட்டிகொண்டு வெட்டினால் அவ்வெட்டு வாய் தோறும் நீரூறும். இதுவே நான் சொல்லும் அநுபவமென்று கையுயர்த்திக் கூறினார். தன்னெண்ணம் முழுதும் நிறைவேறிற்றென்று லுண்டாங்கன் சிரித்தான். பிராமணர்களெல்லாம் நெடுநாளாக நமது வீடுகள் தோறும் விலாப்புடைக்க உண்டு திரிந்த இந்த தடுமாறுகிழவன் யாது சொன்னார். வெட்டுவாய் தோறும் நீர்காட்ட வல்லானோ வென்று பதைபதைத்தார்கள். அப்போது சௌரபாண்டியன் ஐயரே நீர் சொன்னது உண்மை யா என்று மீளவும் கேட்க ஐயர் இது சத்தியம்! சத்தியம்! முக்காலுஞ் சத்தியம்! என்றார். அப்போது பாண்டியன் லுண்டாக்கனைப் பார்த்து இவர் சொல்லுவது உண்மையேயானால் அப்பாற் சிவபுரம் ஆருக்குரியது என்று கேட்க அவ்வந்தணர்களுக்கே உரியது என்றான்.

அறுபத்தாறு கோடி தீர்த்தங்களையும் அங்கே வரும்படி ஆன்மநாயகர் நினைந்தருளினார். அங்ஙனமே தீர்த்தங்கள் வந்தன. அங்ஙனமே தீர்த்தங்கள் வந்தமையால் நீர் தோன்றியது.

பின்பு பாண்டியன் பிராமணர்களை முன்னே அனுப்பிவிட்டுத் தானும் லுண்டாக்கன் பின்னே வரச்சென்று சிவபுரத்தையடைந்து, லுண்டாக்கனை மண்வெட்டு கருவியினால்

வெட்டும்படி பணிக்க, அவன் வெட்டும் மேட்டு நிலத்தை சார்ந்து வெட்டும்போது 66 கோடி தீர்த்தங்கள் அவன் முகம் கலங்கும்படி மோதிற்று. லுண்டாக்கன் மீளவும் வேறோரிடத்து வெட்டுதலும் முன்னையினும் மிக்க நீரூறிக் குதிகொண்டது. இப்படி அவன் வெட்டும் பொழுதெல்லாம் ஒரு காலைக் கொருகால் நீர் மிகப் பெருகுதலும் அவன் ஓய்வின்றி மேலும் மேலும் அச்சிவபுரமெங்கும் ஓடி ஓடி வெட்டினான்.

அப்போது வெட்டுவாய்கள் தோறும் ஊறிய நீர் பெருகிப் பெருகி ஒன்றுபட்டு எங்கும் பரந்து ஒரு பெருந்துறை என்னும் திருக்காரணப் பெயர் உள்ளதாயிற்றெனவறிக.

இப்படி இப்பிராமணர்கள் பொருட்டு வழக்காடி வென்று நாயகத் தன்மை அடைந்ததினால் ஆன்ம நாதசுவாமிக்கு, விப்பிரநாதர் எனும் திருநாமமுண்டாயிற்று. "மேலவெம் பிறவி வேலைதனில்" என்னும் செய்யுளிற் கூறிய பெயர் ஞானர்த்தம் பற்றிப் புனைந்துரை வகையான் வந்த பெயர் எனவறிக.

இன்னும் இத் திருப்பெருந்துறைக்கு அனாதி மூர்த்த தலம், சிவபுரம், ஞானகேந்திரம், குருந்தவனம், யோகவனம், தென்கயிலாயம், வேதபுரம், பவித்திர மாணிக்கபுரம், யோக பீடபுரம், பராசக்திபுரம், தேகவனம், ஆதிகைலை, திரிமூர்த்திபுரம், உபதேசபுரம், சோடசாந்தஸ்தலம் என்று பல திருநாமங்கள் உண்டு. இன்று ஆவுடையார் திருக்கோவில் என்றும் இது வழங்கப்படுகிறது. இவற்றின் காரணங்களையும் திவ்விய குருந்தவனயீசர் சரித்திரப் புகழ் மிக்க திருப்பணிகளின் அற்புதவேலைப்பாடுகளையும்நேரில் தரிசித்துத் திருவருள் பெற்றவர்கள் இது தேவைஸ்தபதி வேலைப்பாடு என்றே வியப்பர். இனி இங்கே வீற்றிருக்கும் ஆன்ம நாதசுவாமிக்கும் அநாதி மூர்தலேசர், பெருந்துறையீசர், சிவபுரேசர், ஞானகேத்தீரேசர், குருந்தவனனேசர், யோகவனேசர், தென்கயிலாயநாதர், வேதபுரேசர், பாலித்திர மாணிக்கபுரவாசர், யோகபுரவாசர், பராசத்திபுரவாசகர், ஆதிகைலாசநாதர், மும்மூர்த்திபுரவாசகர், உபதேசபுரநாதர், முன்னுற்றொருவர், பரமசுவாமி சக்குரு விப்பிரநாதர் என பல திருநாமங்கள் உள

மாதவர் மிகும்பதி புகுந்துழி மருங்கே.... நாதனுறைதண்டலை நன்குபுனை தொண்டரோதுறு சிவாகம வொலிப்பொலிவு கேளாயாதிஃதறிந்து துரை மினேவலர்க லென்றார்

பொருள்: திருவாதவூரடிகள் பெரிய தபோதனர்கண் மிக்கிருக்கும்அத்திருப்பதியின் கண் சென்றருளிய பொழுது பக்கத்தே பரமாச்சாரியார் வீற்றிருக்கும் பூஞ்சோலையில் எண்வகை பத்தகனையுடைய திருத்தொண்டர்கள் ஓதுகின்ற சிவாகமத்தினது சிறந்த ஒலியைக் கேட்டு, ஏவலாளர்களே இவ்வொலி யாது அறிந்து சொல்லுங்களென்று முதல்வராகிய ஆமத்தியகுல திருவாதவூரடிகள் சனை தோஷத்தை யொழித்து விச்சுவாதிகரராகிய எம் சிவபெருமான் திருவருள் செய்யுமிடமிஃதென்று கருதி தேவர்கள் ஆகாயத்தில் வந்து நின்று தோத்திரம் செய்யுமிடமென்றும், குணமருவு எண் வகை பக்தியிவையோரொட்டுமுடையர் பத்தரென அரிபிரமேந்திராதி தேவர்களும் வழிபடும் பரமாசாரியாரது தெய்வத்தன்மை பொருந்திய மகாசபையை நேரே கண்டார் எ-று.

# ஆத்மஜோதியும் மக்கள் பணியும்

## *சிவாசாரியர் சுவஸ்ரீ பஞ்சாக்ஷர வித்தியானந் குருக்கள்*

*ஜேர்மனி*

திரு.நா. முத்தையா அவர்கள் இலங்கை நாவலப்பிட்டியில் பல வருடங்களாக, மாணவர்களுக்குக்கல்வி கற்பிக்கும் ஆசிரியராகவும், ஆத்மஜோதி என்னும் சைவ சமய மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இவ்வகையில் கல்வித்துறை சமயத்துறை ஆகியவற்றில் தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் அளப்பரிய சேவை செய்தார். கல்வி கற்பிக்கும் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும், சைவ சமயத்துக்கான அவர் செய்துவந்த தொண்டு பல மடங்காயிற்று. இப்போது கைதடியில் சைவச் சிறுவர் சிறுமியர் அனாதை ஆஸ்ரமம் ஒன்றை நிருவகிக்கும் சபையின் ஸ்தாபக தலைவராகப் பெரும் தொண்டு ஆற்றிவந்தார்.

உலகம் முழுவதிலும் பரந்து வாழ்கின்ற சைவத்தமிழ் மக்களின் நன்மைக்காகவும், இந்து சமயத்தைக் கடைப்பிடிக்கின்ற ஏனைய மக்களின் பொருட்டும் திரு. முத்தையா அவர்கள் யு.எஸ். ஏ. கனடா, இங்கிலாந்து இந்தோனேஷியா, சிங்கப்பூர், மலேஷியா, மொரீஷியஸ் முதலிய பல நாடுகளுக்கும் விஜயம் செய்து சைவ சமயத்தைப் பற்றிய அரிய சொற்பொழிவுளை நிகழ்த்தி, அதனால் மக்கள் மிகவும் பயனடையச் செய்துள்ளார். அப்போது கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக சுவிஸ்லாந்தில் பல நகரங்களிலும் சைவத்தமிழ் மக்கள் மத்தியில் சைவ சமயப்பிரசங்கங்கள் செய்து மக்களுக்குச் சைவ சமய அறிவை ஊட்டி வந்தார். மக்கள் யாவரும் இறைவனைப் பஜனைப் பாடல்கள் பாடித் தொழுதலும், எல்லா ஜீவராசிகளிடத்திலும் அன்பு செலுத்தி அவர்களுக்கு உதவுதலும், ஆகிய வழிகளைக் கடைப்பிடித்தே மக்கள் தமது ஆன்ம ஈடேற்றத்துக்காகச் செய்யும் இலகுவான செயல் என்பதை வலியுறுத்துவதுடன், சைவ சமயம் சம்பந்தமாக மக்களின் சந்தேகங்கள் கேள்விகளுக்கு விளக்கம் விடைகளைத் தெளிவாக உடனடியாக வழங்குவதாகவும் அவரது பேருரைகள் உள்ளன.

பொதுவாக உலகெங்கிலும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலும், தமிழ்மக்களிடையே சைவ சமயம் பற்றிய சரியான தெளிவின்மை காரணமாக, சில புறச்சமயத்தவர்கள் தவறான கருத்துக்களைப் பரப்பி, வேலை வாய்ப்பு - நல்ல வதிவிடவசதிபெறுதல் - நிரந்தர வசிப்புரிமை பெற உதவுதல், நோய் துன்பம் நீக்குதல் முதலான பல அற்ப சலுகைகளை முன்வைத்து, சைவ சமய மக்களைத் தமது சமயத்தை விட்டு புறச்சமயத்துக்கு மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இறைவனின் அவதாரமாகவுள்ள ஸ்ரீ பகவான் சத்ய சாயி பாபா. மக்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களானாலும் தத்தமது சமயக்கோட்பாடுகளைச்

சரியாகக் கடைப்பிடிப்பதுடன், தாம் நியமமாக வழிபடும் கடவுளின் நாமத்தை இடைவிடாது ஜபம் செய்தல் பஜனை செய்தல். பிறருடன் அன்பாகப் பேசுதல் - பழகுதல், அவர்களுக்கு உதவி செய்தல் முதலானவற்றைச் செய்வதுடன், மற்ற சமயங்களை இகழாதிருத்தல் என்னும் அறிவுரைகளையும் சர்வமத சம்மதக் கொள்கைகளையும் மக்களுக்குப் போதித்து வருவதை இங்கே சுட்டிக்காட்டுதல் அவசியமாகிறது.

இந்நிலையில் திரு. முத்தையா அவர்கள் சுவிஸ்லாந்தில் ஆற்றிவந்த சைவ சமயப் பிரசார சேவை மிகமிகப் பெறுமதி வாய்ந்ததாக உள்ளது. ஐரோப்பாவில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, டென்மார்க்ல் நெதர்லாந்து, முதலான இடங்களி, திரு. முத்தையா அவர்களின் சைவ சமயப் பிரசார சேவை இடம்பெறாத, நாடுகளாக உள்ள சைவ சமய ஸ்தாபனங்கள், வழிபாட்டு நிலையங்கள் சைவ ஆலயங்கள், திரு முத்தையா அவர்களை அவ்விடங்களுக்கு அழைத்து மக்களை ஆன்மீக முன்னேற்றம் பெறும் வகையில் செயலாற்றுதல் மிக நன்மையாகும்.

திரு. முத்தையா அவர்கள் தமது மூப்பு, உடல்நலிவு, ஐரோப்பிய நாடுகளில் உள்ள குளிர் பழக்கமில்லாத சூழ்நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது இவ்விடங்களுக்குச் செல்ல முன் வந்துள்ளதற்காக சைவத்தமிழ் உலகம் அவருக்கு மிக்க நன்றி உள்ளதாகும், எங்கு சென்றாலும் அவர் வேட்டி மேலங்கி ஆகிய ஈழத்தமிழ் தேசிய உடைகளையே அணிதல் குறிப்பிடத்தக்கது. அவருக்கு இறைவன் முக்தி நிலையையும் நற்பேற்றையும் அளிக்க எம் இறைவனை பிரார்த்திப்போமாக.

*ப. வித்தியானந்த குரு*

# ஆத்ம ஜோதியும் மக்கள் பணியும்

சிவ. முத்துலிங்கம்

நமது ஈழம் தந்த சமயப் பெரியார்களில் ஐயா அவர்கள் தனித்துவமானவர். தனக்கென்று ஒரு வழிசமைத்து மக்களை வழி நடத்தியவர். ஐயாவின் உள்ளம் ஒரு பரந்த உள்ளம். ஐயாவின் உள்ளத்திலே ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரன் என்ற ஏற்றத்தாழ்வு இல்லை. அதனால் தான் போலும் தன் 21வது வயதிலே ஆசிரியப்பணியை மலையகத்திலே பாமர மக்களுக்கு மத்தியில் ஆரம்பித்தார். தன் அளவிடமுடியாத அன்பினாலும், ஆளுமைத் திறமையாலும் இயல்பாகவே கைவரப் பெற்ற நாவன்மையினாலும் ஆயிரக்கணக்கான உள்ளங்களைக் கவர்ந்தார்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் இன்னும் அவரை ஞானகுருவாகவும், நல் ஆசானாகவும் மேன்மை பொருந்தி ஆன்மீக வழிகாட்டியாகவும் போற்றுகின்றார்கள். ஐயா அவர்கள் மலையக மக்களை ஆன்மீக நெறியில் உயர்த்தும் கலங்கரை விளக்கமாக 1939ம் ஆண்டு தொடக்கம் 1983ம் ஆண்டு வரை செயற்பட்டார். 1948ம் ஆண்டு அவரால் ஆரம்பிக்கப் பட்ட ஆத்மஜோதி பத்திரிகை இன்றும் எமது மக்களுக்கு மத்தியில் வீறு நடை போடு கின்றது.

ஆத்மஜோதி அச்சகத்தை ஆரம்பித்து, அரும்பெரும் நூல்களை அச்சேற்றிய ஐயா அவர்கள் ஆத்மீகப் பொக்கிசங்கள் எனப் போற்றக்கூடிய பல நூல்களைத் தானும் எழுதி வெளியிட்டார். அவற்றில் ஈழத்துச்சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம், ஏழாலை தத்துவக் கதைகள் ஆகிய நான்கு நூல்களுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. பெரியார் எழுதிய பன்னிரு மாதநினைவுகள், இலங்கை இந்து கலாச்சார திணைக்களத்தினால் பாடத்திட்ட நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பன்னிருமாத நினைவுகள் என்ற நூல், ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையினரால் கனடாவில் மறுவெளியீடு செய்யப்பட்டுள்ளது. பன்னிரு மாதங்களிலும் உள்ள விரதங்கள், பண்டிகைகளை விபரிக்கும் இந்த நூல் தமிழ்ப் பேசும் இந்து மக்களுடைய வீடுகளை அலங்கரிக்க வேண்டிய நூலாகும்.

பெரியார் அவர்கள் தன் அடியார்கள் புடைசூழ மலையகத்தில் தோட்டம், தோட்டமாக ஏறிச்சென்று பாமர மக்களிடையே இறை உணர்வை ஊட்டினார். இறை நாமங்களை அவர்கள் நாவிலே தவழச் செய்தார். நடைமுறைக் கல்வி, சுகாதாரம், பண்பாடு, ஒழுக்கம் போன்றவற்றையும் சிறுவர்கள் முதல் வயது முதிந்தவர்கள் வரை போதித்தார். எல்லாவற்றுக்கும் மேலாக அன்பு, தொண்டு மனப்பான்மை, வாழ்க்கையின் குறிக்கோள் இறைசிந்தனை ஆகியவற்றையும் மக்களின் உள்ளங்களில் பசுமரத்தாணி போலப்பதியச் செய்தார். அவருடைய ஆளுமைத் திறமையாலும், சீரிய பண்பினாலும் அன்பு மிகுந்த வழிநடத்தலினாலும் ஆட்கொள்ளப்பட்டவர்கள் பலர். கனடாவில் அவரின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்ற மலையகத்தில் வாழுகின்ற அடியவர் ஒருவர் "என் ஞானகுருவே என்னைத் தவிக்கவிட்டு எங்கே சென்றீர்" என்று அழுது புலம்பிய செய்தியையும் கேள்விப்பட்டோம்.

1983ம் ஆண்டு யூலை மாத இனக்கலவரத்தின் பின்பு நாவலப்பிட்டியை விட்டு இடம் பெயர்ந்த பெரியார் அவர்கள், தென்மராட்சியில் சாவகச்சேரியில் வாழ்ந்து கொண்டு தன் ஆத்மீகப்பணியைத் தொடர்ந்தார். யாழ் மாவட்டத்தில் பல கிராமங்களில் சத்சங்க வட்டத்தை அமைத்து கூட்டு வழிபாடுகளை ஊக்குவித்தார்.

போர்க்காலச் சூழலில் வடமாகாணம் முழுவதும் (வன்னிப் பிரதேசங்கள் உட்பட) தன் அடியார்களை இணைத்துக்கொண்டு பாத யாத்திரை செய்தார். பௌத்த சமண மத ஊடுருவல்களினால் சீரழிக்கப்பட்ட தமிழ்ச் சமுதாயத்திற்கு மத்தியில், தமிழ் நாட்டில் ஆறாம், ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் சமயகுரவர்கள் தோன்றித் தங்கள் அடியார்கள் புடைசூழ ஆலயங்கள் தோறும் பாத யாத்திரை சென்று, திருமுறைகளைப் பாடி சைவத்துக் கும் தமிழுக்கும் புத்துயிர் ஊட்டினார்கள். அதேபோல் பெரியார் அவர்களும் நமது ஈழத்தில் போக்காலச் சூழலில் அடியார்கள் புடைசூழப் பாத யாத்திரை செய்து தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். தன் இளம் வயது தொடக்கம் நல்லூர் முருகன் தேர்த்திருவிழாவின் போது, தன் குலதெய்வமான ஏழாலை பாதாள ஞானவைரவர் கோவிலில் இருந்து நல்லூருக்குப் பஜனைப் பாத யாத்திரையை முன்னின்று நடத்தினார். அதேபோல் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில், நல்லூர் முருகன் திருவிழாக் காலத்தில் பஜனைப் பாத யாத்திரையை முன்னின்று நடத்தினார். இன்றும் அவர் வழிவந்த அடியார்களினால் மேற்குறிப்பிட்ட பஜனைப் பாத யாத்திரைகள் பக்திசிரத்தையுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

இல்லங்கள் தோறும் கூட்டு வழிபாடுகளை நடத்தினார். ஆலயங்கள் தோறும் திருமுறைப்பஜனைகளை நடத்தினார். திருவாசகம் முற்றோதல், புராணபடனங்களை நடத்துதல் போன்றவற்றுக்கு ஆர்வலர்களை ஊக்குவித்துத் தானும் பங்கு பற்றினார். உலக நாடுகளில் நடைபெற்ற பல சமய மகாநாடுகளுக்குச் சென்று வரலாற்றுப் புகழ்மிக்க சொற்பொழிவுகளை ஆற்றினார்.

புலம் பெயர்ந்து வாழும் எமது தமிழ் மக்களுக்கு மத்தியில் சைவமும் தமிழ்ப் பண்பாடும், கலாச்சாரமும் என்றென்றும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக அயராது உழைத்தார். இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள் வாழ்ந்து, பல தமிழ் சமய வகுப்புக்களை ஆரம்பித்து நடத்துவித்தார். இன்றும் இந்தோனேசியாவில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சுவாமிகளின் ஆன்ம சக்தியினால் ஈர்க்கப்பட்டு, அவரின் திருவுருவப் படத்தைத் தங்கள் வீடுகளில் சுவாமி அறைகளில் வைத்துக் குருவாக வழிபடுகின்றார்கள்.

பெரியார் அவர்கள் சமய வளர்ச்சி என்பது வெறும் சமயச் சடங்குகள் அல்ல என்று மக்களுக்கு மத்தியில் சமய விழிப்புணர்வும் ஆத்மீக சிந்தனையும், சமூக மறுமலர்ச்சியையும் வித்திட வேண்டுமென்பதில் அக்கறை காட்டினார். பெரியாரின் வழி ஒரு தனி வழி மக்களின் வழியில் சென்று மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து, அவர்களுக்கு ஆன்மீக சிந்தனையை அவர் புகட்டினார்.

எமது தாயகத்தில் பரந்துபட்டரீதியில் சமயப் பணியை ஆற்ற வேண்டுமென்பதற்காகப் பல ஆர்வலர்கள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்த, யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைக்குத் தலைவராக விளங்கினார். போர்க்காலச் சூழலில் அநாதைகள் ஆக்கப்படும் தமிழ்ச்சிறார்க ளைப் பேணிவளர்க்க வேண்டுமென்பதற்காக, கைதடியில் உள்ள அநாதரவானச் சிறுவர் இல்லத்தைப் பொறுப்பெடுத்து, சைவச்சிறுவர் இல்லம் எனப் பெயரிட்டு அநாதரவான

பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் தாயாகவும் இருந்து உதவினார். சைவச் சிறுவர் இல்லப் பிள்ளைகளை வளர்ப்பதற்காக வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து பெருந் தொகையான பணத்தைச் சேர்த்து நிரந்தர சேமிப்புக்கணக்கில் இடுவித்தார். மேற்படி பணத்தைச் சேகரிப்பதற்கு அவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையும் கணிசமான பங்களிப்பை அளித்தது.

ஐயாவின் வருகையினால் கனடா மண் புனிதம் அடைந்தது. கனடாவில் எமது மக்களுக்கு மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. அவருடைய வருகைக்குப் பின்பு பல சமய, தமிழ் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. சுவாமிகளின் நல்லாசிகளினால் ஆட்கொள்ளப் பட்டவர்களில் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரமும், அடியார் விபுலானந்தாவும் குறிப்பிடத்தக்கவர்கள். மேற்குறிப்பிட்ட இருவரும் பல நூற்றக்கணக்கான பிள்ளைகளுக்கு சமய, தமிழ் வகுப்புக்களை நடத்தி வருகின்றார்கள். இறுதியாக 1995ம் ஆண்டு சிவபதம் அடைந்தபொழுது பெரியார் அவர்கள் டாக்டர் ஆதிகணபதியின் இல்லத்திலே தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அடியார் விபுலானந்தாவும் பெரியாரால் ஆரம்பிக்கப்பட்ட இந்து சமயப் பேரவையின் ஆரம்பகாலச் செயலாளர் என்பதையும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். சரஸ்வதி கணேஸ்வரனை பிரதம ஆசிரியராகக் கொண்டு செயற்படும் இராமகிருஷ்ண சேவாச்சிரம தமிழ்ப் பாடசாலையையும் ஞானசுரபி அவர்கள் தான் தொடக்கி வைத்தார். மொன்றியலிலும் அவரின் அடியார்களினால் ஆத்மஜோதி கல்வி நிலையம் என்ற பெயரில் நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு தமிழ், சமய வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் ஆன்மீக வள்ளலின் வருகையினால் கனடாவில் சமய மறுமலர்ச்சி ஒன்று ஏற்பட்டதென்னும் கூற்று மிகையானதல்ல!

மக்களை நாடி இல்லங்கள் தோறும் சென்று கூட்டு வழிபாடுகளை நடத்திய ஆன்மீக வள்ளல் அவர்கள், சிறுவர்களின் நாவில் நாமஜெபத்தை தவழவிட்டார். ஆன்மீக ஆர்வலர்களை ஒன்று சேர்த்து பல அந்தர் யோக நிகழ்ச்சிகளை தன் கால்பதிந்த இடங்களெல்லாம் நடத்தி மக்களின் அக இருளைப் போக்கினார். அவர் நாங்கள் வாழுகின்ற காலத்தில் வாழ்ந்தது நாம் செய்த தவப்பயனே.

பேரன்புக்குடைய ஆத்மஜோதி அவர்கள் அணையா ஜோதியாக தமிழ் கூறும் நல் உலகெல்லாம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். தன் வாழ்நாள் முழுவதும் தமிழ் மக்களுக்காக ஆன்மீகத்தை வாரி வழங்கிக் கொண்டிருந்த ஆத்மஜோதி அவர்களின் ஆத்மீக ஒளி அவரின் பக்தர்களின் சிந்தனைகளில் கலந்து அவர்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறது. இன்னும் தான் விட்டுச் சென்ற பணிகளை பூரணப்படுத்துவதற்குச் சூட்சும நிலையில் இருந்து தன் அடியவர்கள் மூலம் முயன்று கொண்டிருக்கிறார். ஆத்மஜோதி சுவாமிகளின் திருவுருவத்தை இடைவிடாது சிந்தித்தாலே, மனத்தில் சாந்தி ஏற்படுவதாக அவருடைய நெருங்கிய பக்தர்கள் கூறுகின்றார்கள். ஆத்ம ஜோதி சுவாமிகளின் நாமம் வாழ்க!

***ஓம் சாந்தி சாந்தி சாந்தி,***
***(இக்கட்டுரை பெரியார் ஆத்மஜோதியின் ஆறாவது வருடத்தை நினைவுகூரும் முகமாகப் பிரசுரிக்கப்படுகிறது.)***

## ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்புகள்

**பிறப்பின் சிறப்பு**

நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம் பைத்தி ருக்கரக் கோயிலான்
தன்கடன் அடி யேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே

என்னும் அப்பர் சுவாமிகளின் வாக்குக்கேற்பப்பணி செய்து கிடக்கும் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் 1918 ஆம் ஆடு வைகாசி மாதம் 25 ஆம் திகதி ஏழாலை கிழக்கில் பிறந்தவர். தந்தையார் நாகமணி: தாயார் பொன்னுப்பிள்ளை. "மணியும் பொன்னும் சேர்ந்து முத்தொன்றைப் பெற்றெடுத்திருக்கின்றன" என்று பிரபல எழுத்தாளர் நந்தி அவர்கள் முன்னொருபோது இவரைப் பாராட்டியது மிகவும் பொருத்தமானது.

ஈழத்து வடபால், யாழ்ப்பாணக் குடா நாட்டின் மத்தியில் அமைந்துள்ள ஏழாலை, இன்பத் தமிழும் இயற்கை அழகும் குலவிக்கொழிக்கும் இனிய கிராமம். ஆறில்லாது போனாலும் அழகு பாழாகாத ஊர். அறிஞர்களால் ஊறிய புகழாறு பாய்ந்து பொலிவு செய்யும் பொற்பதி. சி. வை. தாமோதரம்பிள்ளை (கி.பி. 1832-1901) முதலாகத் தமிழுக்கு உழைத்த ஏழாலை அறிஞர்கள், பண்டிதர்கள் பலர். ஆயின், சைவசமயத்திற்கென்று தன்னையே முற்று முழுதாக அர்ப்பணிக்கக்கூடிய ஒரு பெருமகனை ஏழாலை பெற்ற தென்றல், அவர் முத்தையா ஒருவர் தான். காசிவாசி செந்திநாதையர் அவர்களைப் பெற்ற குப்பிளான். சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, அவர்களைப் பெற்ற மல்லாகம், ஆகிய பக்கத்துத் தோழியர்களைப் போன்று ஏழாலை நங்கையும் ஈன்ற பொழுதிலும் மேலாக உவந்ததுருகும் அளவுக்குத் திரு. முத்தையா அவர்களின் சமயப்பணிகள் ஈழத்தில் மட்டுமல்லாது உலகளாவிய வகையில் பரந்து சிறந்து விளங்குகின்றது.

**கல்வியும் தொழிலும்**

மாணவர் முத்தையா கத்தோலிக்கப் பாடசாலை. மைலணி சைவ வித்தியாசாலை ஆகியவற்றில் தமது ஆரம்பக்கல்வியை முடித்துக் கொண்டு, திருநெல்வேலி முத்துத்தம்பி சாதனா பாடசாலையில் ஆசிரிய தராதரப்படிப்பை மேற்கொண்டார். தராதரப்பரிட்சையிற் சித்தியெய்தி 1937 ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயின்று

1939ல் ஆசிரியராகும் தகமையுடன் வெளியேறினார். இக்கலாசாலையில் படிக்கும் காலத்திலேயே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பக்குவப்பார்வை இவர் மீது விழுந்தது. 1939 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி நாவலப்பிட்டியிலுள்ள புனித மேரிஸ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். 1948ல் நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயத்திற்கு மாற்றம் பெற்று 1976ல் ஓய்வு பெறும் வரை அங்கேயே கடைமையாற்றினார். 1960ல் இருந்து 1976 வரை அவ் வித்தியாலயத்தின் அதிபராகப் பணிபுரிந்தார்.

பல ஆசிரியர் மாணவர் மத்தியில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலை நாட்டக் கடுஞ் சொற்களையும் பிரம்பையுமே பாவித்து வந்த அந்தக்காலத்தில், முத்தையா அவர்கள் புன்முறுவலையும் அரவணைப்பையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தினார். ஆசிரியர்களைக் கண்டால் பயந்து ஓடுகின்ற காலத்தில், அன்பாலும் பண்பாலும் ஆசிரிய - மாணவ நல்லுறவை வளர்த்துக் கற்பித்தல் முறையில் சலசலப்பற்ற புரட்சி ஒன்றை ஏற்படுத்திய பெருமை இவரைச் சாரும். இதனால் இவரைச் சுற்றி மாணவர்களை எப்பொழுதும் காணக்கூடியதாக இருந்து. நாவலப்பிட்டித் தமிழ் உலகில் முத்தையா என்ற சொல் எல்லோரது நாவிலும் மட்டுமன்றி மனதிலும் இடம் பெறலாயிற்று.

ஆசிரிய சங்கங்களிலும் அதிக ஈடுபாடுகொண்டு ஆசிரியர்களையும் வழிப்படுத்தத் தொடங்கினார் முத்தையா அவர்கள். 1942 முதல் நாவலப்பிட்டி ஆசிரியர் சங்கச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். சில ஆண்டுகளின் பின் சங்கம் அவரைத் தலைவராகத் தெரிவு செய்து இளைப்பாறும் வரை அவரையே தலைவராகத் தொடர்ந்து வைத்திருந்ததில் பெருமை கண்டது. 1945 ஆம் ஆண்டு மத்திய மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் பதவியினையும் ஏற்றார். அதனைத் தொடர்ந்து அதன் முன்னேற்றத்திற்காகப் பலவாறு உழைத்துப் பிற்காலத்தில் அதன் தலைவராகவும் இளைப்பாறும் வரை பணியாற்றினார்.

**சமயப் பணிகள்**

முத்தையா அவர்களின் சமயப்பணி மிகச் சிறுவயதிலேயே ஆரம்பமாகி விட்டது எனலாம். இவரது பெற்றோர் செம்மனச் செல்வர்கள், சிவபக்த சீலர்கள். பசுப்பாலைக் காசுக்கு விற்றல் பாவம் எனக்கருதி இலவசமாக வேண்டுவோர்க்கு கொடுத்துதவி வந்த பரம்பரையைச் சேர்ந்த பாற்பண்ணைக் கமக்காரர்கள். ஏழாலை கிழக்கில் இலந்தைகட்டி என்னும் திருவிடத்தில் எழுந்தருளி இருக்கும் ஞான வைரவர் இவர்களது குல தெய்வம். இவ்வாலயத்தில் சிறு வயதிலிருந்தே சரியைத் தெண்டு புரிவது முத்தையா அவர்களின் வழக்கமாகும்.

புராணம் படித்தல், சமயச் சொற்பொழிவாற்றல் போன்ற பணிகளில் ஈடுபட்ட போதிலும், முத்தையா அவர்களுக்கு மிகவும் விருப்பமான வழிபாட்டு முறை கூட்டுப் பிரார்த்தனையாகும். கூட்டுப் பிரார்த்தனையைத் தமது கிராமத்தில் அடிக்கடி நடத்தி அதனை வளர்த்தெடுத்த பெருமை இவரைச் சாரும். 1958 ஆம் ஆண்டில் நல்லூர் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா வன்று இலந்தைகட்டி ஞானவைரவர் ஆலயத்தில் இருந்து நல்லூருக்கு நடை பஜனையைத் தொடக்கி வைத்துடன் ஆண்டுதோறும் அதனைத் தவறாது பக்தி பரவசத்துடன் முன்னின்று நடத்தியும் வந்துள்ளார். 1965 ஆம் ஆண்டு இலந்தைகட்டி ஞான வையிரவர் ஆலயத்தில் உயிரப் பலி இடுவதைத் தடுத்து நிறுத்திய பெருமை இவருக்கு உரியது. வாக்குவாதங்கள் கலவரங்கள் எதுவும் இன்றி சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்ட இப்பிரச்சனை ஊர் மக்கள் இவர் மீது கொண்டுள்ள மதிப்பை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

சமய அறிவும் அவர்களுக்கு மிகவும் குறைவாகவே இருந்தது. இந்நிலைமைகளை நன்கு அறிழந்து முத்தையா அவர்கள் ஆறு சமயப் பள்ளிகளை அங்குள்ள ஆர்வலர்களின் உதவியுடன் தோற்றுவித்தார். பூபால்கந்தை அவரி.மோடன், பசுண்டால் ஆகிய இடங்கில் அப்பள்ளிகள் அமைக்கப்பெற்றன, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் இவ்விரு ஆசிரியர்களாக ஓரளவு தமிழ் பேசத் தெரிந்த பன்னிரண்டு ஆசிரியர் கற்பித்தற் பொறுப்புக்களை ஏற்றனர். இவர்களுக்கு கற்பித்தல் முறையிலும் இந்து சமயத்திலும் தமிழ் மொழியிலும் முத்தையா அவர்கள் பயிற்சி அளித்தார்கள்

1984 - 1986 ஆம் ஆண்டுகளில் இந்தோனேசியாவில் இவர் தங்கியிருந்து தம்மால் ஆரம்பித்து வைக்கப் பெற்ற சமயப் பள்ளிகளின் வளர்ச்சிக்கும், மக்களின் ஆன்மீக நன்மைப்பாடுகளுக்கும் அயராது உழைக்கலாயினர், வழக்கம் போலப் பஜனைகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். இவ் வழிபாடு (1) குடும்பப் பிரார்த்தனை (2) வீட்டுப் பிரார்த்தனை (3) கூட்டுப்பிராத்தனை என மூவகைப்பட்டிருந்தது. குடும்பப் பிரார்த்தனை இராப் போசனத்திற்கு முன் குடும்ப உறுப்பினர்கள் நாளாந்தம் செய்வது, வீட்டுப் பிரார்த்தனை என்பது. 15-20 வீடுகள் ஒன்று சேர்ந்து வாரத்துக்கு ஒரு முறை நடத்துவது கூட்டுப் பிரார்த்தனை, வெள்ளிக்கிழமைதோறும் கோயில்களில் நிகழ்த்துவது. மேலதிக விபரங்களை முத்தையா அவர்கள் எழுதிய இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள் என்ற நூலிற் கண்டறியலாம்.

**இந்து சமயப் பேரவை**

யாழ்ப்பாணம் - இந்து சமயப் பேரவை 1992 ஜனவரி 25 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன் தலைவராக திரு.நா. முத்தையா அவர்களும், செயலாளராக திரு.சி. சக்திகிரீவன் அவர்களும், பொருளாளராகச் சட்டத்தரணி சி. நாகராஜா அவர்களும் தொண்டாற்றுகின்றனர். ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். மகாராஜஸ்ரீ சு.து. சண்முகநாதக் குருக்கள், சிவத்தமிழ்ச் செல்விதங்கம்மா அப்பாக்குட்டி ஆகிய பெரியோர் இப் பேரவையின் காப்பாளர்களாவர். இதன் தலைமைச் செயலகம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அமைந்துள்ளது.

இந்து சமயப் பேரவை மேற்கொண்டு வரும் பணிகளுள், கைதடியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்தைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றமை முகியமானதொன்றாகும். 60 சிறுவர்களைப் பேரவை இப்பொழுது பராமரித்து வருகின்றது. இவர்களிற் பலர் அனாதைக் குழந்தைகள்.

**வீடும் வேண்டா விறல்**

சமய ஞானம் பெற்றவர்கள் பட்டம் பதவிகளை எதிர்பார்த்து பணிகள் புரிவதில்லை. ஆணவப்பேச்சுகள் பேசுவதில்லை. அறியாமைச் சண்டைகள் பிடிப்பதில்லை. போட்டி பொறாமைகளுக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் சமயத்தில் இடமில்லை. அன்பினால் பக்குவப்பட்டவர்கள் வீடு பேறாகிய அந்தப் பதவியைக் கூட எதிர்பாராது இறைவனை ஏத்தும் வைராக்கியம் படைத்தவர்கள்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்பது சேக்கிழார் பெருமான் புராணம் இத்தகைய விறலின் விளங்கும் முத்தையா அவர்களைப் பட்டங்களும் பாராட்டுகளும் தேடி வரவே செய்தன. தன்னலமற்ற சேவையைச் சமுதாயம் எளிதில் இனம் கண்டு கொள்ளும். சமயப்பணிக்குத் தன்னையே அர்ப்பணித்த சுத்த பிரமச்சரியருக்கு நன்றி செலுத்தும் வகையில் பல பாராட்டுக் கூட்டங்களை நடத்தியும் பதினைந்துக்கும் மேற்பட்ட பட்டங்களை வழங்கியும் அன்பர்கள் ஆராதித்திருக்கின்றனர். மணி விழா

ஒன்றை நடத்தியும் மகிழ்ந்திருக்கின்றனர். பட்டங்களுள் "ஆத்மீக வள்ளல்" என்பதும் ஒன்று. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிபிள்ளை அவர்களால் சூட்டப்பட்டது. எனினும், இப்பட்டங்கள் எல்லா வற்றுக்கும் மேலாக முத்தையா அவர்களின் பத்திரிகையின் பெயராகிய ஆத்மஜோதி என்பதனையே அன்பர்கள் அதிகம் அவரது பெயருக்கு முன்னால் பயன்படுத்தி வந்ததன் விளைவாக அதுவே இயல்பான ஒரு பட்டமுமாகிவிட்டது. தமது பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் பிற தொண்டுகளாலும் எத்தனையோ ஆத்மாக்களைச் சிவசம்பந்தப்படுத்தி அறிவாகிய ஒளியேற்றிய முத்தையா அவர்களுக்கு ஆத்மஜோதி என்பதே பொருத்தமானது என்பது தெய்வம் சித்தம் போலும். அது எப்பொழுதோ முடிவான காரியம்.

**காலத்திற்கேற்ற சுவாமி**

ஆத்மஜோதி முத்தையா அவர்கள் சுவாமிப்பட்டம் தரிக்காத, காவியுடை அணியாத ஒரு சுவாமி. காவியுடைய தொடர்பாக நடந்த ஓர் உரையாடலில் அவரது சீடர் திரு. சிவ முத்துலிங்கம் அவர்களுக்கு ஆத்மஜோதி அவர்கள் அளித்த விளக்கம் பின்வருமாறு: காவியுடை அணிந்தால் மக்கள் தங்களிலும் உயர்வான சுவாமி என எண்ணுவார்கள். அத்தகைய எண்ணம் மக்களிலிருந்து என்னை பிரித்துவிடும். மக்களுடன் சேர்ந்து மக்களுக்கு சேவை செய்ய முடியாது. காவியுடை தரித்த சந்நியாசி மக்கள் விடுகளில் தங்கலாகாது. மக்களுடன் உறவாடி மக்களுக்குச் சேவை செய்வதையே மகத்தான சேவையாக, மகேஸ்வரன் சேவையாக யான் கருதுவதால் காவியுடைகளை அணிவதில்லை. யோகர் சுவாமிகள், இராமகிருஷ்ணர் ஆகியோரும் காவியுடைகளை அணியவில்லை. உண்மையான அணி, உயர்வான பணியாகும்.

முத்தையா அவர்களின் மொழி

சமயம், சமூகம் எனும் முத்திறப் பணிகளால் நன்கு பயனடைந்தவர்கள் மலைநாட்டுத் தமிழ் மக்களே எனின் மிகையாகாது. 1939 ஆம் ஆண்டு முதலாக, நாவலப் பிட்டியைக் களமாகக் கொண்டு, மலை நாட்டுத் தமிழர்களுக்கு முக்கியமாகத் தோட்டங்களில் வேலை புரியும் தொழிலாளர்களுக்கு, அவர்களது குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்தல், நீதி நியாயங்களை விளக்குதல், நல்வழிக்கான ஆலோசனைகளை வழங்குதல், கூட்டுப் நல்வழிக்கான ஆலோசனைகளை வழங்குதல், கூட்டுப் பிரார்த்தனைகள் நடத்துதல், திருமுறை ஓதுதல், நற்சிந்தனைப் பேச்சுக்களை நிகழ்த்துதல் முதலாய

தொண்டுகளைச் செய்து அவர்களை ஆன்மீக வாழ்விற்கு இட்டுச் சென்றிருக்கின்றார்.

1940 முதல் நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கத்தின் செயலாளர் பதவியினை ஏற்று, அச்சங்கத்தின் மூலம் இளைஞர்கள் மத்தியில் சகல விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிக்க அயராது உழைத்திருக்கின்றார். இத்தகைய உழைப்பின் கைகண்ட பலனாகத் தோட்டத்துக் கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறை கொண்டு வரப்பட்டது.

அந்தர்யோகப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தியதையும், ஆசிரியர் சங்கத்தின் மூலம் சைவ சமயப்பாட ஆசிரியர்களுக்குச் சமயக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்தமையையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

**சமய இலக்கியம்**

ஆத்மஜோதி பத்திரிகை 1947 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. விளங்க முடியாத பல இந்து சமயத் தத்தவங்களை சாதாரண மக்களும் விளங்கும் வகையில் எளிமையான, இனிமையான மொழியிலான கட்டுரைகளாகவும், கதைகளாகவும் தாமாக எழுதியும் பிற அறிஞர்களைக் கொண்டு எழுதுவித்தும் மக்கள் மத்தியில் சமய அறிவை இப்பத்திரிகைக் மூலம் பரப்ப முத்தையா அவர்கள் பொருட் செலவையும் நோக்காது அமைதியான முறையில் உழைத்ததை அனைவரும் அறிவர், சமய இலக்கிய வளர்ச்சியில் "ஆத்மஜோதி"யின் பங்கு தனியாக ஆராயப்பட வேண்டிய தொன்று.

முத்தையா அவர்கள் எழுதிய நூல்கள் (அகர வரிசையில்) பின்வருமாறு:

01. இந்கூதோனேசியாவில் இரண்டு வருடங்கள்
02. இலங்கையிலே ஓர் இல்லற ஞானி
03. இளைஞர்க்கு ஏற்ற இந்தோனேசியக் கதைகள்
04. ஈழத்துச் சித்தர்கள்
05. ஏழாலை
06. கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்
07. சிவபால யோகேஸ்வரர்
08. தத்துவக் கதைகள்
09. திருமுறைச் செல்வம்
10. திருமுறைக் காட்சி
11. நிழலின் பின்னே மனிதன்
12. பன்னிரு மாத நினைவுகள்
13. மாணவருக்கு ஏற்ற மாண்புறு கதைகள்
14. முப்பெருஞ் சித்தர்

இவற்றுள் தத்துவக் கதைகள், ஏழாலை, ஈழத்துச் சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஆகியவை இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்களாகும்.

**அவையத்தறிஞர்**

முத்தையா அவர்கள் சர்வதேச ரீதியில் நடைபெற்ற பல சமய மகாநாடுகளிற் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கி, ஈழத்து ஆறுமுகநாவலர் பரம்பரையினரின் அறிவுத் திறத்துக்குச் சான்றாக விளங்கி வருகின்றார்.

1954 ஆம் ஆண்டு வினோபாவே புத்தகாயாவில் நடத்திய சர்வவோதய மாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாகச் சென்றிருக்கின்றார். கங்கைக்கரையில் உள்ள புத்தகாயா பட்டினம் பத்தபிரான் ஞானம் பெற்ற புண்ணியதலமாகும்.

1979 ஆம் ஆண்டு மகான் சங்கராச்சாரியர் நடத்திய அகில உலக இந்து சமய மகாநாட்டில் பங்கு பற்றிய இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைவராக முத்தையா அவர்கள் சென்றார்கள். இதே மகாநாடு 1980ல் மலேசியாவில் நடைபெற்ற போதும் அதிற் கலந்து கொண்ட இலங்கை அறிஞர் குழுவுக்கும் இவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இம் மகாநாட்டில் பசுவதையை நிறுத்தும் தீர்மானத்தை முன் வைத்து முத்தையா அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். 1994 ஆம் ஆண்டில் கனடாவில் நடைபெற்ற அனைத்துலகச் சைவ சமய மகாநாட்டிலும் பங்கு பற்றிச் சிறப்புரை நிகழ்த்தியுள்ளார்.

**திருக்கூட்டத்தொடர்**

பிறந்த நாட்டிலே விபுலானந்த அடிகளார். சித்தானைக்குட்டி சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற மெய்ஞ்ஞானிகளுடன் இணங்கியிருந்த தன்மையினால் மனப்பக்குவமும் சிவ வைராக்கியமும் பெற்ற முத்தையா அவர்கள், தனிப்பட்ட யாத்திரைகளாலும் சர்வதேச் மாநாடுகளிற் கலந்து கொண்ட வகையிலும் கிடைக்கப் பெற்ற பல மகான்களின் தரிசனங்களால் மகாத்மா நிலையை எய்தியிருப்பது அவர்களது பணிகளாலும் தோற்றத்தாலும் வெளிப்படையாகத தெரியக்கூடியதாக இருக்கின்றது.

1945ல் பகவான் ரமணமகரிஷியினதும் 1948ல் பகவான் அரவிந்தரினதும் தரிசனங்கள் கிடைத்தமையை

என்றும் பக்திப்பரவசத்துடன் முத்தையா அவர்கள் நினைவு கூறுவார். சுவாமி சுத்தானந்த பாரதியார். இராமதாஸ் சுவாமிகள். அன்னை கிருஷ்ணாபாய், சுவாமி சிவானந்தர் ஆகியோரின் தரிசனங்களும் இவருக்குக் கிடைத்திருக்கின்றன. பித்துக்குளி முருகதாஸ் அவர்களின் நட்புறவும் இவருக்கு உண்டு.

1955 ஆம் ஆண்டில் இவர் மேற்கொண்ட இமயமலை யாத்திரையின் போதும், கேதாரநாத் (பாண்டவர்கள் பூசித்த சிவலிங்கம் உள்ள தலம்). பத்திரிநாத் (கண்ணபிரான் தலம்). துங்கநாத் (இராவணன் பூசித்த ஹரிகரலிங்கம் உள்ள தலம்) ஆகிய திருவிடங்களில் பல சித்தர்களினதும் முனிவர்களினதும் தரிசனங்களைப் பெற்றுச் சிறப்பெய்தினர்.

1967 ல் முத்தையா அவர்களுக்கு ஒரு கட்டளை கிடைத்தது. அது புட்டாபத்தியில் வைத்து ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்களால் கொடுக்கப்பட்டது. பொதுவாகத் தரிசனத்தால் ஆசீர்வதிக்கும் சாயி பாபா முத்தையா அவர்களுடன் பேச்சுக் கொடுத்தது பெரிய பேறாகும். கட்டளை இது. "தற்பொழுது மக்கள் மத்தியில் சமய நம்பிக்கையும் பத்தியும் குறைந்து வருகின்றன அதனால். இவை பற்றி மக்களுக்கு எழுத்து மூலமும் பேச்சு மூலமும் பிரசாரம் செய்க." இதன் பின் முத்தையா அவர்கள் மேலும் தீவிரமாக ஈடுபடலாயினார்.

**இந்தோனேசியாவில் ஏற்றிய தீபம்**

1980 ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற அகில உலக இந்து சமய மகாநாட்டில் முத்தையா அவர்கள் கலந்துகொள்ளச் சென்றபோது அங்கு வருகை தந்திருந்த இந்தோனேசியப் பிரதிநிதிகள் அவரை இந்தோனேசியாவிற்கு அழைத்திருந்தனர். அதனைத் தொடர்ந்து முத்தையா அவர்களின் சமயப் பணிகள் அங்கும் தொடரலாயின.

# தன்னைத்தான் அறிந்து கொள்க

(சுவாமி சிவானந்தர் ரிஷிகேசம்)

தேடி அலைகின்றவனே! எதைத் தேடுகின்றாய் என்பதை அறிந்துகொண்டு தேடு. நீ இங்கு பின்பற்றிச் செல்வது நீ உண்மையாக வேண்டுவதை,கொடுக்கத் தவறுகின்ற தென்பதும் கானல் நீர் போல் பின்நோக்கி போகின்றதென்பதும் உனக்குத் தெரிய வில்லையா? இவ்வுலகத்தைச் சார்ந்த எதுவும் உனக்கு மேன்மையான சந்தோஷத்தையும், நித்தியமான சுகத்தையும், கலப்பற்ற ஆனந்தத்தையும் தரக்கூடியதல்ல. இளமை மாலையில் மலரும் புஷ்பத்தைப் போல் வாடும். வலிமை சிதறிய மேகத்தைப்போல் மறையும். தேக அழகு குரூர மரணத்திற்குச் சீக்கிரமாக இடமளிக்கும்.

உன்னுடைய இன்ப ஊற்றுக்கள் ஏளனம் செய்கின்றன. ஏனென்றால் நீ தவறாக துன்பத்தை இன்பமாகவும், இரவைப் பகலாகவும், கானலை நீராகவும், கருதிவிட்டாய். உன்னுடைய வேட்கையின் மெய்யான நோக்கம், நீ நாடும் உண்மைப் பொருள். எது இல்லாமல் நீ நிம்மதியாயிருக்க முடிய வில்லையோ அந்த பொக்கிஷம், இங்கு எதற்காக உன் வாழ்க்கையை நடத்தி வருகின்றாயோ அந்த ஒரு குறிக்கோள் அகத்தேயுள்ள கடவுட்தத்துவத்தின் அழியா ஆனந்தத்தை அடைதலாகும்.

உன் வாழ்க்கையை எங்கும் நிறைந்திருக்கும் நிரந்தரமான பொருள் அதாவது ஆத்மா என்று நிலைபெறச் செய். வேறு எல்லாப் பேச்சையும் நிறுத்து. வேறு எவ் வேலைகளையும் விடு. ஆதியும் அந்தமுமில்லா அளவிட முடியாத பரம் பொருளின் கம்பீரமான வாயிற் கதவை திறக்கும் சிந்தனையைத்தவிர மற்ற யாவற்றையும் விட்டு நீ விலகிக் கொள். உண்மை யாகவும் பொறுமையுடனும் இரு. உன்னால் உண்மையாகத் தேடப்படும் நிலை பெற்ற பொருளை நீ சென்றடைவாய்.

வேலை செய், பணி செய், அன்புசெய், கொடு, ஏனென்றால் நீ காலத்தால் கொள்ளப் படாததும், யமனால் கவர்ந்து செல்லப்படாததும், மாறுதலாலும், நிலை பெறாமை யாலும் அசைக்கப்படாததுமான ஒன்று எங்குளது என்று அறியவேட்கை யுடையவனாயி ருக்கிறாய். கோரோஜனையின் சுகந்தத்தை அனுபவிக்க ஓடும் கவரிமான் நீ. நிலை பெற்ற பொருள் உனக்கு வெளியே தூரத்தில் இருக்கின்றது என்னும் எண்ணம் உன்னை ஏமாற்றுகிறது. புத்தியின் கதவை மூடு. இந்திரியங்களின் சாளரங்களை அடைத்துவிடு. இருதய உள்ளிற்குச் செல். நிர்வானத்தின் தூங்கா தூக்கத்தை அனுபவி. நீ ஆசி பெற்றவன். உன் ஒரே கடமை கடவுளை அடைவதுதான். உன் உள்ளும் மற்று எங்குமுள்ள ஆத்மாவை அடைவதுவே உனக்கு வேறு கடமைகிடையாது. இக்கடமையை நிறைவேற்ற நீ பிறந்திருக் கிறாய். மற்றெல்லாக் கடமைகளும் இக்கடமையில் அடங்கும்; இக்கடமை இல்லையென் றால் மற்றவையாவும் குழந்தையின் விளையாட்டே. இதை ஞாபகத்தில்வை.

வாழ்வின் இவ்வுன்னதமான குறிக்கோளிற்குகந்த வாழ்க்கையை நடத்து. ஆத்மா ஒன்றே உளது. ஆகவே எல்லோரிடத்தும் சமமான அன்புபாராட்டு. ஆத்மா ஒன்றே உளது; ஆகவே சுயநலம் கருதாது யாவர்க்கும் பணிசெய். ஆத்மா ஒன்றே உளது ஆகவே இவ்வுண்மைக்கு விரோதமாக உள்ள அளவுக்கு மீறிய இந்திரியானுபவங்களையும் காமத்தையும், லோபத்தையும், கோபத்தையும் தணித்துக் கொள். ஆத்மா ஒன்றே உள்ளது; இவ்வுண்மையை நிராகரிக்கும் பெயர், புகழ் அதிகாரம், செல்வம் ஆகிய இவை மேற் கொண்ட ஆசைகளிலிருந்தும். ஆவல்களிலிருந்தும் விலகிக்கொள். அகண்டாகார ஆத்மாவை தியானம் செய்.

உங்கள் எல்லோருக்கும் இது உண்மையின் ஆக்ஞை பூரண அனுபவத்தின் ஆழத்திலிருந்து ஊற்றெடுக்கும் ஆக்ஞை. நிரந்தரமான மதிப்புள்ள போதனைகளைப் பின்பற்றி வருபவராலும் தெய்வீக வாழ்க்கையை நடத்தி வருகின்றவராலும் இவ் ஆக்ஞை கேட்கப்பட்டுள்ளது. பண்டைய ஞானிகளதும், ரிஷிகளதும், அறைகூவலை மறுபடியும் கவனி. மிருகங்களைப் போல் நடவாதே; ஏனென்றால் தெய்வீகம் உனது பிறப்புரிமை. அவ்வழியாத் தனிப்பொருளின் அன்பில் உருகிவிடுங்கள். அப்பெருமுடிவின் அத்யாவசிய சாதனங்களாகிய சத்துவகட்டுப் பாட்டுடன் கூடிய வாழ்க்கையை நடத்துங்கள்.

**பெரு நன்றிக்குரியவர்கள்**

ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் தியான மணிமண்டபம் அமைக்க காணி நன்கொடையாக வழங்கியவர்கள்

**திரு. சிவஜோதி சிவபாதம்**

**திரு. திருமதி சுந்தரலிங்கம் சந்திரதேவி**

**ஞாபகார்த்த சிலைக்கு மட்டும் உதவி வழங்கியவர்கள்**

**கனடா இந்து சமயபேரவை ஊடாக ஆத்மஜோதியின் சீடர்கள்**



**கட்டிட ஒருங்கிணைப்பாளர் ஒப்பந்தக்காரர்**
**ஊரெழு கிழக்கைக் சேர்ந்த உயர்திரு.சண்முகநாதன் அவர்கள்**

**ஞாபகார்த்த சிலை அமைப்பு அளவெட்டியை சேர்ந்த சிற்பக்கலைஞர் திருவாளர் வை.சுப்பிரமணியம்[றமணி] அவர்கள்.**

# வாழ்வளிக்கும் மந்திரம்

தனக்கு வந்திருக்கும் நோய் மிகக் கொடுமையானது என்றும் அது க்ஷயரோகம் என்றும் அதைக்குறித்த விவரங்கள் அனைத்தையும் ஒரு நபர் குருதேவர் சிவானந்த மகராஜிடம் சொல்லிக் கொண்டிருந்தார். குருதேவர் அதைமிகக் கவனமாகக் கேட்டார்.

"இப்பொழுது இருமலோ காய்ச்சலோ கிடையாது. உடம்பு மிகவும் பலவீனமாக இருக்கிறது. நான் சாதாரணமாக இருப்பதாக உணர்கிறேன்" என்றார் அந்த நபர்.

"இப்பொழுது உங்களுக்கு வியாதி குணமாகி விட்டது. கொஞ்சம் கற்பனைப் பலவீனத்தைத் தவிர வேறு கவலைப்படத் தக்கது ஒன்றும் கிடையாது. கொஞ்சம் ஆழ்ந்த பிராணாயாமம் செய்யுங்கள் என்று கூறிய குருதேவர், பிரணாயாமம் எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் செய்து காண்பித்தார். காலையில் சிறிய தூரம் நடக்கச் சொன்னார். நல்ல சத்துணவைச் சாப்பிடச் சொன்னார். "எல்லாவற்றிற்கும் மேலான டானிக் மஹாம்ருத்யுஞ்சய மந்திரம்" என்றார் குருதேவர்.

" ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகத்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வருக மிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷீய மாமிருதாத்."

என்று அந்த மந்திரத்தை ஜபித்துக் காட்டினார். காலையில் பத்துத் தடவையும் மாலையில் பத்துத் தடவையும் இந்த மந்திரத்தை ஜபிக்குமாறு கூறினார். மேலும் இந்த மந்திரம் செய்த அற்புதங்களையும் விளக்கிக் கூறினார்.

"பங்களூரில் ஒரு சுகாதார அதிகாரி இருந்தார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். டாக்டர்கள் கைவிட்டு விட்டனர். எனது அகில இந்திய யாத்திரையின் போது நான் பெங்களூருக்குச் சென்றிருந்தேன், அந்த ஆபீசர் என்னை வந்து பார்த்தார். நான் அவருக்கு இந்த மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை உபதேசம் செய்தேன். அவர் தவறாமல் நாள்தோறும் இதை ஜபித்து வந்தார். நோய் நீங்கிச் சௌக்கியம் அடைந்தார்.

"டெஹ்ரானில் நடந்த ஒரு விமான விபத்தில் ஒருவரைத் தவிர ஏனையோர் அனைவரும் கொல்லப்பட்டனர். இந்த ஒரு நபர் மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருந்தார். அவர் காப்பாற்றப்பட்டார்.

"பலர் தாங்கள் நோயினால் அவதிப்படும் செய்தியை எனக்குத் தெரிவிக்கிறார்கள். நான் நாள்தோறும் மூன்று தடவை அவர்கள் குணமடைய இந்த மந்திரத்தை ஜபம் செய்றேன்" என்றார் குருதேவர்.

வந்தவர் மிகுந்த உற்சாகத்துடன் குருதேவரை வணங்கிச் சென்றார்.



நன்றி - சமயஜோதி

## -அநுபவ முத்துக்கள்-

*அருளோங்கும் அன்பர்களே அமர்ந்து கேளீர்!*

*அல்லாவை ஐந்துமுறை வணங்கீர் நாளும்*

*ஒருவனவன்; அவன் படைத்த உலகோர் எல்லாம்*

*ஓர்குலமென் றன்புடனே ஒன்றி வாழீர்!*

*இருளோங்குஞ் சைத்தானுக் கிடங் கொடாதீர்*

*எப்போதும் இனிதுள்ளம் விழித் திருப்பீர்*

*திருவோங்கும் தொழில் செய்யீர் சிறந்த ஞானச்*

*சீரோங்க வாழ்ந்திடுவீர் இஸ்லாம் சேய்காள்!*

- நபி நாயகம்-

**(யோகி சுத்தானந்தர் தமிழில்.)**

உ
சிவமயம்

*ஏழாலையூர் அத்தியடி விநாயகருக்கும்,*

*ஏழாலை பாதாள ஞான வயிரவ பெருமானுக்கும்*

# சமர்ப்பணம்

ஏழாலையூர் அத்தியடி கணபதியே
இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும்
என்பணியை உன் பணியாய் எடுத்தாண்டு எமைக்காக்க
பொன் வயிற்றுக்கணபதியே போற்றி என போற்றுகிறேன்



ஏழாலையூர் இலந்தை கட்டி ஞானவயிரவரே
வேதத்தத்தின் காவலரே போற்றி
மிளிர்யாக நாயகரே போற்றி
பூதத்தின் முன் முதலேபோற்றி
பிழைபொறுத்துக் காப்பவரே போற்றி போற்றி.



ஆத்மஜோதி தியான மணிமண்டபமும், ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதியின் ஞாபகார்த்த சிலையும் 04-06-2001 ஞாபகார்த்த மலராக வெளியிட்டுள்ளோம். பல பெரியார்களின் வேண்டு கோளுக்கிணங்கி ஏழாலை இலந்த கட்டி பாதாளஞான வயிரவ கோயிலின் அருகில் அமைத்துள்ளோம். ஏழாலையூர் மக்களும், இந்து கலாச்சார அமைச்சரும், பொது ஸ்தாபனங்களும், கனடா, சுவிஸ் மக்களும் உதவி வழங்கியுள்ளார்கள். கனடா இந்து சமய பேரவையுடன் அவரின் அருளாலர்களும், ஞாபகார்த்த சிலைக்கு உரிய பணத்தை வழங்கினார்கள். கட்டிட ஒருங்கிணைப்பாளர் திரு.க. சண்முகநாதனுக்கும், சிலைவடித்த சிற்பக் கலைஞர் திரு. வை. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், காணி வழங்கிய, திரு. சிவ ஜோதி, சிவபாதம் சகோதரர்களுக்கும், திரு.திருமதி. சுந்தரலிங்கம், சந்திராதேவி அவர்கட்கும், மண்டபத்துக்குரிய குத்துவிளக்கு 2 தந்து உதவிய கொழும்பு E.S.P கணேசபிள்ளை தம்பதிகளுக்கும், நிறைகுடம் (Set) செற் தந்து உதவிய அண்ணா தொழிற்சாலை அதிபர் திரு. நடராசா அவர்களுக்கும், தாளங்கள் வழங்கிய திரு. S.K செல் லையா, (கொழும்பு) அவர்கட்கும், சுருதிப் பெட்டி வழங்கிய மயூராபதி கொழும்பு திரு. பொன். வல்லிபுரம் அவர்களுக்கும், இம்மலருக்கும், முன்னைய மலருக்கும் ஆசியுரை, அருள் உரைக் கட்டுரைகள் தந்து உதவிய திரு. சண்முகவடிவேல் அவர்களுக்கும், கொழும்பு, யாழ்ப்பாணம், சாவகச்சேரியில் வசிக்கும் வர்த்தக பெருந்தகைகளுக்கும், விளம்பரம் தந்துதவியவர்களுக்கும் என்னுடன் நின்று தொண்டு செய்தவர்கள், என்னுடன் இன்னும் செய்யபோகிறவர்களுக்கும், மணிமண்டபத்திற்கு நிதி வழங்கியவர்களுக்கும் வழங்கப் போகின்றவர்களுக்கும் திரு. த. தர்மலிங்கம் J.P. அவர்கட்கும், ஏழாலை இலந்தை கட்டிட பாதாள ஞான வயிரவ தேவஸ்தான சபையினருக்கும், கோயில் சிவாச்சாரியார் கண்ணன் ஐயா அவர்கட்கும், மற்றும் ஏழாலை வர்த்தக நண்பர்களுக்கும் உதயன் பத்திரிகையில் வெளியிட உதவிய அன்பர்களுக்கும், இந்த மலரை வெளியிட ஒழுங்குபடுத்தி அழகாக அச்சடித்து தந்துதவிய **கொழும்பு நியூ கார்த்திகேயன்** அச்சகத்தினருக்கும், ஒப்புநோக்கிய வைத்திய கலாநிதி து. புவிராசாவுக்கும் எமது உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நா. முருகையா*
*பொருளாளர்*
*ஆத்மஜோதி தியான*
*மணிமண்டப சபை*

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

# றூபா பன்முக வர்த்தகம்

**104A, ஸரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

சகல விதமான பாவனைப் பொருட்களையும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

## RUPA VERSATILE TRADER

104A, Stanley Road,
Jaffna.

Tele :- 021-2479

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

# சிறி விக்கினேஸ்வரா களஞ்சியம்

148, கண்டி வீதி,
சாவகச்சேரி.

தொலைபேசி இல.
070-212257

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

# வீ.எம்.கே. ஜுவல்லர்ஸ்

**கண்டி வீதி**
**சாவகச்சேரி,**

**தொலைபேசிஎண்:**
**021-2211, 070 -212244,**
**070 -212289**

**உன்னத கலைநயம் மிக்க தங்க நகைகளை உங்கள் எழில்மிகு தோற்றத்திற்கேற்ப அதி நவீன மோஸ்தர்களில் சுத்தமான ௨௨ கரட் தங்கத்தில் செய்து கொள்ள நம்பிக்கையான இடம்**

# V.M.K.JEWELLERS

Kandy Road Chavakacheri




**ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்**

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

# இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

## E.S.Perampalam & Co.

லோட்டஸ் மிதி வண்டி டயர் ரியுப்கள்,
C.I.C. பெயின்ட் விநியோகஸ்தர்கள்



பொது வியாபாரிகள் தரகு முகவர்கள்
மற்றும் மிதி வண்டி உதிரிப்பாகங்கள்,
பிலிம்ரோல்,ரேடியோ, வீடியோ கசட், பள்ளி பொருட்கள் ஆகியன
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**
50.52 & 54. **கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்**
**தொலைபேசி** : 2368

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

# GANESH TEXTILES

**(Private) Limited**

**கணேஷ் டெக்ஸ்டைல்ஸ்**

## Wholesale & Retail Dealers in Textiles

81-83 Main Street, Colombo-11.
Tel: 325128, 343078

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

# OCEANICK IMPEX

Authorised Sole Agents for KIBS Products in Sri Lanka. Importers & Exporters of Textiles and Fancy Items.

192, Main Street
Colombo-11,
Sri Lanka.

Tel: 336720, 327168
Wholesale: 384131
Fax: 326961

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

- பாடசாலைகளுக்கான விஞ்ஞான உபகரணங்கள்
- விளையாட்டுக்கான வெற்றிக்கிண்ணம்
  வெற்றிக்கேடயம்
- குளோபல் பப்ளிக்கேசன் வெயீடு
  -சகல வகுப்புகளுக்கான புத்தங்கள்
- அலுமினியம், பித்தளை , எவர்சில்வர், எனாமல்,
  பிளாஸ்ரிக், வீட்டுப்பாவனைப் பொருட்கள் கோயில் சாமான்கள்
  மொத்தமாகவும் சில்லறையாகவும்
  பெற்றுக்கொள்ளலாம்

**சிவன் மாளிகை லிமிட்டட்**

**166 (கே . கே . எஸ், வீதி யாழ்ப்பாணம்)**

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

# ELAVARASI

## TEXTILE

**இளவரசி**

**ரெக்ஸ்ரைல்**

**Dealers In Textile**
**Specialist in Wedding Sarees**

57,New Market, Jaffna,
Tel :- 021-2503

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

**AMBIHA**

**Fancy Emporium**

Dealers in: Costume, Jewellery,
Cosmetics, Threads, Baby Needs and Fancy Goods Etc.,

**216 C, Main Street,**
**Colombo-11.**
Tel: 421759

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி
மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகிறோம்

**Sri Ganthimatti Gold House (Pvt) Limited**

Guaranteed Soverign Gold

**ஸ்ரீ காந்திமதி கோல்ட் ஹவுஸ் [பிறைவேட் ] லிமிடட்**

SEA STREET - COLOMBO-11
Telephone: 324541, 338828

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால் தியான மணி மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்


# POOBALASINGHAM BOOK DEPOT

Importers, Exporters, Sellers & Publishers of Books Stationers and News Agents



**Branchs;**
**309A-2/3, Galle Road**
**Wellawatta, Colombo-06**
**Tel :- 074-515775**
**4A,Hospital Road**
**Bus Stand,Jaffna**

**Trust Complex**
**340, 352, Sea Street,**
**Colombo -11**
**Tel;- 422321,**
**Fax : 337313**
**E-mail ; pbdho@sltnet.lk**


யாழ்ப்பாணம்
மல்லாகம் சந்தி
காங்கேசன்துறை
ஏழாலை இழந்தகட்டி
ஞானவயிரவதேவஸ்தானம்
ஆத்மஜோதி தியானமணி மண்டபம்
அறநெறிப் பாடசாலை
புன்னாலைக்கட்டுவன் வடக்கு
ஏழாலை தபால் நிலையம்
ஏழாலை பிரதேச சபை
மல்லாகம்
யாழ்ப்பாணம்
வ.பு.க சந்தி
பலாலி விமானநிலைய

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெயரால்
தியான மணி மண்டபமும் உருவச்சிலையும் அமைத்து திறப்பு விழா
நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்

New Karthikeyan [Pvt] Ltd.

PRINTERS, PUBLISHERS
TYPESETTERS & PLATE MAKERS

KEN Advertisers

*No. 11A .Bathiya Mw. Kalubowila*
*Tel:- 077-356036, 728801, 071-290427*